# புத்தூர் கலைமதி சனசமூக நிலைய

# 10வது ஆண்டு நிறைவு விழா

080.8
PUT.

## சிறப்பு மலர்

12-07-1984

University of Jaffna
080.8
PUT
249722(AR; AR)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமதி சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு விழாவிற்கு
எமது வாழ்த்துக்கள்

# கிருஷ்ணா டிங்கர் கராஜ்

கார்கள்

லொறிகள்


வான்கள்

மற்றும் இதர வாகனங்களுக்கு
குறுகிய காலத்தில் சிறந்த முறையில்
டிங்கர் வேலைகள் செய்து கொடுக்கப்படும்

கிருஷ்ணா டிங்கர் கராஜ்.
நீர்வேலிச் சந்தி — நீர்வேலி

உரிமையாளர்: நா. சின்னத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



University of Jaffna
249722
Library

# கலைமதி

## சனசமூக நிலையத்தின் எழில்மிகு தோற்றம்

1974 — 1984

249722

249722

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

**ப**ழந்தமிழ் இலக்கியத்திலும், தற்காலத் தமிழ இலக்கியப் போக்கிலும் தனது கூரிய திறனாய்வுத் திறத்தால் வர்க்க வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டி எப்பொழுதும் உழைக்கும் வர்க்கத்தின் பக்கத்தில் தன்னை நிலை நிறுத்தி வாழ்ந்து மறைந்த எமது பேரன்பிற்குரிய

பேராசிரியர்

# க. கைலாசபதி அவர்களுக்கு

## இச் சிறப்பு மலர்

# சமர்ப்பணம்

University of Jaffna
249722
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12-7-1984

# 10வது ஆண்டு சிறப்பு மலர்

வெளியீடு:
கலைமதி சனசமூக நிலையம்,
கலைமதி வீதி,
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

அச்சுப்பதிப்பு:
யாழ்ப்பாண அச்சகம்,
407, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

## பிராந்திய உள்ளூராட்சி
## உதவி ஆணையாளர்
## யாழ்ப்பாணம்,

சமூக நலம்பாட்டிற்கு அளப்பரிய தொண்டாற்றி வரும் கலைமதி சனசமூக நிலையத்தின் அரிய சேவை கண்டு நான் மிகவும் அகமகிழ்வு அடைகின்றேன். இந்நிலையம் அறிவு வளர்ச்சிக்கும், ஆன்ம வளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் ஏற்ற பல தொண்டுகளை செய்து வருவது நாமறிந்த உண்மை, புத்தூர் அலுவலகப் பகுதியில் நல்ல முறையில் இயங்கும் சனசமூக நிலையங்களின் மணிமகுடம் என்றால் அது மிகையாகாது. மக்களுக்கு மகத்தான சேவையாற்றியதன் மூலம் முழு மக்களின் ஆதரவுடன் இயங்கும் இச் சனசமூகநிலையம் மென்மேலும் மக்களுக்கு தன்னாலான முழுச் சேவையையும் ஆற்றி உன்னத சமுதாயம் ஒன்றை உருவாக்குவதில் வெற்றிவாகை சூட எனது நல்லாசிகள்

பி. உ. உ. ஆணையாளர்
யாழ்ப்பாணம்

## உதவி அரசாங்க அதிபர்,
## கோப்பாய்

புத்தூர் மேற்கில் இயங்கிவரும் கலைமதி சனசமூகநிலையத்தின் செயற்பாடுகள் பற்றி நன்கு அறிவேன். இந்நிலையம் 10வதுஆண்டு நிறைவுவிழாவை கொண்டாட ஒழுங்கு செய்துள்ளது. இந்நிலையத்தார் வேம்பிராய் கிராமத்தில் வசிக்கும் மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தீவிர முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள் பின்தங்கிய கிராமங்களுக்கு இந்நிலையத்தாரின் சேவை ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது இதன் நிர்வாகமும் நன்றாக இயங்கி வருகின்றது.

இத் தருணத்தில் என்னுடைய பாராட்டுகளை தெரிவிப்பதோடு இந்நிலையம் மென்மேலும் வளர்ந்து சமூகசேவையில் ஈடுபடுவதற்கு துணைபுரியும்படி இறைவனை வேண்டுகின்றேன்.

**கு. கிட்ணர்**
உதவி அரசாங்க அதிபர்
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## திரு. கே. ஏ. சுப்பிரமணியம் அவர்கள்
(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) )

புத்தூர் கிராமம் தமிழர் வரலாற்றோடு சம்பந்தமுடைய ஒரு கிராமமாகும். அத்தகைய கிராமத்தின் ஒரு பகுதியைச் சேர்ந்த வேம்பிராய் கலைமதி சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு நிறைவு விழாவை எங்கள் கட்சியின் சார்பிலும், எனது சார்பிலும் வாழ்த்துகின்றேன். முற்றிலும் உழைப்பாளி மக்களைத் தன்னகத்தே கொண்டு தொடர்ந்து பத்து ஆண்டுகள் சிறப்புற சேவையாற்றி வருவதைக்கண்டு உளம் பூரிப்படைகிறேன். இப்பகுதியில் எமது கட்சியின் இளைஞர்கள் கட்சி அல்லாத இளைஞர்களோடும், ஏனைய மக்களோடும் இணைந்து மக்களுக்கு ஆற்றிவரும்அளப்பரிய சேவை இது போன்ற பின்தங்கிய கிராமங்களுக்கும், சனசமூக நிலையங்களுக்கும் இளைஞர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக அமையும் என நம்புகிறேன்.

நிலையத்தின் 10-வது ஆண்டு விழாச் சிறப்புறவும், தொடர்ந்து மக்களுக்கான சேவையைத் தொடரவும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள். நன்றி

தோழமையுடன்
**கே. ஏ. சுப்பிரமணியம்**
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்து ஆண்டுகளைத்

# திரும்பிப் பார்க்கின்றோம்

எமது சனசமூக நிலையம் பத்து ஆண்டு களைப் பூர்த்தி செய்து கொள்கிறது. நமது கிராமத்தின் பல்லாண்டு கால வரலாற்றில் பத்து ஆண்டுகள் கணப்பொழுதுடன் கணக்கிடக் கூடிய காலம் மட்டுமே. இப் பத்து ஆண்டுகளில் நம் சனசமூக நிலையம் சாதித்துக்கொண்டவை எமது கிராம மக்களின் வாழ்வில் புதியதிருப்பு முனைகளை ஏற்படுத்திய திறவுகோல்கள் எனலாம்.

நமது கிராமம் நிலமற்ற-கூலி உழைப்பாளர்களான மக்களைக் கொண்ட பின்தங்கிய கிராமமாகும். சமுதாயத்தின் சகல துறைகளாலும் புறக்கணிக்கப்பட்டு, சாதி அடக்குமுறையின் கொடூரத்தால் அமுக்கப்பட்டு, நாகரீக மனிதர்கள் என்று தங்களைத் தாங்களே பாவனைசெய்யும் சிலரின் முகச் சுழிப்பைப் பெற்றுக்கொண்ட கிராமம் என்பதையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

பல்லாண்டு காலமாகப் புறக்கணிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்துவந்த புத்தூர் வேம்பிராய் கிராமமக்களாகிய எம் மக்கள் மத்தியில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு எமக்கு ஒரு சனசமூக நிலையம் வேண்டும் என்ற எண்ணக்கருத்து எழுந்தது. 1973ம் ஆண்டின் பிற்பகுதியில் சிறு கொட்டில் வடிவில் ஆரம்பித்த கலைமதி சனசமூக நிலையம் 1974ம் ஆண்டின் ஆரம்பத்தில் கட்டிடமாக மாற்றம்பெற்றது. இன்று கம்பீரமாகக் காட்சிகொடுக்கும் எமது நிலையத்தின் ஒவ்வொரு கல்லும், மண்ணும் எமது கிராம மக்களின் ஐக்கியத்தை அவர்களது உடல், பொருள், உதவிகளை எடுத்துக்கூறும். சமூக உணர்வும், பின்தங்கிய நிலையை மாற்ற வேண்டும் என்று சதா விரும்பி அதற்காகத் தமது சேவையை அளித்த ஆரம்ப கால நிர்வாகிகளின் துணிவும், விடா முயற்சியும் அவற்றுக்கு சகல வித ஒத்துழைப்பையும் ஆதரவையும் கொடுத்த எமது கிராம மக்களின் பொது உணர்வும் இன்று கிராமத்தின் மத்தியில் கலைமதி சனசமூக நிலையம் பெருமையுடன் எழுந்து நிற்கக் காரணமாயின.

1974ல் சனசமூக நிலையக் கட்டிடத்தை ஆரம்பித்தபோது நிலச் சொந்தக் காரர்களின் நெருக்குதல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. மக்கள் ஒன்றுபட்டு அந்த நெருக்கடியைத் தாண்டியபோது கட்டிடச் செலவுக்கான பொருளாதாரம் எமக்குச் சவால் விட்டது. உறுதியான உடல் உழைப்பாளர்களான எமது மக்கள் அந்தச் சவாலையும் ஏற்றனர். தங்களாலான நிதி உதவியையும், சரீர உதவிகளையும் தாராளமாகச் செய்தனர். ஒரு தாய் தனது காதுகளில் இருந்த தோடுகளைக் கழற்றிக் கொடுத்து சனசமூக நிலையத்தின் உருவாக்கத்திற்கு உதவிய சம்பவம் எமது மக்களின் பொது உணர்வுக்கு ஒரு உதாரணமாகும். இன்னும் சில நிர்வாகிகள் தாம் சேகரித்த சிறிதளவு சொந்தப் பணத்தையும் கூட சுயநல நோக்கின்றி நிலையத்திற்கு கொடுத்துதவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு உருவாகிய எமது நிலையம் உரிய முறைப்படி அரசாங்கப் பதிவை நாடியபோது அது தட்டிக்கழிக்கப்பட்டது. 1977ம் ஆண்டுவரை எமது பதிவுக்கான விண்ணப்பம் ஏதாவது ஒரு காரணம் கூறி நிராகரிக்கப்பட்டே வந்தது. இதற்கு ஒரே காரணம் சாதி அகம்பாவமேதான். எமது நிர்வாகத்தின் மக்கள் ஆதரவுடனான தொடர் முயற்சியால் 1977ல் பதிவுபெற்ற போதிலும் அதற்குரிய உதவிப்பணத்தை சிலவருடங்கள் முன்பாகவே பெற முடிந்தது.

நமது சனசமூக நிலையத்தின் ஆரம்பத்துடனேயே கலைமதி விளையாட்டுக் கழகத்தையும் ஆரம்பித்து கரப்பந்தாட்டத்தை சிறந்தமுறையில் கற்றுக்கொண்டு போட்டிகளிலும் பங்குபற்றி வடபகுதியில் உள்ள தரமான விளையாட்டுக் கழகங்களில் ஒன்று என்ற நிலையையும் எய்திஞேம். விளையாட்டுக் கழகத்தின் மூலம் பல பகுதிகளையும் சேர்ந்த மக்களோடும் - இளைஞர்களோடும் நட்புறவையும், பரஸ்பரம் அனுபவங்களையும் பெறக்கூடயதாக இருந்தது. இவ்வருடம் முதன் முதலாக ஒரு கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை வெற்றிகரமாக எமது நிலையம் நடாத்தியதும் குறிப்பிடத்தக்கது.

1976ல் நிலையத்தில் ஒரு பாலர் பாடசாலையை உருவாக்கி சிறந்தமுறையில் நடாத்த முடிந்தது. அதுவே பின்பு 1980ல் சர்வோதய பாலர் பாடசாலையாக மாற்றப்பட்டு தனியான இடத்தில் அதற்குரிய கட்டிடத்தில் இயங்கிவருகிறது.

1976ல் எமது கிராமத்தின் ஊடாக ஒரு பொதுப்பாதை வேண்டும் என்ற கோரிக்கையையும், நமது மக்களின் நலன் கருதி ப. நோ. கூ. சங்க கிளை வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. இதுபற்றி புத்தூர் கிராமசபை, கூட்டுறவு இலாகா போன்றவற்றிற்கும் பலதடவைகள் விண்ணப்பித்து வேண்டுகோள் விடுத்தோம். ''உங்களுக்கெல்லாம் இவை வேண்டுமோ, கொஞ்சம் மிஞ்சப்பார்க்கிறீர்கள்'' என்ற சாதி அகம்பாவத்தால் நமது கோரிக்கைகள் தூக்கி வீசப்பட்டன.

இருந்தபோதிலும் எமது நிலையமும், அதைச்சுற்றிநின்ற மக்களும் சோர்ந்து விடவில்லை. எங்களுக்கும் காலம் வரும் அதுவும் விரைவிலேயே வரும் என்ற நம்பிக்கையுடன் முன்னேறினர்.

அரசாங்கம் பாடசாலைகளைத் தேசியமயமாக்கி பல ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும், புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் ஒரு தாழ்த்தப்பட்ட பிள்ளை தானும் அனுமதி பெறமுடியாத நிலை இருந்து வந்தது. இந்நிலையை புத்தூரின் ஏனைய பகுதி மக்களுடன் இணைந்து அப்பாடசாலையின் அனுமதிக்கான முயற்சிகளை எமது நிலையம் எடுத்து 1976ல் முதன் முதலாக எமது கிராமத்தில் இருந்து ஒரு மாணவனை அப்பாடசாலையில் கல்வி பெறவைத்தது. இன்று அப்பாடசாலையில் எமது கிராம மாணவர்கள் அதிகளவு கல்வி பெறும் நிலையை உருவாக்கியது எமது சனசமூக நிலையத்தின் முயற்சியேயாகும்.

நீண்டகாலமாக சாதி வெறியர்களினதும், நிலவுடமையாளர்களினதும் தாக்குதல்களுக்கும், வீடு பிடுங்கல்களுக்கும், அடிமை குடிமை வேலைகளுக்கும் நமது மக்கள் பலியாகியே வந்தனர். ஆனல் சனசமூக நிலையத்தின் வளர்ச்சியோடு இந்த நிலையில் மாற்றங்கள் ஏற்படலாயின, அடிமை குடிமை முறையை மறுக்கவும். அடக்குவோரை எதிர்க்கவும் எமது மக்களுக்கு துணிவு ஏற்பட ஆரம்பித்தது. இதனல் எம் மத்தியில் ஐக்கியமும் வலுத்தது.

1978ல் புத்தூர் மேற்கு கிந்தசிட்டி மயானத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் பிணங்களை எரிப்பதற்கு தனி இடம் ஒதுக்கப்பட்டுவந்த முறையை முறியடித்து எல்லாப்பிணங்களும் வேறுபாடின்றி ஒரே இடத்தில் எரிக்கும் நிலையை எமது நிலையம் ஏற்படுத்தியது. அதேபோல் தேனீர்க்கடைகளில் சமத்துவ நிலையை ஏற்படுத்தும் போராட்டத்தில் எமது நிலைய இளைஞர்கள் ஏனையோருடனும் தனியாகவும் கலந்துகொண்டு சமத்துவத்தை நிலைநாட்ட உதவினர். எதிர்காலத்தில் எமது மக்களைச் சமத்துவமாக நடத்தாது புறக்கணிக்கும் எந்த இடத்திலும் உரிமைக்குரல் எழுப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய மக்களோடு நாமும் தோளோடு தோள் சேர்ந்து நிற்போம் என்பது உறுதி.

நமது சனசமூக நிலையத்தின் பத்தாண்டு கால வளர்ச்சியில் கடந்த மூன்றாண்டுகள் மிகவும் குறிப்பிடத்தக்க ஆண்டுகள். இக்காலத்தில் தான் நமது இளைஞர்களுக்கும் மக்களுக்கும் புதிய சிந்தனை வளர்ச்சியும், போராட்ட திடசங்கற்பமும் ஏற்பட்ட காலம் எனலாம். எம்மைச்சுற்றி இருந்த அடிமை விலங்கின் அர்த்தத்தை அறிவு பூர்வமாக உணரக்கூடிய நிலையை நாம் பெற்றோம். இனம், மொழி, பிரதேசம் என்பனவற்றுக்கும் அப்பால் வர்க்க சுரண்டலின் தன்மையைப் புரிந்து கொள்ளும் நிலை நமது இளம் சந்ததிக்கும் மக்களுக்கும் ஏற்பட்டது. எமது மக்களை அடக்கி ஒடுக்கி மிருகத்தனமாக நடத்தி வந்த தமிழ் ஆண்டபரம்பரைகளின் சுயரூபத்தை நாம் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. இப்புதிய சிந்தனைப் பாய்ச்சல் எம்மை முழுத் தேச விடுதலையுடன் உலக விடுதலையுடன் இணைத்தது. நாம் தனித்தவர்கள் அல்லர், எம்மை யாராலும் ஏமாற்றவோ புதியவழிகளில் அடக்கவோ முடியாது என்ற நிலைக்கு எமது இளம் சந்ததி இன்று வளர்ந்துள்ளது.

அன்று 76ல் நாம் முன்வைத்த பொதுப்பாதைக்கான கோரிக்கை 83ல் நிறைவேற்றப்பட்டது. அதை யாரும் எமக்கு சமாதானமாகத் தந்துதவவில்லை. நமது மக்களின் திடமான போராட்டத்தினாலேயே பொதுப்பாதை திறக்கப்பட்டது. இப் பொதுப்பாதையைத் திறப்பதற்கு எத்தனையோ முயற்சிகளை ஏற்கனவே செய்திருந்தும் அவை பலனளிக்கவில்லை. அரசாங்கப் படிகளுக்கும் நிலவுடமையாளர்களின் வீடுகளுக்கும், பெருமனிதர்-பாராளுமன்ற உறுப்பினர்கள், தேர்தலுக்கு வந்தவர்கள் எல்லோருக்கும் எமக்குள்ள பொதுப்பாதையின் அவசியத்தைச் சுட்டிக் காட்டினோம். எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. எமது கோரிக்கை தட்டிக் கழிக்கப்பட்டதற்கு காரணம் நமது மக்கள் நிலமற்ற - தாழ்த்தப்பட்ட - ஏழை மக்கள் என்பதுதான்.

ஆதலால் உழைக்கும் மக்கள் ஒன்றுபட்டு தமது உரிமைகளை வென்றெடுக்கச் சரியான போராட்டப் பாதையில் அணிவகுத்தால் எந்தப் பிற்போக்கு சக்தியும் முன்னே நிற்க முடியாது என்பதை நிரூபிக்கும் வழியில் பொதுப்பாதையை மக்களே முன்னின்று உருவாக்கினர். கிராமத்தின் ஊடாக கிட்டத்தட்ட ஒரு மைல் நீளம் கொண்ட பாதையை தமது போராட்ட ஐக்கியத்தால் அமைத்தனர். எந்த ஒரு மக்கள் போராட்டமும் சரியான தலைமையை-வழிகாட்டலைப் பெற்றால் அது தோல்வி அடைய முடியாது என்ற உலக உண்மை நமது கிராமத்தில் நடைமுறையாகியது. ஆண்டாண்டு காலமாகப் பொதுப்பாதை இன்றி அவல நிலையில் இருந்த எமது கிராம மக்கள் பொதுப் பாதையைப் பெற்றுக்கொண்டனர்.

சனசமூக நிலையத்தின் மற்றொரு கோரிக்கையான ப. நோ. கூ. ச, கிளை கூட்டுறவுச் சங்க உயர்பீடத்தினால் நிராகரிக்கப்பட்டது. ஆனால் நமது விடா முயற்சியினால் தற்போதைக்கு ஒரு தனியார் கூப்பன் கடையைப் பெறக்கூடியதாக இருந்தது. இது உயர்சாதி வெறிபிடித்தோரின் இடத்தில் எமது மக்கள் காத்து நின்று கையேந்தி, கழிவு அரிசியும்-அளவு குறைந்த பொருட்களையும் பெற்றுவந்த நிலையை மாற்றி அமைத்தது. எமது கிராமத்திற்கு தனியான ப. நோ. கூ. ச. கிளை ஒன்றைப் பெறும் முயற்சிகள் தொடரும்.

நமது கிராமத்தின் சுகாதாரத்திற்கும் நோய்களின் தடுப்புக்கும் தாய் - சேய் நலன் பேணலுக்கும் நிலையம் காலத்திற்குக் காலம் பல முயற்சிகளைச் செய்து வந்துள்ளது. அரசாங்கத்தின் குடும்பநலத்திட்டம் சுகாதாரத் திணைக்களம், பொது ஸ்தாபனங்களின் சுகாதார முயற்சிகள் என்பனவற்றை நமது மக்களுக்கு பயன்பெற வைத்து வந்துள்ளோம்.

அண்மையில் நமது நிலையம் கிராம இளைஞர்களின் கலை ஆர்வத்தைத் தூண்டி நாடகங்கள், மற்றும் கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஊக்குவிக்க முன்வந்து நவயுக நாடக மன்றத்தை உருவாக்கி யுள்ளது. இம் மன்றத்தின் நோக்கம் மக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் புதிய வாழ்வுக்கான பாதையில் சிந் தனைகளைச் சரியான வழிகளில் தூண்டக் கூடிய தரமான நாடகங்களையும் ஏனைய கலை நிகழ்ச்சிகளையும் உருவாக்குவதே யாகும்.

பல புறக்கணிப்புகளுக்கு மத்தியில் எமது பின்தங்கிய மக்களின் வாழ்க்கை மாற்றத்தில் தம்மால் இயன்ற அக்கறை செலுத்திய சில அரசாங்க அதிகாரிகள் இருக்கவே செய்தனர். அவர்களது உதவி கள், ஒத்துழைப்புகளுக்கு நாம் என்றும் நன்றி உடையவர்கள். அதேபோல சில பொது ஸ்தாபனங்கள் எமக்கு உதவிகள் பல புரிந்தன. அவற்றின் பங்களிப்பை நாம் மறந்துவிட முடியாது. இவ்வேளை அத்த கையோர் அனைவருக்கும் எமது நன்றிகள்.

பத்தாவது ஆண்டைச் சிறப்புடன் பூர்த்திசெய்யும் இவ்வேளை எமது நிலையம் அதன் ஆரம்ப கால நிர்வாகிகளையும், வழிகாட்டிகளையும், அதிகளவு சேவைசெய் தவர்களையும் பெயர் குறிப்பிட்டு அவர் களுக்கு தனது உளம் சார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றது. திருவாளர்கள்: பொ. சபாபதி, க. தம்பிமுத்து, வை. கிருஷ்ண பிள்ளை, மா. கணபதிப்பிள்ளை, சி. செல் வம், இ. கதிர்காமநாதன். ஆ. அப்புத் துரை, மா. கனகலிங்கம், ஆ. நல்லையா, ஆகியோர் என்றென்றும் நமது நிலையத்தின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்கள். இவர்களுடன் எமது நிலையத்தின் ஆரம்ப கால வளர்ச்சிக்கு பலவழிகளிலும் உறு துணையாக நின்று வழி காட்டிய அயற் கிராம அன்பரான திடற்புலம் திரு. ச. நாகலிங்கம் அவர்களுக்கு எமது நன்றியும் அன்பும் உரியதாகும்.

ஆண்டபரம்பரைகளின் ஆதிக்க வாழ் வுக்குப் பெயர் பெற்ற பரந்த புத்தூர் கிராமத்தின் ஒரு பகுதியிலே நிலத்தாலும்- சாதியாலும்-தீண்டாமையாலும் வஞ்சிக் கப்பட்ட மக்களாக வாழும் சூழ்நிலையில் தொடர்ந்தும் பத்து ஆண்டுகள் எமது கலைமதி சனசமூகநிலையம் சோதனைகளையும் வேதனைகளையும் தாண்டி தலைநிமிர்ந்து நிற்கின்றது என்றால் அதற்குரிய பெருமை யும் பெறுமதியும் எமது கிராம மக்கள் அனைவருக்குமே உரியதொன்றாகும்.

எனவே எல்லாவற்றுக்கும் மேலான நன்றி, பாராட்டு, மதிப்பு யாவற்றுக்கும் உரியவர்கள் எமது எஜமானர்களான இக் கிக் கிரமத்தின் உழைக்கும் மக்களே யாவர். அந்த மக்களுக்கு தொடர்ந்தும் எமது நிலையத்தின் மூலம் ஆகக் கூடிய சேவையைச் செய்வோம் என்று இப்பத்தா வது ஆண்டு நிறைவுறும் சந்தர்ப்பத்தில் உறுதி கூறிக்கொள்கின்றோம்.

—மலர்க் குழு

**நாம்** பொதுமக்கள் மத்தியில் சென்று, அவர்களிடமிருந்து கற்று, அவர்களுடைய அனுபவங்களைத் தொகுத்து, அவற்றைச் சிறந்த, ஒழுங்கான கோட்பாடுகளாகவும், வழிமுறைகளாகவும் வகுக்கவேண்டும். பின்னர் அக்கோட்பாடுகளையும் வழிமுறை களையும் பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்து, அவற் றைச் செயல்படுத்துமாறு அறைகூவல் விடுக்க வேண்டும். இவ் வாறு அவர்களுடைய பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு, விடுதலை யும் இன்பமும் பெற அவர்களுக்கு உதவ வேண்டும்.

— மாஓ சேதுங் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பு வருட நிர்வாகிகள்



இருப்பவர்கள் இடமிருந்து: பொ. முருகேசு (செயற்குழு) சி. இராஜேந்திரம் (உபசெயலாளர்) ச. சின்னத்துரை (உபதலைவர்) கா. கதிர்காமநாதன் (செயலாளர்) மு. மாணிக்கம் (தலைவர்) ந. செல்வராசா (பொருளாளர்) கா. மகாதேவன் (உபபொருளாளர்) சி. தேவமனோகரன் (செயற்குழு) க. சின்னத்தம்பி (செயற்குழு)

நிற்பவர்கள் மத்தியில் இடமிருந்து வலமாக: சி. தவயோகராசா (விளையாட்டுச் செயலாளர்) சி. நவரத்தினம் (விளையாட்டுத் தலைவர்) சி. செல்வம் (செயற்குழு) ஆ. நல்லையா (போஷகர்) க. மாணிக்கம் (செயற்குழு) சி. கனகலிங்கம் (செயற்குழு) சி. சுந்தரலிங்கம் (செயற்குழு) மேல்வரிசையில் இடமிருந்து வலமாக: செ. பாலசிங்கம் (செயற்குழு) சி. நாகமுத்து (செயற்குழு) சி. மகேந்திரன் (செயற்குழு) கு. துரையன் (செயற்குழு) சி. கந்தசாமி (செயற்குழு) ச. தேவன் (செயற்குழு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
கலைமதி சனசமூக நிலையத்தை வாழ்த்துகின்றோம்

# ராஜமுருகன் டிங்கர் கராஜ்

**கார், லொறி, மினிபஸ் மற்றும்
வாகனங்களுக்கு சிறந்தமுறையில்
டிங்கர் வேலை செய்வதற்கு**

# ராஜமுருகன்
# டிங்கர் கராஜ்

**ஆவரங்கால், - புத்தூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமதி சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு விழாவிற்கு
எமது வாழ்த்துக்கள்

# தேவி - அரிசி மா ஆலை

★

**சிறந்தரக அரிசி வகைகளுக்கும்,**
**அரிசிமா, தவிடு போன்றவற்றைப்**
**பெற்றுக்கொள்வதற்கும்**

**!**

# தேவி - அரிசி மா ஆலை

## அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
கலைமதி சனசமூக நிலையத்தை வாழ்த்துகின்றோம்

ஸ்ரீ கிருஷ்ணா கிறைண்டிங் மில்

நெல் உடைப்பதற்கும்
மா, மிளகாய், சூரக்கன் முதலியன
அரைத்துக் கொள்வதற்கும்
விஜயம் செய்யுங்கள்

ஸ்ரீ கிருஷ்ணா
கிறைண்டிங் மில்
சிறுப்பிட்டி மத்தி, - நீர்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் லொறி மினிபஸ் மற்றும் வாகனங்களுக்கு
நல்ல முறையில் குறைந்த செலவில்
பெயின்டிங் செய்து தருபவர்கள்

# பாலசிங்கம்
# பெயின்டிங் கராஜ்

நிர்வேலி சந்தி, – நிர்வேலி.

---

சகல விதமான

★ காஸ் வெல்டிங்

★ எலெக்றிக் வெல்டிங்

★ நவீன கேற், கிறில்

சகல வாகனங்களின் உதிரிப் பாகங்களும்
ஒட்டிக் கொடுக்கப்படும்

# சிவம் வெல்டேஸ்
# SIVAM WELDERS

370, மணிக்கூட்டு வீதி – யாழ்ப்பாணம்
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய மாற்றத்தில் இளைஞரின் பங்கு

பேராசிரியர் சி. சிவசேகரம்

சமுதாய மாற்றம் வரலாற்றுப் போக்கில் நிகழும் ஒன்று. அது படிப்படியான வளர்ச்சியாகவோ பெரும் தாவுதலாகவோ சூழ்நிலைக்கு ஏற்றபடி நிகழ்கிறது. சமுதாய மாற்றமென்பது மனிதனது உணர்வுபூர்வமான பங்குபற்றலின்றி முற்றிலும் தானாகவே நிகழும் ஒன்றல்ல. அதே சமயம் மனித சமுதாயச் சூழலின் யதார்த்த பூர்வமான சூழ்நிலைகளை மீறி யாரும் ஏற்படுத்தக்கூடிய ஒன்றும் அல்ல. மனித சமுதாயத்தின் வளர்ச்சி அதன் தன்மையையும் அமைப்பையும் ஒட்டி மனிதத் தேவைகள் சமுதாய உறவுகள் என்பனவற்றால் உந்தப்பட்டு நிகழும் ஒன்று. அது என்றைக்குமே ஒருசீரான நேர்கோட்டு வளர்ச்சியல்ல. மனித சமுதாயத்தின் வளர்ச்சி அதன் அமைப்பையும் மேலும் மேலும் சிக்கலானதாக்கியுள்ளது. எனவே அதன் மாற்றங்களிலும் அந்தச் சிக்கலான தன்மை பிரதிபலிக்கவே செய்யும். ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி- அடிப்படையில் அதன் அகக்காரணிகளிலேயே தங்கியுள்ளது. ஆயினும் மாற்றங்களின் போக்கினை அறிவதில் அதற்குப் புறம்பான சூழலையும் சுற்றாடலையும் அவற்றின் தாக்கங்களையும் புறக்கணிக்க முடியாது.

சமுதாயமாற்றங்கள் அதன் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்கை உள்ளடக்கிய அதன் தன்மையாலும் அதே வளர்ச்சிப்போக்கில் ஏற்படுகின்ற பிரச்சனைகட்கு முகங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தங்களாலும் ஏற்படுகின்றன. அதன் வரலாற்று வளர்ச்சியில் உள்ளடங்கிய தவிர்க்கமுடியாத தன்மையை மனிதர்கள் அப்படியே ஏற்றுக்கொண்டு வாளா இருப்பதில்லை. ஏனெனில் சமுதாய வளர்ச்சி பல்வேறு சமுதாய முரண்பாடுகளைத் தன்னகத்தே கொண்டது. இம் முரண்பாடுகளின் விளைவாகவே மாற்றங்கள் ஏற்படுவன. முரண்பாடுகளின் எதிர் மறைகள் எதிரெதிரான நோக்கங்களுடன் செயற்படுகின்றன. எனவே சமுதாய மாற்றம் ஒரு குறிப்பிட்ட திசையில் நிகழும்போது அது தனக்கு உடன்பாடாக அமையாமை காரணமாக முரண்பாட்டின் ஒரு தரப்பு அதை உக்கிரமாக எதிர்க்க முனையும், அதே போன்று வரலாற்று மாற்றம் தனக்குச் சாதகமாக உள்ளது என்ற காரணத்தால் தன் பகையான தரப்பு தானே விழுந்து விடும் என்று மாற்றுத் தரப்பு வாளாவிருப்பதில்லை. அது வரலாற்றைத் துரிதமான மாற்றத்தை நோக்கி உந்த முனையும். இப் போக்குகள் சமுதாய வளர்ச்சியில் எப்போதுமே இருந்தாலும் குறிப்பிட்ட சில சூழல்களில் முரண்பாடுகள் உக்கிரமடைகின்றன. இத்தகைய சூழல்களில் பெரும் சமுதாய எழுச்சிகளும் கிளர்ச்சிகளும் நேருகின்றன. இவ்வாறான மாற்றங்கள் சமுதாய அடிப்படையையே மாற்றியமைக்கும்போது அவை புரட்சிகர மாற்றங்களாகின்றன.

சமுதாய அமைப்பின் வர்க்கத் தன்மை காரணமாகவும் ஆளும் வர்க்கத்தின் சுரண்டல் அடிப்படை காரணமாக வர்க்கங்கட்கிடையிலான பகைமை காரணமாகவும் அடிப்படையான சமுதாய மாற்றங்கள் படிப்படியான வளர்ச்சி மூலம் நிகழ்வதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு போராட்டங்களும் சீர்திருத்தங்களும் சமுதாயத்தில் நிலவும் சீர் கேடுகளைத் திருத்துவதன் மூலம் சமுதாயத்தில் அமைதியை நீடிக்கவும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்கட்குச் சிறு அளவிலாவது நியாயத்தைப் பெற்றுக்கொடுக்கவும் முடியுமே என்றாலும் அடிப்படையான தவறுகளை அதாவது சமுதாய அநீதிகட்கான அடிப்படையை அவற்றால் முற்றாக அகற்ற முடிவதில்லை. அந்த அநீதிகள் மூலம் நன்மை பெறும் சமுதாயப் பிரிவினர் (முக்கியமாக அதன் முன் வரிசைப் பிரதிநிதிகள்) அந்த அடிப்படை அகற்றப்படுவதை விரும்பப்போவதில்லை. எனவே அவர்கள் சமுதாய மாற்றம் தன் வரலாற்றுப்போக்கில் முன்னேறி நிகழ்வதை மறிக்கப் பல வேறு வகைகளில் இயங்குகின்றனர். ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினரும் தம் வர்க்கத் தேவைகளையொட்டி வரலாற்றைத் தம் நலன்களை அனுசரித்து முன் உந்த முனைகின்றனர்.

இச் செயற்பாடுகள் ஒவ்வொருவரும் தனித்தனியே சிந்தித்துத் திட்டமிட்டுச் செய்யும் காரியங்கள் அல்ல. சமுதாய உறவுகள் (முக்கியமாக உற்பத்தி உறவுகள்) ஒவ்வொருவரது செயலிலும் அவரது சமுதாய அடிப்படையினதும் அவர் சார்ந்து நிற்கும் வர்க்க நிலைப்பாட்டினதும் முத்திரையைப் பதித்து விடுகின்றன. சமுதாயத்தில் இயங்குகையில் ஒவ்வொருவரும் ஆற்றும் பங்கு வரலாற்றை உருவாக்கி வளர்த்தெடுக்கும் போக்கிலும் அவரவருடைய செயற்பாட்டின் தன்மையையும் நிர்ணயித்து விடுகிறது. முதலாளி-தொழிலாளி உறவின் தன்மையும் முதலாளி வர்க்கத்தினரதும் தொழிலாளி வர்க்கத்தினரதும் அணுகுமுறைகளும் யாரும் போதிக்காமலேயே சமுதாய நடைமுறை மூலம் ஏற்படுகின்றன.

ஆயினும் முழுமையான சமுதாய உணர்வு முழுமையான சமுதாய ஈடுபாட்டின் மூலமே ஏற்படுகிறது. சமுதாய நடைமுறை மூலமே வர்க்க உணர்வும் சமுதாய மாற்றத்திற்கான வேட்கையும் கூர்மையடைகின்றன. சிக்கலான சமுதாய அமைப்பில் அடிப்படை மாற்றங்களை வேண்டிநிற்கும் போராட்டங்கள் திசை திருப்பப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே உள்ளன. சமுதாய மாற்றங்கள் தனி மனிதர்களால் ஏற்படுவன அல்ல. வரலாற்றுச் சூழல்கள் சில தனிமனிதர்கட்குரிய பங்கினை மிகவும் முக்கியப்படுத்துதற்கு இடமுண்டேயாயினும் அம்மனிதர்களது முக்கியத்துவம் அவர்கள் அந்த வரலாற்றுப் போக்கின் பிரதிநிதியாக அமைய முடிந்ததாலே ஏற்பட்டதேயாம். மாறாக அவர்கள் சமுதாயத்தை வழி நடத்தி மாற்றி அமைத்தனர் என்பது ஒரு தவறான வரலாற்றுக் கண்ணோட்டமாகும்.

சமுதாய மாற்றத்தில் ஒவ்வொரு தனி மனிதருக்கும் பங்கு உண்டு. அதை நாம் நம் ஒவ்வொருவரதும் சமுதாய உணர்வினதும் வர்க்கச் சார்பினதும் நம் பல்வேறு சூழ்நிலைகளது தாக்கங்களினதும் அடிப்படைகளில் செலுத்துகிறோம். சமுதாய மாற்றத்தில் இளைஞர்களது பங்கு என்று குறிப்பிடும்போது இளைஞர்கட்கு ஒரு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. அதை முதலில் தெரிந்து கொண்டால் பின்பு இளைஞர்களது பங்கு பற்றிச் சிந்திப்பது எளிதாக இருக்கும்.

இளைஞர்கள் பொதுவாகவே சமுதாயத்தைப் பற்றி அறியவும் அதில் தங்களது பங்கை உணரவும் தம் விருப்பத்துக்கேற்பத் தம் சமுதாயச் சூழல் அமைய வேண்டும் என விரும்பவும் செய்கின்றனர். அவர்களது இளமையின் அனுபவமின்மையால் சமுதாய நடைமுறை அறிவு போதாமை காரணமான குறைபாடுகள் ஒருபுறமிருக்க மறுபுறம் அதே இளமையின் ஆர்வமும் செயலூக்கமும் அவர்களது பலமாக அமைகின்றன. எதையும் எப்போதும் கேள்விக்கு உட்படுத்தும் இளைஞர்களின் அறிவு வேட்கையும் தம் மனதுக்கு இசையாத எதையுமே எதிர்க்கும் போக்கும், அதிதீவிரமான சில சூழ்நிலைகளில் ஒழியப், பொதுவாகவே சமுதாயத்தில் நாம் ஏற்றுக் கொள்ளப் பழகிவிட்ட கருத் கருத்துக்களை மறுபரிசீலனை செய்யவும் நாம் பழக்கப்பட்டுவிட்ட நடைமுறைகளைக் கேள்விக்குட்படுத்தவும் உதவுகின்றன. பல்வேறு பாரிய சமுதாய மாற்றங்களில் இளைஞர்கள் வகித்த பங்கு மிகப்பெரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் இளைஞர்களது பங்கு என்பது அவர்களைத் தனியே 'இளைஞர்கள்' என்ற முறையில் நோக்குவதால் அறியக்கூடிய ஒன்றல்ல.

ஹேபட் மாக்கூஸே என்பவர் (தன்னை ஒரு நவ மாக்ஸியவாதி என்று நினைத்துக் கொண்டவர்) தொழிலாளிவர்க்கம் பயனற்றுப்போய்விட்டது. இளைஞர்களாலேயே சமுதாயத்தை மாற்றியமைக்க முடியும் என்ற கருத்தை முன்வைத்தார். இவரது கருத்துக்கள் 1968இல் பிரான்ஸில் நடந்த கிளர்ச்சிகளில் முக்கியத்துவம் பெற்றன. இலங்கையில் ஜே. வி. பியினர் 1971 கிளர்ச்சிக்கு முன்னைய காலகட்டத்தில் தொழிலாளர்களை நிராகரித்து இளைஞர்களை முக்கியத்துவப்படுத்தினர். (இன்றும் இப்போக்கு தொடரவே செய்கிறது). இதன் விளைவாக 'இளைஞர்—முதியோர் முரண்பாடு' சில ஜே. வி. பி. யினரால் பெரிதும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. இளைஞர்களை முக்கியத்துவப்படுத்திய இவ்வாறான கிளர்ச்சிகள் (தலைமைகளின் பிறகோளாறுகள் போக) பிரகடனப்படுத்தப்பட்ட தமது நோக்கங்களை அடையத் தவறியது ஏன்?

1965இல் இந்தோனீஸியா, 1970இல் காம்போஜம் போன்ற நாடுகளில் இளைஞர்க்ள் மிகவும் தீவிரமான வலதுசாரி நோக்கங்கட்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர். ஹிற்லர்கூட இளைஞர்களை தனது பாஸிஸ இயக்கத்தின் எஸ். எஸ். இளைஞர் ஸதாபனத்தில் தீவிரமாக ஈடுபடுத்தினன்.

இளைஞர்களது 'முற்போக்கான' கிளர்ச்சிகள் தோல்வியடையலாம் என்பதுடன் அத் தோல்விகள் படுபிற்போக்கு சக்திகட்கு நன்மையளிக்கலாம் என்பது மட்டுமன்றி இளைஞர்கள் பிற்போக்கின் சார்பிலே நேரடியாகவே பயன்படுத்தப்படலாம் என்பதும் நாம் உணரவேண்டிய ஒன்ருகும்.

இளைஞர்களது செயலூக்கமும் உற்சாகமும் தவருன வழியில் திசை திருப்பப்பட முடியும் என்பது பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சமுதாய வளர்ச்சியின் சில காலகட்டங்களில், குறிப்பாகக் குழப்பமான, அரசியல் நெருக்கடியான சூழல்களில் பலமான முற்போக்குப் போராட்ட சக்தியும் இயக்கமும் இல்லாதபோது, இளைஞர்கள், முக்கியமாக, படித்த, நடுத்தரவர்க்க இளைஞர்கள், எளிதாகத் திசை திருப்பப் படுகின்றனர். இனவாதம், மதவெறி, தீவிர தேசியவாதம் போன்றவை அவர்கட்குப் போதையூட்டப் பயன்படுகின்றன. இளைஞர்கள் தெரிந்துகொண்டே பிற்போக்கின் சார்பாகச் செயற்படுகிருர்கள் என்று எண்ணுவது சரியல்ல. ஆனல் குழப்பமான சூழ்நிலையில் எதையாவது செய்யவேண்டும் என்ற மன உந்துதல் காரணமாக எங்கே மிகுதியான செயலூக்கம் தென்படுகிறதோ அங்கே இளைஞர்கள் ஈர்க்கப்படுகின்றனர். குழப்பமான எந்த ஒரு சூழ்நிலையில் நிதானமான, ஆனல் தெளிவும் உறுதியும் கொண்ட, செயற்பாடு தேவையோ அங்கே தீவிரவாதிகளும் சந்தர்ப்பவாதிகளும் இளைஞர்களது பொறுமையின்மையை மூலதனமாக்கிக் கொள்கின்றனர். மனித வரலாற்றின் பாடங்கள் சொந்த நடைமுறைமூலமே பெருமளவும் கற்கப்படுகின்றன. எனவே சில சமயங்களில் இவ்வாறன அனுபவங்கள்கூட இறுதியில் எதிர்மறையான பாடங்களாகப் பயன் தரவே செய்கின்றன.

இளைஞர்களில் சமுதாய உணர்வுடையோர் இளைஞர்களை அதி முக்கியப்படுத்தும் இயக்கங்கள் பற்றி மிகுந்த எச்சரிக்கையாக இருப்பது அவசியம். (இவ்வாறே பெண்கள் தீவிர பெண்ணுரிமைவாதிகள் பற்றியும், தாழ்த்தப்பட்ட சாதியினர் தீவிர சாதி எதிர்ப்புப் பேசும் சில சாதி முரண்பாட்டு வாதிகளைப் பற்றியும் எச்சரிக்கையாயிருப்பது அவசியம்!) இளைஞர்களது சமுதாயப் பணி முக்கியமானது. சமுதாய மாற்றத்தில் அவர்களது போராட்டப் பங்கும் முக்கியமானது. ஆனல் அவர்களது சமுதாய அடிப்படை எல்லாவற்றையும் விட முக்கியமானது. சரியானதொரு முற்போக்கான பாட்டாளி வர்க்க இயக்கத்தால் வழி நடத்தப்படாத எந்தவொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் சக்தியும் தவறாக வழி நடத்தப் படஇடமுண்டு.

பொறுமையாகவும் ஆழமாகவும் கற்பதன் அவசியத்தை இளைஞர்கள் உணர்வது அவசியம். சிந்தனையில் வலிமையற்ற செயலாற்றல் பயனற்றது. சமுதாயத்தை மாற்ற முனையுமுன் அதைச் சரிவர அறிவது அவசியம். தூக்கி எறியவுள்ள சமுதாயத்தின் இடத்தில் எதைக் கொண்டுவர இருக்கின்றோம் என்பதைத் தெரிந்திருப்பது அவசியம் சமுதாயத்தை மாற்ற முனையுமுன் அதை எவ்வாறு மாற்றுவது எனவும் சமுதாயத்தின் பெரும்பான்மையோர் அது பற்றி என்ன நினைக்கின்றனர் என்று தெரிவதும் அவசியம். செயலில் இறங்கிய பிறகும் நம்மைச் சூழவுள்ள சமுதாயம் என்கிற நிஜத்தை இடைக்கிடை கவனித்துப் பார்ப்பதும் அவசியம். எந்தவொரு பயணத்திலும் வேகம் பயனுள்ளது. ஆனல் பாதையே முக்கியமானது. இடரான சூழல்கள் முடிவில் வலிமையான மனிதர்களை வளர்த்தெடுக்கின்றன. தங்கள் சமுதாயப்பார்வையிலும் செயற்பாட்டிலும் சரியாக வழிநடத்தப்படுவதன் மூலம் புதிய சமுதாயம் ஒன்றை ஏற்படுத்துவதிலும் அதனை எதிர்காலத்தில் வழிநடத்துவதிலும் ஒடுக்கப்பட்ட மக்களைச் சார்ந்துநிற்கும் இளைஞர்களது பங்கு அதி முக்கியமானது.

தேசியவாதத்தைப் புனிதமாக்க முயலும் எந்த முயற்சியையும் பாட்டாளி வர்க்கத்தால் ஆதரிக்க முடியாது. இதற்கு மாருக தேசிய வேறுபாடுகளைக் துடைத்தெறிய உதவும் ஒவ்வொன்றையும், தேசியத் தடைகளை நீக்கும் ஒவ்வொரு முயற்சியையும் பாட்டாளி வர்க்கம் ஆதரிக்கிறது. தேசிய இனங்களுக்கிடையில் உள்ள பிணைப்புகளை இன்னும் நெருக்கமடையச் செய்யும் அல்லது தேசங்களை ஒன்றிணைக்கும் போக்குடைய ஒவ்வொரு முயற்சியையும் அது ஆதரிக்கிறது.

— லெனின் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைக்கும் பெண்களும் பெண்கள் இயக்கமும்

✻ *நிவேதிதா*

இன்றைய உலகில் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளும், விவாதங்களும், கருத்துகளும் கவனத்தைக் கவரும் விடயங்களாக வளர்ந்து வருகின்றன. இப்பிரச்சனைகளையும், கருத்துகளையும் எடுத்துக் காட்டுவனவாய் பெண்கள் இயக்கங்கள் அமைந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்தே பெண்கள் இயக்கங்களை காணலாமாயினும் அதிகரித்து வரும் விழிப்புணர்வும் விடுதலையுணர்வும் காரணமாக இவ்வியக்கங்கள் தற்போது அதிகளவில் தோன்றுகின்றன. இவற்றின் சமூக அக்கறையும் செயற்பாடுகளும் தீவிரமாகப் பெருகியும் உள்ளன. இது உலகளாவியதோர் பொதுத்தன்மையாயினும் எமது நாட்டிலும் சமீபகாலத்தில் சிறப்பாகக் கவனிக்கக்கூடிய அம்சமுமாகும்.

இலங்கையின் பெண்கள் இயக்கத்திற்கு காலனித்துவ அரசியல் காலகட்டத்திலிருந்தே ஒரு வரலாறு இருக்கிறது. ஆனல் குறிப்பாக கடந்த சுமார் ஐந்து வருடங்களில் நாட்டின் பல பாகங்களிலும் பெண்கள் இயக்கங்கள் தோன்றுவதும் செயற்படுவதும் அதிகரித்து வருகின்றது. ஏற்கனவே அரசியற் கட்சிகளிலும் தொழிற்சங்கங்களிலும் பெண்கள் பிரிவுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனல் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளில் அதிக கவனம் செலுத்துவதற்கும் அவற்றை சமூகத்துக்கு எடுத்துக்காட்டவும், அவைபற்றிய பொதுசன அபிப்பிராயத்தை எற்படுத்தவும், அவற்றின் தீர்வுக்காக உழைக்கவும் தனியே பெண்கள் அமைப்புகள் தோன்றுவது காலத்தின் தேவையாகிவிட்டது. உழைக்கும் பெண்களின் பிரச்சினைகளும் விழிப்புணர்வும் அதிகரிப்பதன் அடையாளமாகவே பெண்கள் அமைப்புகளின் தோற்றமும், நடவடிக்கைகளும் அதிகரித்து வருகின்றன. தெற்கிலங்கையில் தீவிரமான பெண் இயக்கங்களை இன்று காணலாம். இலங்கையின் சுதந்திர வர்த்தகவலயத் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் பெண்களை அதிகமாக உள்ளடக்கிய ''ஸ்த்திரி விமுக்தி வியாபாரய (பெண் விடுதலை இயக்கம்) பெண்விவசாயிகளை அங்கத்தினராகக் கொண்ட குருநாகலையைச் சேர்ந்த முற்போக்கு மாதர் முன்முன்னணி, கொழும்பைத் தளமாகக் கொண்ட காந்தா ஹண்ட (பெண்ணின் குரல்) போன்றவை குறிப்பிடத்தக்கன. தமிழ்ப்பகுதிகளிலும் பெண்கள் அமைப்புகள் சில தோன்றியிருப்பினும் இப்பகுதிகளுக்கே விசேஷமாகவுள்ள அரசியற் பிரச்சனைகளால் அவற்றின் இயக்கமும் செயற்பாடும் மந்தமடைந்துள்ளன. எனினும் எத்தகைய சூழ்நிலையிலும் பெண்களை ஒன்றிணைத்து அமைப்புகளை உருவாக்குதல் சமூக விடுதலையினதும் முன்னேற்றத்தினதும் பாதையில் அத்தியாவசியமான ஒன்றாகும்.

எமது சமூகத்தில் விரல்விட்டு எண்ணக்கூடியோர் தவிர ஏனைய பெண்கள் எவ்வகையிலாவது உழைக்கும் பெண்களே. இங்கு உழைக்கும் பெண்கள் என்று குறிப்பிடும்போது வீட்டுவேலைகளை மாத்திரம் செய்யும் பெண்களையும் சேர்த்துத்தான் குறிப்பிடுகிறேன். இன்றைய பொருளாதார நிபுணர்களால் பெண்களின் வீட்டுவேலைகள் உழைப்பாகக் கருதப்படுவதில்லை. எமது நாட்டின் தொழில் சார்ந்த கொள்கைத்திட்டங்களிலும் இவ்வீட்டு வேலைகள் எவ்வித பொருளாதார, உழைப்பு முக்கியத்துவத்தையும் பெறுவதில்லை. இவற்றுக்கு எத்தகைய கூலி இல்லாமையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை பெண்களுக்கேயுரிய கடமைகள், எனக் கருதப்படுவதும் இதற்குக் காரணமாகும். வேலைசெய்யாதவர் எனக் கருதப்படும் லட்சக்கணக்கான பெண்கள் தினந்தோறும் காலையில் இருந்து இரவுவரை, எத்தகைய விடுமுறையும் அற்று சமையல், சலவை செய்தல், குழந்தைபராமரிப்பு, வீட்டுநிர்வாகம், நோயாளரைப் பராமரித்தல், சிறுஅளவிலான ஆடு, கோழி வளர்த்தல் ஆகியதொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இலங்கைபோன்ற நாடுகளில் ஐம்பதுவருட வாழ்க்கையை உடையபெண் அக்காலத்தில் 16·66வீதத்தை குசினியில் கழிக்கிருள். அல்லது தினமும் 4 மணிநேரத்தைக் குசினியில் செலவிடுகிருள். ஆனல் இது தனியே சமைக்க எடுக்கும் நேரம் மட்டுமேயாகும். சமையலுக்கான ஆயத்தம், மேற்குறிப்பிட்டவற்றில் ஏனைய வேலைகள் எல்லாமாகச் சேர்த்து சுமார் 12 மணி நேரம் வீட்டுவேலையில் செலவாகின்றது. எனினும் இது வேலையாகக் கொள்ளப்படுவதில்லை. ஆனல் இன்றைய பெண்கள் இயக்கங்களின் கண்ணேட்டத்தில் இவை கூலியற்ற உழைப்பாகவே கருதப்படுகின்றன. எனவேதான் தமது ஆயுளின் கணிசமான பகுதியில் வீட்டுவேலைகளில் உழலும் பெண்களையும் உழைக்கும் பெண்கள் என்ற பிரிவுக்குள் அடக்குகிறேன்.

வீட்டுக்கு வெளியே வேலைசெய்து உழைக்கும் பெண்களும் எமது சமூகத்தில் கணிசமானவரே. சொந்த நிலங்களிலும், வேற்ருருடைய நிலங்களில் கூலிக்கும் விவசாய வேலைகளில் ஈடுபடும் பெண்கள், சந்தைவியாபாரத்தில் ஈடுபடுவோர், பெருந்தோட்டத்துறை, அரசாங்க, தனியார் சிறு கைத்தொழில் நிலையங்களில் வேலைசெய்வோர் பாடசாலைகளிலும், அலுவலகங்களிலும், ஆஸ்பத்திரிகளிலும் தொழில் செய்வோர் என இவர்கள் தொழிலால் வேறு வேறு நிலையைச் சார்ந்தோராயினும் யாவரும் உழைக்கும் பெண்களே. உழைக்கும் பெண்கள் என்ற வகையில் இவர்கள் பொதுவான பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றனர். வீட்டுக்கு வெளியே உழைக்கும் பெண் தனது வீடுசார்ந்த வேலைகளையும் தட்டாமல் செய்யவேண்டியுள்ளது. சமையலில் இருந்து குழந்தை பராமரிப்பு வரை அவை பெண்ணின் கடமைகளாகவே கருதப்படுகின்றன. இதனல் இரண்டுவிதமானவேலைகள்-அதிகளவு நேர வேலை அதிக உடலுழைப்பு என்பன இப் பெண்களிடையே காணப்படுகின்றன. இதனலேயே இன்றைய பெண்ணுரிமை வாதிகள் இவற்றை ''இரட்டைச் சுமை'' என அழைக்கின்றனர்.

தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்யும் பெண்கள் இலங்கையின் ஒடுக்கப்படும் மக்களுக்குள்ளேயே மிக மோசமாக ஒடுக்கப்படுபவர்கள். இவர்கள் காலை 7-30மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை 9 மணித்தியாலங்கள் வேலைசெய்யவேண்டும். ஆனல் வேலைசெய்யும் மலைக்குச் செல்லுதல், தேயிலைக் கொழுந்தை நிறுப்பதற்காகக் காத்துநிற்றல், திரும்பிவருதல் போன்றவற்றல் அவர்களது வேலை நேரம் மேலும் அதிகமாக 12 மணித்தியால வேலையாகிறது. இப்பெண்கள் வீட்டிலும் தமது வழக்கமான வேலைகளை வெளிவேலைக்கு முன்னரும் பின்னரும் செய்கின்றனர். இதனல் உடலுழைப்பு ரீதியாக மிக மோசமாகச் சுரண்டப்படுகின்றனர்.

இலங்கையில் வெளியில் வேலைசெய்து உழைக்கும் பெண்களை எதிர்நோக்கும் பிரச்சனை பிரசவகால விடுமுறையின் போதாமை குழந்தை பராமரிப்பு என்பவையாகும். வேலைசெய்யும் பெண்களுக்கு ஆறுவாரகால பிரசவலீவே வழங்கப்படுகிறது. தேயிலைத தோட்டங்களைச் சார்ந்த பெண்கள் இந்த விடுமுறையில் இரு வாரங்களை பிரசவத்திற்கு முன்னரும் மீதியைப் பின்னரும் எடுக்கும்படி கட்டாயப்படுத்தப் படுகின்றனர் இது பல பிரச்சனைகளைத் தோற்றுவிக்கிறது. எவ்வாருயினும் 6 வார விடுமுறை தாயின் உடல் தேறுவதற்கும், குழந்தையைத் தாய் கவனிப்பதற்கும் போதாது. மூன்று மாதகாலமாவது வேலை செய்யும் பெண்களுக்கு லீவு வழங்கப்படுதல் வேண்டும் என இலங்கைக் குழந்தை மருத்துவர் கழகம் சிபார்சு செய்தபோதும் அரசாங்கம் இது பற்றி அக்கறை எடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைசெய்யும் பெண்களுக்கு உள்ள இன்னேர் பிரச்சனை சம வேலைக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம சம்பளம் இல்லாமையாகும். இவ்வருடம் ஏப்ரல் மாதம் வரை பெருந்தோட்டத்துறைப் பெண்களுக்கு சம சம்பளம் இருக்கவில்லை. ஆண்களினதும் பெண்களினதும் சம்பளத்தில் **16 வீத** வித்தியாசம் இருந்தது. ஏப்ரல் வேலைநிறுத்தத்தின் பின்னர் சம சம்பளம் வழங்கப்படுகிறது ஆயினும் இது தினச் சம்பளமே. மாதாந்த சம்பளம் அல்ல என்பது கவனிக்கவேண்டியது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் தோட்டங்களிலும் விவசாய நிலங்களிலும் வேலைசெய்யும் பெண்களும் ஆண்களிலும் குறைந்த கூலியையே பெறுகின்றனர். 5 ரூபா வேறுபாடு இருபாலாருக்குமிடையே உண்டு. இத்தகைய வேறுபாடுகள் எவ்வளவுதான் பெண்கள் உழைத்த போதிலும் அவர்களது உழைப்பை முக்கியமற்றதாகக் கருதுவதையே காட்டுகிறது. இன்னொரு வகையிற் சொன்னல் பெண்கள் முக்கியம் பெருத சமூக நிலையும் பெண்களின் இரண்டாம் பட்சமான நிலையும் இதன் மூலம் தெளிவாகிறது.

இத்தகைய நிலைமைகளை, இயற்கை என்றும் விதி என்றும் ஏற்றுக்கொண்டு சிறு முணுமுணுப்புத்தானும் இல்லாது மௌனமாக உழன்ற நாட்கள் மலையேறி விட்டன. பெண்கள் தமது உழைப்பின் முக்கியத்துவத்தையும் சுயகௌரவத்தையும், சமூகவிடுதலையின் தமது இடத்தையும் உணரத் தலைப்பட்டுவிட்டனர். இந்த உணர்வு தனித்த எதிர்ப்புக்களாகவும், குமைச்சல்களாகவும் மாத்திரம் இருந்துவிடலாகாது. இவை ஒன்று திரட்டப்படவேண்டும். பெண்களின் அடிப்படை நிலையில் மாற்றங்களைக் கோரும் இயக்கங்களாக இவை உருவாகவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் விழிப்புணர்வு கொண்ட பெண்கள் ஒன்று சேரவேண்டும். பெண்விடுதலை என்பது சமூக விடுதலையின் பெறுபேருக வரவேண்டியது என்னும் இலட்சியவாதத்தைக் கைவிட்டு சமூக விடுதலைப் போராட்டத்துடன் பெண்விடுதலை சமாந்தரமாக நடைபோடத்தக்கது என்பதை உணர வேண்டும். இந்த அடிப்படையில் பெண்கள் அமைப்புகள் உழைக்கும் பெண்களை ஒன்றிணைத்து இயங்கும் தேவை இன்று ஏற்பட்டுவிட்டது. காலத்தின் குரலை எவரும் அலட்சியம் செய்தல் கூடாது.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொழுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி னும்ந மக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
ஸரிநிகர்ஸ மான மாக
வாழவம் இந் நாட்டிலே.

—பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமதி சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு விழாவிற்கு
எமது வாழ்த்துக்கள்

# பாஸ்கரன் சவுண்ஸ்

★

சகல மங்கள வைபவங்களுக்கும்
பொது நிகழ்ச்சிகளுக்கும்
சிறந்தமுறையில் ஒலி அமைத்திட

# பாஸ்கரன் சவுண்ஸ்

**கோவில் வீதி, — புத்தூர் மேற்கு,**
**புத்தூர்.**

உரிமையாளர்: **க. கிருஷ்ணபிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டமும் வரலாறும்

✳ பேராசிரியர் க. கைலாசபதி

சாதிப் பிரச்சினை பற்றிப் பேசுகின்ற சிலர் பழந்தமிழிலக்கியங்களிலே ஆங்காங்கு காணப்படும் சில 'மனிதாபிமான'க் கருத்துக்களைச் சுட்டிக்காட்டி, பெரும் பெரும் புலவர்கள் எல்லாம் சாதிமுறையை எதிர்த்தே வந்திருக்கின்றனர் என்று தமக்குத்தாமே ஒருவகையான மன அமைதியைத் தேடிக்கொள்வதைக் காணலாம். சங்கப் புலவர்களிலிருந்து இராமலிங்கர் வரை "சாதி சமயச் சழக்குகளை" கண்டித்துப் பாடியவர் பலர் உள்ளனர் என்பது உண்மையே. ஆனால் அக்கண்டனத்தின் தன்மையையே கூர்ந்து நோக்கத்தக்கது. சாதிமுறை கூடாது என்பதை எடுத்துக் கூறுவதற்குப் பெரும்புலமையோ, பேரறிவோ தேவையில்லை. நிலைமையை மாற்றுவதற்கு ஏற்றவழிவகைகளைக் கூறுவதிலேயே முந்தையோர் பெரிதும் வேறுபடுகின்றனர்.

"கொடிது கொடிது வறுமை கொடிது" என்றாளௌவைக் கிழவியும் பாடினாள். ஆனால் வறுமை சமுதாய நிதர்சனமாக இருந்துவந்திருக்கிறது.. "இல்லை என்ற சொல்லை உலகில் இல்லையென வைப்பேன்" என்று பாரதி முழங்கிய போது வறுமை வெறும் வருணனையாக அன்றி மாற்றப்பட வேண்டிய பொருளாகக் காட்சி தந்தது. சாதிமுறையும் அவ்வாறுதான்.

மனிதனை மனிதன் அடக்கி அடிமைப்படுத்தும் எல்லாவிதமான முயற்சிகளும் பல்வேறு காலங்களில் போராட்டங்களினலேயே மாற்றப்பட்டுள்ளன என்பது வரலாற்று உண்மை. மனமாற்றத்தால் அடிப்படை மாற்றம் எதுவும் ஏற்படாது. மந்திரத்தால் மாங்காய் விழாததுபோல சாதிக் கொடுமையைப் பற்றியும் சாதி முறையைப் பற்றியும் எமது பழைய இலக்கியங்களிலே எடுத்துரைத்தவர்கள் ஆகக் கூடிய பட்சம் மனமாற்றத்தையே எதிர்பார்த்தனர். உடையவனும் இல்லானும் இருந்த - வணிக வர்க்கச் செல்வாக்கு ஓங்கிய சமுதாய அமைப்பிலே- "வறியார்க்கு ஒன்று ஈவது" பற்றி விரிவாக எடுத்துரைத்துப் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' இணக்கமுறையை வகுக்க முயன்றார் வள்ளுவர். 'வறுமையை அதிகப்படவிடாது அதனைக் குறைக்க முயன்றால் செல்வனுக்கு அதுவே உகவியாயமையும் என்று உபதேசம் பண்ணினார் வள்ளுவர். 'அறம்' உரைத்த வள்ளுவர் எவர் பக்கம் நிற்கிறார் என்பது வெளிப்படை. ஆனால் சமூக சிந்தனையாளனாகிய அவர் வர்க்கப்போராட்டத்தைத் தடுக்கவும்-கூர் மழுங்கச் செய்யவும் முயன்றார்.

பிறப்பால் பெறும் பேதத்தை பேச்சளவில் மறுத்த பொய்யாமொழியார் செய்தொழில் வேற்றுமையை அடிப்படையாக ஏற்றுக்கொண்டு, மனிதரிடையே ஏற்றத்தாழ்வை அமைத்து அமைதிகண்டார். வள்ளுவர் புத்துலகு அமைக்க முயன்றவர் அல்லர். பழைய உலகை புத்திசாலித்தனமாக நடக்கும்படி புத்தி கூறியவரே. தார்மீக புணருத்தாரண இயக்கத்தினர், முதலாளிக்கும் (முதலாளித்துவம் அல்ல) தொழிலாளிக்கும் நட்புறவும் நல்லெண்ணமும் உருவாக வேண்டும் எனப் பிரசாரஞ் செய்து கலைவடிவங்களில் அக்கருத்தை முக்கியப்படுத்துவது போலவே, தனது காலத்துச் சமூக முரண்பாட்டிற்கு "அமைதியான" நிவாரணம் காண முயன்றார் வள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுவர். ஆனால் அவர் அதில் எள்ளளவும் வெற்றி பெறவில்லை என்பது சரித்திரச் செய்தி.

அருளும் அன்பும் ஆருயிர் ஓம்பலும் வள்ளுவர் தனது வர்க்கத்தவராகிய வணிகருக்குக் கூறியவை. நேர்மையாகப் பொருள் கொடுத்து நீதியாகப் பணம் பெறுமாறு வள்ளுவர் இடித்து இடித்துக் கூறினார். ஆனால் வாய்ச் சொல்லால் வர்க்க இயல்புகள் மாறிவிடுமாயின் வரலாறே வேறாயிருக்குமே! வள்ளுவர் பலவாறு கூறி எச்சரிக்கை செய்திருக்கவும் வணிக வர்க்கம் தனது ஈவிரக்கமற்ற சுரண்டலைத் தொடர்ந்து நடத்தியதை சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களும் பிற நூல்களும் எமக்கு ஓரளவு காட்டுகின்றன. அச்சுரண்டலையும் அதன் விளைவாகச் சமுதாயத்தில் பரவலாகக் காணப்பட்ட துன்ப துயரங்களையும் எதிர்த்து மண்டெழுந்ததே 'பக்தி இயக்கம்' எனப்படும் வர்க்கப்போராட்டம். தமது முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைத்த பெருநிலக்கிழாரும், பிரபுக்களும் சைவம் என்றபெயரில் ''ஆவுரித்துத் தின்றுழலும் புலைய'' ரையும் உடன் கூட்டி - அணிதிரட்டி, எதிர் வர்க்கத்தினரின் 'தலையை அறுக்கும்' அறத்தொழிலைச் செய்ய முற்பட்டனர்.

நாயன்மாரும் ஆழ்வாரும் சாதிமுறைமையை எதிர்ப்பவராயினர். இறைவன் முன் யாவரும் சமம் என்று குரல் எழுப்பினர். வேடர் முதல் பறையர் வரை இறை பக்தர்களாயின் ஒன்றேயென்ற கருத்து உருவாகியது. ஆனால் இதே வைதிக சமயங்கள் தனியுரிமையும் சிறப்புச் செல்வாக்கும் பெற்று விளங்கிய சோழப்பெருமன்னர் ஆட்சியிலே முன்னிருந்ததைவிடச் சாதிமுறை மிக்கடுமையாக அனுஷ்டிக்கப்பட்டது. அவரவர் யோகம் பாவத்துக்கேற்பவே சாதியும் வாழ்க்கைத் தகுதியும் என்று சமாதானம் கூறப்பட்டது. இறைவன் முன் யாவரும் சமம் என்ற குரல் மறைந்தது. உயர்ந்த குலமக்களே தெய்வங்களாக உலாவினர். தெருக்களிலே 'உலாப்பவனி' வந்த மானிட மன்னன் இறைவன் ஆனான். எனவே பத்திமான்கள் இழித்துப்பாடிய சாதிமுறை சாதிச்சழக்கு சமூக நிறுவனத்தின் கூறுகளில் ஒன்றாயிற்று. சைவம் மேனிலை எய்திய பிற்காலச் சோழர் ஆட்சியிலும் மடங்கள் செழித்து வளர்ந்த காலத்திலும் வருணாசிரம தருமமே தலையாய தருமமாகப் பேணப்பட்டது.

எனவே மக்களது அபிலாஷை மீண்டும் தலைதூக்குகிறது. இம்முறை, சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் எதிர்த்துக் குரல் எழுப்பிய சித்தர்கள் சாதியெதிர்ப்பையும் தமது கொள்கையில் இணைத்துக் கொண்டனர். ஆனால் சமூகத்திலிருந்து ஒதுங்கி, புறவாசிகளாக — வெறும் கண்டனவாதிகளாக மட்டும் - சித்தர்கள் வாழ்ந்தனர். மக்களது அபிலாஷைக்கு ஆக்கபூர்வமான உருக்கொடுத்து எதிர்ப்பை நடைமுறை இயக்கமாக நெறிப்படுத்தும் ஆற்றலும் அறிவும் அவர்களிடம் இருக்கவில்லை. தமக்குப் பிடிக்காத சமுதாயத்திலிருந்து தாமாகவே விலகிக்கொண்டனர். அவ்வளவில் அவர்கள்எதிர்ப்ப நின்றது. அந்தளவிலேயே அவர்கள் மக்களை கவர்ந்திருந்தமையை நோக்குமிடத்து மக்கள் இன்னும் முன்னேறத் தயாராயிருந்தமை புலப்படுகிறது. இன்னொன்று, சித்தர்கள் சமுதாய உணர்வு நிறைந்தவராய் இருந்தும் அவர்களது ' தத்துவம்'' சமய சம்பந்தமானதாயும் - அகநிலைப்பட்டதாயும் குறுகிய வரம்புக்குள் அமைந்தது. எனவே ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் அதன் செல்வாக்கு இயங்க முடியாது போயிற்று.

இந் வரலாற்று உண்மை சற்று ஆழமாக நோக்கத்தக்கது. ஏனெனில் சமயப் போர்வையிலேயே இதுகாலவரை சாதிப் பிரச்சினை நோக்கப்பட்டு வந்தமையால், மிகச் சமீபகாலம் வரை அதாவது நவீன காலப்பகுதியிலும் பலர் சமய அடிப்படையில் இப்பிரச்சினைக்கு விடிவுகாண எண்ணினர். கிறித்துவம், பௌத்தம் முதலிய சமயங்களைச்சேர்வதால் சாதிப் பிரச்சினைக்குத் (தம்மளவிலே) தீர்வு காண்பதாகப் பலர் கருதியிருக்கின்றனர்.

பிரச்சினை என்பது ஒரு முரண்பாட்டின் உருத்தோற்றமாகும். அம்முரண்பாட்டை இயக்கத்திலே, அதாவது செயலிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தினுல் தீர்க்கலாமேயன்றி-அதிலிருந்து நழுவுவதால் தீர்க்கவியலாது. அவ்வாறு வேறு மதங்களைச் சார்ந்த பின்னரும் வேறுவகையான ஏற்றத் தாழ்வுகளும் முரண்பாடுகளும் தோன்றக்காண்கின்றோம். எனவே நிவாரணம் தவறாக இருந்திருக்கிறது என உணர்கிறோம்.

ஆகவேதான் முற்றிலும் புதிய நடைமுறையில் இப் பிரச்சினையை அணுகும் தேவை இப்பொழுது உணரப்பட்டு வருகிறது. இப்பிரச்சினையைத் தனித்தெடுத்து சாதிப்பிரச்சினையாகவும், சமயப்பிரச்சினையாகவும் மாத்திரம் நோக்காது, பொதுவான தேசப் பிரச்சனையாகவும், வர்க்கப் பிரச்சினையாகவும் கருதிச் செயலாற்றும் நிலைமை தோன்றியுள்ளது. பல்வேறு வகைகளிலும் பல்வேறு நிலைகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களது அடிப்படை உரிமைகளுக்காகக் கிளர்ந்தெழும் போராட்டங்களில் இதுவும் ஒன்று. பழைய சமூக அமைப்பில் சிலர் ''தீண்டாதார்'' என ஒடுக்கப்பட்டது போலவே பெண்கள் பின்புத்தி உள்ளவராகவும் பேதைகளாகவும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். இளைஞரோ அநுபவம் அற்றவராகவும் பெரியோர் பின் செல்லவேண்டியவராகவும் குறைத்து மதிக்கப்பட்டனர். இங்கெல்லாம் ஏற்றத் தாழ்வும், பேதமும் ''தீண்டாமையும்'' வெவ்வேறு அளவில் உள்ளன. இவையாவற்றுக்கும் அடிப்படையாகப் பொருளாதாரக் காரணிகள் இருக்கின்றன. இது தேசத்துக்கு உள்ளே, சமூக அமைப்புச் சம்பந்தமானது. பொருளாதாரச் சம்பந்தமானது: அரசியல் சம்பந்தமானது. சாதிமுறையைப் பாவித்துப் பல உரிமைகளை மறுத்து மக்களை அடக்கும் அதே வர்க்கந்தான், அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆசீர்வாதத்துடன் பாட்டாளிகளையும் உண்மையான விடுதலை வீரர்களையும் அடக்கி ஒடுக்குகிறது. ஆகவே போராட்டம் என்பது ஒன்றுதான். அதன் களமும் காரணமும் தான் மாறுபடுகிறது.

பழைய இலக்கியங்களைக் காட்டி ''சாந்தியும் சமாதானமும்'' போதிப்போர் உண்மையில் மாற்றத்தை எதிப்பவர்கள்; போராட்டத்தை விரும்பாதவர்கள், அவர்கள் இலக்கியத்தைத் தமது நோக்கிற்கு ஏற்பப் பயன்படுத்துகிறார்கள். வள்ளுவன் முதல் வள்ளலார் வரை, சோலா முதல் ஷொலொக்கொவ் வரை மனிதாபிமானம் பேசியோர் தொகை பெரிதுதான், ஆனால் மனிதனது அடிமைத்தளைகள் தான் பலவிடங்களில் இன்னும் அறுபடவில்லை. மார்க்ஸ் சொன்னார்: இதுகாலவரை தத்துவவாதிகள் உலகை விளக்கவே முயன்றனர். ஆனால் நாமோ அதனை மாற்ற முற்படுகிறோம். எவ்வளவுதான் இலட்சிய உணர்வும், இரக்க சிந்தையும் இருந்தவராயினும் பண்டைய இலக்கிய கர்த்தாக்கள் அல்லது எமக்குக் கிடைக்கும் நூல்களின் ஆசிரியர்கள் உலகை விளக்கியவரே. பாரதி தான் ஓரளவேனும் ''புதியதோர் உலகு செய்வோம்'' என்று பாடினன். எமது காலஞ்சென்ற யாழ்ப்பாணக் கவிராயர் பசுபதியும்.

''புதுவுலகம் காண்பதற்குப்
புரட்சி வேண்டும்
இது உலகம் எமக்களித்த பாடம்''

என்றும்,

''விடிவு காலம் இங்கு எமக்காம்-இதை
வெற்றியோ ஈட்டித் தருவோம்''

என்றும் புதுக்குரலிற் பாடினர். இப்புதுக்குரல் போர்க்குரல் ஆகும். ''நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை'' என்பது பழைய இலக்கியக்குரல். எல்லோரையும் உழைத்துண்ணும் நல்லவராக்கும் புரட்சியை நாடி நிற்கிறது இன்றைய உலகம். அந்நாட்டத்தின் ஒரு சிறு பொறியே சாதிப் போராட்டம்.

(இக் கட்டுரை சாதி அடக்கு முறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டம் உச்சகட்டத்தில் இருந்த 1969ம் ஆண்டில் பேராசிரியர்: க. கைலாசபதி அவர்களால் அன்றைய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாட்டு விஷேச மலருக்காக எழுதப்பட்டதாகும். அக்கட்டுரையின் முக்கியத்துவம் கருதி எமது இம்மலரில் இக் கட்டுரையைப் பிரசுரிக்கின்றோம்)

—மலர்க் குழு

249722

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments of

V

**Dr. K. E. CHANDRABALA**

Atchuvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*18—1—84*ல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தேசிய அமைப்புக் கமிட்டியின் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் புதிய பொதுப் பாதையை வைபவ ரீதியாக நாடாவை வெட்டி திறந்துவைக்கின்றார்.



ஆண்டாண்டு காலமாக மறுக்கப்பட்டுவந்த பொதுப்பாதையை கிராம மக்கள் தமது போராட்ட ஐக்கியத்தின்மூலம் அமைத்தனர். —ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆண் பெண் சிறுவர் பெரியோர் கலந்துகொண்ட பாதை அமைப்பின்போது எடுக்கப்பட்ட ஒரு பகுதியினரின் படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி நிலம் வேண்டும்!

எஸ். தேவராஜா

**பா**ரததேசம் ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பிக்குட்பட்டு சுரண்டப்பட்டபோது இந்திய மக்களின் தனிமனித உணர்வினூடாக—சமுதாய நோக்கை ஊட்டிய பாரதியின் பாடல் அடிதான் இதுவென்பது அனைவரும் அறிந்தவிடயம், பாரதியார் ''காணி நிலம் வேண்டும் - பராசக்தி/காணி நிலம் வேண்டும்'' என்று தொடங்கிய பாட்டின் இறுதியில் '' . என்றன்/ பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்தைப்/பாலித்திட வேணும்'' என்ற விடுதலை வேட்கையுடன் ஒலிக்கும் குரல் மூலம் பரந்துபட்ட சாதாரண மக்களின் ஆழமான உணர்வுகளை வெளிக் கொணர்ந்து பாரததேசத்தின் விடுதலை கண்டு வெற்றிவாகை சூடி ஆட்சியை மாற்றிவிடமுடியும் என்ற அசையாத நம்பிக்கை கொண்டார்.

காணிநிலம் வேண்டும் என்பது பல்திறப் பட்ட மக்களின் நீணடகாலப் போராட்டக் குரலாகும். நிலப்பிரச்சினைக் காட்ப்பட்ட மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாகும். கூலி உழைப்பாளர், குத்தகைவிவசாயிகள், வாடகைக் குடியிருப்பாளர், வசதியற்ற கீழ்ப்பட்ட மத்தியதர வர்க்கத்தினர் என்போரே நிலப்பிரச்சனையின் நீண்ட கரங்களுக்காட்பட்டோராவர். நிலப்பிரச்சனையென்பது சாதி, மத, இன பேதக்கண்ணோட்டங்களினூடாகக் காணக் கூடியதல்ல. சமூக-விஞ்ஞானக் கண்ணோட்டத்தினூடாகத்தான் இப்பிரச்சினையினை அணுகி ஆழம், அகலத்தை ஆய்ந்து, மா_றுத்தீர்வை முன்வைக்கமுடியும்.

நிலப்பிரச்சினை என்பது பெரும்பான்மையான நிலமற்ற மக்களின் பிறப்போடு பின்னிப் பிணைந்ததோ அல்லது முற்பிறப்பின் ஊழ்வினைக்குட்பட்டதோ அல்ல, பழையகாலத் தோம்புகளால் தமது பரம்பரையினருக்காக பாதுகாத்துவரும் ஒரு சில நிலஉடமையாளர்களுக்கு ''கருவிலே திரு'' ஏற்பட்டதோ அல்ல. ஒரு சிலருக்கு அதிர்ஸ்டவசமாகக் கிடைத்த புதையலுமல்ல. பன்நெடுங்கால வரலாற்றில் ஆளும் வர்க்கம் பெற்றெடுத்து வளர்த்த பிரச்சினை நிலப்பிரச்சினையாகும்.

புராதன பொதுவுடமைச் சமூகத்திலே வேட்டையாடி உணவுண்டு வாழ்ந்த மக்கள் கூட்டம் உற்பத்தி சாதனங்களின் வளர்ச்சியினால் அடிமைச் சமுதாயத்திலே பிரவேசித்தபோழுது நிலம் என்பது வரலாற்றில் முதன்முதலாக முக்கியத்துவம் பெறத்தொடங்குகிறது எனலாம். உலோகாயுதங்களின் கண்டுபிடிப்புடன் போரிலே கைப்பற்றிய எதிரிகளை தமது நிலத்திலே வேலை செய்யும் அடிமைகளாக்கி, நிலத்தைப் பண்படுத்திப் பயனைப் பெற்றுக் கொண்டனர் எசமானர்கள். இவ்வாறாகத் தான் எசமானர்கள் மக்கள் மீதான தமது சுரண்டலை ஆரம்பித்தனர். நிலத்திலே விளைந்த உற்பத்தி முழுவதையும் அபகரித்தனர். அடிமைகள் உயிர்வாழ்வதற்கேற்ற உணவை மட்டும் கொடுத்தனர்.

ரோமப்பேரரசுக் காலத்திலே அடிமைகளின் கிளர்ச்சிகளினாலும் போராட்டங்களினாலும் உற்பத்தி சாதனங்களின் வளர்ச்சியினாலும் நிலப்பிரபுத்துவ சமூகமாக மக்கள் சமூகம் மாற்றம் கண்டபோது பிரபுக்களாக வளர்ச்சிபெற்ற எசமானர்கள் அடிமைகளின் உழைப்புச் சக்தியை அதிகரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் நோக்குடன் (Peculium-) பிக் கூலியம் நிலத்துண்டாக அடிமைகளுக்குக் கொடுத்தனர். ரோமன் சட்டத்தில் ''மனிதன்'' என்ற வரைவிலக்கணத்துக் குட்படாது ''பொருள்'' என்ற சட்ட இலக்கணத்துக்குட்பட்ட அடிமைகள் தாமும் மனிதர்கள்தான் என்ற அந்தஸ்த்தைப் பெறுவதற்கு இத்தனிசொம் அவர்களுக்குப் பிற்காலத்தில் உதவியது. இத்தகு போராட்டம் வர்க்கப் போராட்டத்தின் ஆரம்ப கால நிகழ்வுகள் எனலாம்.

கீழைத்தேசநாடுகளிலே குறிப்பாக இந்தியாவிலே அடிமை சமுதாயம் - நிலமானிய சமுதாயமும் கால-தேச, வர்த்தமானங்களூடாக சற்று வேறுபட்ட போக்கில் தமது கால்களைப் புதைத்தன என்பதை வரலாற்று ஆய்வுரீதியாக நாம் அறிந்து கொள்ளமுடியும்- இந்திய தேசத்தின் அடிமை முறைபற்றி கோ. கேசவன் ''மண்ணும் மனித உறவுகளும்'' என்ற நூலில் குறிப்பிடுமிடத்தில் ''மேலைத்தேசங்களில் இருந்ததைப்போல உழைப்பு அடிமைமுறை இங்கே (இந்தியாவில்) இல்லை. வீட்டு அடிமைமுறை இருந்தது'' என்றார் ''பள்ளங்களிலே (வயல்களிலே) உழைப்பதனால் பள்ளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். என்னதான் இன்று அரிசனங்கள் என்று புது நாமம் இட்டு அழைக்கப்பட்டாலும் அக்காலத்திய நிலைமையினின்று பெருத்த மாறுதல் ஏற்படவில்லையென்று தெரிகிறது. இவ்வாறு தாழ்த்தப்பட்ட வகுப்பினரின்- நிலமற்ற விவசாயிகளின் தோற்றம் வளர்ச்சியை சிலபலகாலவித்தியாசங்களைக கணக்கில் எடுத்துக் கொண்டு சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் ஆராய வேண்டியது இன்றைய ஆய்வுலகத்தேவை மட்டுமல்ல; இந்திய சமூகத்தின் வர்க்க வேறுபாடுகள் எப்படி சாதி வேறுபாடுகளாக வடிவெடுத்தன என்பது பற்றியும் எப்படி சாதி அமைப்புகள் பல்வேறு வகையான சிக்கலான பின்னணிகளுடன் இங்கு கெட்டி தட்டிப் போய்க் கனத்துக் காணப்படுகிறது என்பது பற்றியும் மிக ஆழமாகத் தெரிந்து கொள்ளவேண்டியது இன்றைய காலத் தேவையாகும்'' என்று குறிப்பிடுவதும் மனங் கொள்ளத்தக்கது.

நிலமானிய ஆரம்பகாலத்திலே கணங்களாக வாழ்ந்த மக்கள் கூட்டத்தினரின் நிலங்களை ஆக்கிரமித்து ஒன்றிணைக்கும் தேவையெழுந்ததால், ''பெருமளவில் உற்பத்திதரக் கூடியதான புதிய உற்பத்திச் சாதனமான நிலத்தைக் கொள்ளையடிப்பதற்காக போர்கள் நடைபெற்றன. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று இக்காலத்தில் ஒலிக்கும் குரலையும் நாம் கேட்க முடிகிறது'' எனவே பெருமைக்காக இறைஞன் என்பதற்காக, புகழுக்காக போர்நடத்தல் என்பது மிக மிகச் சிறிய துணைக்காரணமாக அவ்வப்போது மேலே தோன்றிக் காட்சியளித்தாலும் அடிப்படையிலே ஆணிவேராக அமைந்தது நிலத்துக்கான திட்டமிட்ட கொள்ளை என்பதுதான் பேருண்மையாகும் என்று கோ. கேசவன் விளக்குவான் மூலம் நிலமானிய காலத்தில் வர்க்கவேர்கள் எத்தளவுதூரம் நிலத்தினடிப்படையில் ஆழமாகப் புதைந்துள்ளன என்பதனை நாம் அவதானிக்கமுடியும்.

வர்ணாச்சிரமதர்மம் என்பது ''தவிர்க்க முடியாதனவாயும்'' ''பொறுமையுடன் தாங்கிக்கொள்ளப்பட வேண்டியன'' வாயும் சித்தரிக்கப்பட்டிருப்பானை 'பொற்காலம்'' என்று போற்றப் படும் சோழர் கால இலக்கிய- சமய நூல்களிலே விரவிக் கிடப்பதனை நாம் அறியமுடியும். மனு தர்மசாத்திரத்திலே அந்தணர், மன்னர், வணிகர் ஆகியோருக்கு ''எல்லாளரான மக்கள் அழுக்காறு இன்றிப் பணிபுரிதல் ஒன்றையே தலையாய கடமையாய் கொள்ளக் கடவரென்பதும்'' என்று ''அடியும் முடியும்'' என்ற நூலில் பேராசிரியர் க. கைலாசபதி குறிப்பிடுவது சோழர் காலத்தில் நிலவிய 'அமைதியான' ஆட்சிப் போக்கினை உணர்த்துகிறது.

''எவ்வாறு முன்னால் தன்னாட்சி செய்து கொண்டிருந்த கிராம சமூகத்தின் பொருளாதாரத் கடமைகளும் நிருவாக உரிமைகளும் பறிக்கப்பட்டு பொதுநிலங்களில் பெரும்பாகம் தனிநபர்களுக்கு அளிக்கப்பட்டதோ 'அவ்வாறே' தனிநபர் நில உரிமை, நிலவிற்பனை, நிலத்தை அடமானம் வைத்தல் முதலிய இங்கிலீஷ் பூர்ஷ்வா சட்டதிட்டங்களின் அரக்கப்பிடியில் உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பூர்வீகக் குடிகளான மக்கள் நிலத்தை வாடைக்கு எடுத்து வேலைசெய்யும் குடிகளாக மாற்றப்பட்டனர். இது சோகம் நிறைந்த வரலாற்றுமாற்றம்' என்று பேராசிரியர் க. கைலாசபதி ஆங்கிலேயரின் சட்டதிட்டங்கள் எந்த அளவு தூரம் கீழைத்தேசங்களில் நிலப்பிரச்சினையைப் பூதாகரமாக்கியது என்பதனைக் கூறுகிறார்.

'ஏறத்தாழ இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கினரான (20 கோடி மக்கள்) தாழ்த்தப்பட்ட மக்கள், பெரிதும் நிலமற்ற கூலி விவசாயிகளாகவே இருக்கின்றனர். இவர்களில் உடல் உழைப்புக்கேற்ற வயது வந்தவர்களில் அதாவது 10 வயதில் இருந்து நிலத்திலே உழைப்பவர்கள் தொகை 95 சதவீதம் என்றும், இந்தியாவில் உள்ள நிலமற்ற விவசாயிகளின் தொகையில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் என்றும் ஓர் அறிக்கை கூறுகிறது' என்று கோ. கேசவன் குறிப்பிடுவது ஒப்பு நோக்கில் இலங்கையில் தாழ்த்தப்பட்ட நிலமற்ற மக்களின் நிலைமைக்குப் பொருந்துவதாக உள்ளது.

இலங்கையிலே சிங்கள மக்களில் ஏறக்குறைய ஐம்பது வீதமான கூலி விவசாயிகளும் கீழ்மாகாணத்திலே போடியார்களின் கீழே வேலை செய்யும் முஸ்லீம்—தமிழ் கூலி விவசாயிகளும்; வடமாகாணத்திலே வாழுகின்ற தாழத்தப்பட்டமக்களில் அநேகரும்; இனக்கலவரங்களால் அகதிகளாக்கப்பட்டு இடம் பெயர்ந்த தோட்டத் தொழிலாளர்களும்; 'அடாத்தாக' அரசகாணிகளில் குடியேறிய சகல இனமக்களும் நிலமற்ற மக்கள் என்று பிரகடனப்படுத்தப்பட்டாலும் நிலத்திலிருந்து பிரிக்கமுடியாதவாறு உற்பத்தி உறவுகளில் இணைக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையின் தேசிய உற்பத்தியில் முக்கியபங்காற்றிவரும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்றுவரை ஒரு துண்டு நிலமேனும் உரித்தாக்கப்படவில்லை.

நிலமற்றமக்களின் நன்மைக்காக நெற்காணிச் சட்டம், காணி சுவீகரிப்புச் சட்டம், வாடகைச்சட்டம் என்பன இயற்றப்பட்டிருந்தாலும் முதலாளித்துவ அரசு இயந்திரம் நில உடமையாளர்களுக்குச் சேவகம் செய்வதனையே நடைமுறை அனுபவங்கள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன. ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட காணிகள் ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் காணிகளைப் பதிவு செய்து, முற்பதிவுக்கு முதலிடம் பெற்று, தமது பெயரில் நிலங்களுக்கு உறுதி முடித்து, உள்ளூர்சபைகளில் வரிகட்டி சொந்தந்தை உறுதிப்படுத்த வேண்டிய 'நிலை ஏற்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நிலப்பிரபுத்துவ நீசத்தனங்களால் நீண்டகாலமாக அடிமை குடிமைகளாக வைத்திருந்த மக்களைத் தொடர்ந்தும் சட்டபூர்வமாக ஆட்டிப்படைப்பதற்கு தக்க தருணம் இது வென்று கருதி, நிலவுடமையாளர்கள் நிலம் முழுவதையும் தமது பெயர்களில் பதிவு செய்துகொண்டதன் மூலம் நிலங்களில் ஏகபோக சொந்தம் பாராட்டத் தொடங்கினர். மறுபுறத்திலே ஆண்டாண்டுகாலமாக நிலத்தினை ஆட்சி செய்து வாழ்ந்த மக்கள் நிலமற்றவர்களாக மாற்றப்பட்டனர். ஆட்சியுரிமைச்சட்டம், உடமைச் சட்டவிதிகள் போன்றவை நிலமற்ற மக்களுக்கு எட்டாத கனிகளாக முதலாளித்துவத் தோப்பில் தொங்கிக்கொண்டிருப்பதனால் என்ன பிரயோசனம் ஏற்பட முடியும். நான்கு சுவர்களினுள்ளே நடைபெறுகின்ற நீதிமன்ற விசாரணைகளில் தனது நிலத்தின் மீதான ஆட்சியை நிலைநாட்ட 'நம்பத்தகு சாட்சிகளான' பிரமுகர்களைக் கண்டுபிடித்து நிறுவ நிலமற்றவர்களால் எங்கு தான் செல்லமுடியும்? தேசவழமைச்சட்டம் ஆரம்பகாலத்தில் நிலவுடமையாளர்கள் தமது நிலத்தை மேலும் பெருக்குவதற்கு ஒரு வகையில் உதவி செய்ததெனலாம். சாதிபேதங்களை யாழ்ப்பாண விசேட நிலைமைகளாக தேசவழமை ஏற்றுக்கொண்டதன் மூலம் உயர்சமூக நிலவுடமையாளர்களுக்கு உதவி செய்யவும், தாழத்தப்பட்டமக்களை மேலும் நிலமற்றவர்களாக்கவும் சாதகமாயமைந்தது எனலாம்.

இவ்வாறாக நிலமற்ற மக்களின் பிரச்சினை இலங்கை, இந்தியா போன்ற தேசங்களிலே நிலமானிய சமுதாயத்திலே வர்க்க ரீதியில் ஆழமாக வேரூன்றி வளர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று முதலாளித்துவ சமுதாயத்தில் மேலும் வளர்ச்சிபெற்று நவகாலனித்துவ கட்டத்தில் திசைமார்க்கமின்றிச் சிக்கலாக்கப்பட்டுள்ளது.

மூன்றாமுலக நாடுகளில் அநேகமானவை அரை நிலப்பிரபுத்துவ - அரை முதலாளித்துவ - நவகாலனித்துவ நாடுகளாக இருப்பதனால் நிலப்பிரச்சினை நீங்காத பிரச்சினையாக இருந்து வருகிறது. மேலைத்தேச வல்லரசுவாதிகள் மூன்றாம் உலக நாடுகளில் நிலவும் நிலப்பிரச்சினைகளை தமக்குச் சாதகமாக பயன்படுத்த வரலாற்றுக்காலந் தொட்டு செயற்பட்டு வருகின்றனர். மூன்றாமுலக நாடுகளின் சுதந்திரமான வளர்ச்சியைத் தடுக்கவும், தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவும் மேலாதிக்க வாதிகள் முனைந்து கருமமாற்றுகின்றனர். நிலப்பிரச்சினையின் அடிப்படையான வர்க்க முரண்பாட்டைத் திசை திருப்பி இனரீதியிலும் மதரீதியிலும் முரண்பாடுகளை வளர்த்து மோதல்களை ஏற்படுத்தவே வல்லரசுவாதிகள் தமது நேரத்தையும், நிபுணத்துவத்தையும், பணத்தையும் 'உதவிகளாக' மூலதனமிடுகின்றனர். மூன்றாமுலக நாடுகளில் வளர்ச்சி பெற்றுவரும் சமூக - விஞ்ஞானக் கண்ணோட்டத்திலான புதிய சிந்தனைப்போக்கு எதிர்காலத்தில் மேலாதிக்க வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கெதிரான - தேசிய சுதந்திர உணர்வை வளர்த்துவிடுமென்ற பயப்பீதியினால் வல்லரசுவாதிகள் வேகமாகக் கருமமாற்றுகின்றனர். இதனால் மூன்றாமுலக நாடுகளில் பெருந்தேசிய இனத்திலுள்ள நிலவுடைமையாளர்கள் தொடர்ந்து பெருந்தேசிய இனத்தைச் சேர்ந்த குத்தகை விவசாயிகளைச் சுரண்டும் வாய்ப்பையும் பெறுகின்றனர். அதேசமயம் மறுகரையில் குறுந்தேசியவாதம் பேசிக்கொண்டு தமது இனத்தைச் சேர்ந்த கூலிவிவசாயிகளையும் சுரண்டி வளரவும், பரஸ்பரம் ஒன்றுக்கொன்று இனவாதக் குரோதங்களை வளர்க்கவும் முடிகிறது.

இன்று இந்த இலங்கை மண்ணில் கண்ட காட்சிகள், கொண்ட கோலங்கள் உண்மையான நண்பர்களை எதிரிகளாகவும் எதிரிகளை நண்பர்களாகவும் இனங்காட்டி; வர்க்க உணர்வை மழுங்கடிக்கும் வல்லரசுவாதிகளின் அபாயத்தை உணர்ந்து; இன-மத - பிரதேச உணர்வுகளுக்கப்பால் நிலத்தோடு - உழைப்பினூடாக நீண்ட உறவுடைய சிங்கள - தமிழ் - முஸ்லீம் நிலமற்ற கூலிவிவசாயிகளும், குத்தகை விவசாயிகளும், குடியிருக்க நிலமற்றோரும் நிலவுடைமையாளர்களுக் கெதிராகப் போராடுவதனூடாக அந்நிய ஆண்டகைகளின் அடிவருடிகளை அரியணையிலிருந்து அகற்றி, இலங்கைமாதாவின் தேசியப்போராட்டத்தில் இணைந்து மக்கள் ஜனநாயகத்தை மீட்டெடுக்கவும் - மகோன்னதவாழ்வு மலரவும் காணிநிலம் வேண்டி கைகோர்த்து நிற்கவும் முடியும். நின்று நிமிரவும் முடியும்.

கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால் -
பேதமை யாற்றிடுங் காணீர்

— பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் மண்ணும் என் மண்ணும்

'என் மண். என் மண்' ணென்று
எப்போதும் நீ சொல்வாய்
கோடேறி வழக்குரைப்பாய்.
மண்ணுக்கும் நீருக்கும் வேலி,
மதிற்சுவர் எழுப்பி
வாராமல் நீ மறிப்பாய்.
இப்போ தோ
'இது நம் மண்' என்கின்றாய்
'எழுக', என ஆர்க்கின்றாய்.
நன்று—ஒரு சிறுகேள்வி,
நீ கூறும் 'நம் மண்' இது
ஆண்டோய்ந்த பரம்பரையார்
மீண்டொருக்கால் ஆளவர
வேண்டி நமை வேள்வியிலே
ஆடாகப் பலியிடவும்
அந்நியருக் கெல்லாமே
அடமானம் வைத்திரந்து
அவர் தயவில் ஆளுதற்கு
ஆசையுறும் மண்ணாமோ?
இல்லையெனில்,
'விடுவிக்கப் படை கொணர்ந்த
'ராட்சகரின் காலடியின்
விடுபடற்கு மறுபடியும்
வெகுண்டெழுந்த காம்போஜம்,
ஆப்கனிஸ்தான் போல் ஒன்றோ?
எல் சல்வடோர் போன்றோ?
பறிபோன பலஸ்தீன மண்போன்றோ?
மாறாக,
ஸியோனிஸத்தின் இஸ்ரேலோ?
ஆபிரிக்கத் தென் முனையில்
வெள்ளை நிறவெறி உரிமை
கொண்டாடும் மண்போன்றோ?
அடியடியாய் முடியாண்டோர்
நீண்ட நெடு வரலாற்றில்
குடுமிப்பிடிச் சண்டைகளில்
குருதியினாற் சேரான
செம்மண்ணோ, எம் மண்ணோ
நீ கூறும் மண் அதனை
உழுபவனின் மண்ணென்றால்
அவனுக்கே சேரட்டும்.
முன்னாலே நிற்கின்ற
ஆண்டைகளின் பங்கென்ன?

## பாட்டன் பரம்பரை

பலநூறு ஆண்டுகள் முன்
பண்ணிவைத்த கோபுரத்தை
அண்ணாந்து பார்த்து அதை
அதிசயித்து உன் மனதுள்
பாட்டனுக்குப் பாட்டனுக்குப்
பாட்டனுக்குப் பாட்டனெவன்
பண்ணியவன் என்றெண்ணிப்
பரவசித்து நிற்பவனே,
பழைய பரம்பரையில்
பாட்டன்மார் பலபேர்காண்.
கல்லுடைத்த பாட்டன்மார்
கல் சுமந்த பாட்டன்மார்
பேருனக்குத் தெரியாது.
ஆராரோ தேரேறி
வீதிவலம் வருவதற்காய்க்
கையிழந்த பாட்டன்மார்
கண்ணிழந்த பாட்டன்மார்.
காலொடிந்த பாட்டன்மார்
கதையுனக்குத் தெரியாது.
கதை முடிந்த பாட்டன்மார்
கணக்குனக்குத் தெரியாது.
கோபுரத்தில் பேர்பொறித்துக்
கொலுவிருந்த மன்னரிடை
பாட்டன் உனக்கொருவன்
எவனிருப்பான் என்றெண்ணிச்
செல்லரித்த ஏடுகளைத்
தேடுகிற பைத்தியமே!
பணக்கார உறவுகளைப்
பழமையிலும் நாடுகிறாய்

★ நன்றி. நதிக்கரை மூங்கில் (கவிதைத் தொகுதி) ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றறிகளை சிறந்த முறையில்
சார்ச் செய்வதற்கும், செல் மாற்றுவதற்கும்

# கிருஷ்ணா பற்றறி சேவிஸ்

ஆவரங்கால் சந்தையடி — ஆவரங்கால்.

மற்றும்

மங்கள வைபவங்கள், பொது நிகழ்ச்சிகளுக்கு
சிறந்த முறையில் ஒளி அமைப்பதற்கு

# பத்மா லைற்

(எம்மால் வாடகைக்கு விடப்படும்)

உரிமையாளர்: கா. ரவீந்திரநாதன் (ரவி)

---

விவசாய உற்பத்தியாளர்களுக்கு தேவையான
சகல கிருமிநாசினி வகைகள், உரவகைகள்
போன்றவற்றை பெற்றுக்கொள்வற்கு

# சபேஸ் ரேடேஸ்

சோமாஸ்கந்த கல்லூரி வீதி, — புத்தூர்.

# SABES TRADES

SOMASKANDA COLLEGE ROAD — PUTTUR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமது கிராமத்தில் மக்களால் அமைக்கப்பட்ட புதிய பொதுப்பாதை திறப்பு விழா வைபவத்தின்போது பாதையின் முகப்புத் தோற்றம்



புதிய பொதுப்பாதை திறப்புவிழா வைபவத்தை தோழர்கள் கே. ஏ. சுப்பிரமணியம், கே. செந்திவேல் ஆகியோர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சிறுகதை

# கோழிக் கள்ளன் பிடிபட்டான்

வீ. எம். குகராஜா

ஆறுமுகம் வீட்டில் இது நான்காவது தடவை. அவரால் தாங்கமுடியவில்லை.

'இந்தக் கோழிக்கள்ளனை இப்படியே அக்கறையில்லாமல் விட்டுக் கொண்டிருந்தால், வலுகெதியிலே நூறாவது கோழியைக் களவு குடுத்த பெருமைக்காக விழாக் கொண்டாடவேண்டியும் வந்திடும்'

ஆறுமுகம் ஒரு முடிவுக்கு வந்து விட்டார். இரவு காணாமல் போய்விட்ட கோழியைக் கண்டுபிடித்து, வெற்றியுடன் அல்லது செட்டைகளுடன் திரும்பவேண்டுமென்று உறுதி பூண்டு விட்டார்.

'இதுக்குத்தான் சொன்னனான், ஒரு கூடு கட்டித்தாருங்கோ எண்டு'

ஆறுமுகத்தின் மனைவி வழக்கப் போலவே கோழிகாணாமல் போனதற்கு ஆறுமுகமே பொறுப்பாளியென்பது போலக் கூறுகிறாள்.

'வளர்க்கிறது ஆக அஞ்சு கோழி அதுக்கொரு கூடு' எப்போதும் போலவே கூறிவிட்டு சால்வையைத் தேடியெடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு புறப்படுகிறார் ஆறுமுகம்.

'பெரியவர் கெதியா ஏறுங்கோ பின்னாலே சி. ரீ. பீ காறன் கலைக்கிறான்'

'சுன்னாகந்தானே'

'ஓம் கெதியா'

சுன்னாகம் பஸ்நிலையத்தில் இறங்கி, தெற்குப் பக்கமாக நடந்து, மீன்சந்தை வாசனையையும் முகர்ந்து - தேங்காய்க்கடையையும் மரக்கறிக் கடையையும் பிரிக்கின்ற நடைபாதையால் மெல்ல மெல்ல சனத்தை விலத்தி விலத்தி நடந்து வருகிறார் ஆறுமுகம்.

கிழங்குக்கடைக்கும் தேங்காய்க்கடைக்கும் இடையில் பத்தடிச் சதுரங்கூட இருக்காத அந்தப் பகுதிக்குள் ஆறுமுகத்தாரின் கண்கள் அகல விரிகின்றன.

ஆறுமுகத்தாரும் அவரது ஆந்தை விழிகளும் நெருங்குகின்றன. கால்கள் கட்டப்பட்டு தரையில் போடப்பட்ட கோழிகளை கூடிநிற்போரின் கால்களுக்கிடையாகப் பார்க்கிறார்.

'மொட்டையுருவாய் முடமாகிநிற்கும்' சுன்னாகம் சந்தைக் கட்டடங்கள் அதிர்ந்து உதிரும்படி கத்துகிறார் ஆறுமுகம்.

'புள்ளிக் கோழி'

திகைத்தவர் எல்லாம் திகைக்க வைத்தவரைத் திரும்பிப் பார்த்துக்கொண்டிருக்க கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஒருவன் மட்டும் ஓடுகிறான்.

'விடாதையுங்கோ, பிடியுங்கோ உவனை' கள்ளனைக் காட்டினால் பிடிக்கக் கூடிய திறமைசாலிகள் நம்மத்தியில் இருக்கிறார்கள் என்பது எவ்வளவு தெளிவாக நிரூபிக்கப் பட்டுவிட்டது?

கோழிக்கள்ளன் பிடிபட்டு விட்டான். இனிமேல் வேண்டியது நீதியானவிசாரணை. ஆறுமுகத்தார் ஆத்திரத்தால் துடித்தார். இந்தப் புள்ளிக்கோழி, இதற்குமுன்னொரு வெள்ளைக் கோழி, அதற்கும் முன்னொரு கறுப்புக் கோழி, இவைகளெல்லாவற்றிற்கும் முதல் ஒரு மண்ணிறக் கோழி, எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக நான்கு கோழிகள். இந்தக்கோழிக் கள்ளனுக்கு மிகப்பெரிய தண்டனை கொடுக்கவேண்டுமென்று அவர் ஆசைப் பட்டார். இல்லை ஆவேசப்பட்டார்.

ஆறுமுகத்தாரோடு, இந்த நாட்டில் கள்வர்களே இல்லாத ஒரு சமுதாயம் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்ற கருத் துள்ள பலர் சேர்ந்துகொள்கின்றனர்.

களவு, பொய், கோள்.குண்டணி எது வுமே இல்லாத வகையில் சமுதாயத்தைச் சீர்கெடுத்த இல்லை சீர்திருத்த வேண்டு மென்ற அவாவுடைய அம்பலவாணர் என்ற உள்ளூர் பிரமுகர் முகதாவில் கோழிபிடித்த குற்றத்திற்காகக் கோபால் நிறுத்தப்படுகிறுன்.

கோபால் பற்றி நாலுவரி:

இவன் களவெடுப்பது கோழிமட்டும்:

வயது முப்பதிற்குள்- சக்திவாய்ந்த வடி சாராயம் இவனது உயிருக்கு உறுதுணை. ஆறுமுகத்தாரின் மூன்ருவது வீடு இவனுடையது.

அம்பலவாணரைப் பற்றி அவரது மனைவி அடிக்கடி நினைத்துக் கொள்வது இதுதான். ''இந்நாள் எத்தினை ஆட்டுக் களவுகளைச் செய்துபோட்டுது. அதுகளை இந்த ஊரவங்கள் கொஞ்சம் யோசிச்சுப் சுப்பார்த்தால்''

''சனம் உதுகளை எங்கை யோசிக்கப் போகுது'' இந்தத் தைரியத்தில் அம்பல வாணர் தம் நீதிபரிபானத்தைத் தொடர் ந்து வருகிறுர்:

''உண்மையா நீங்கள் செய்யிறதுதான் சமூக சேவை'' ஆறுமுகத்தார் அம்பல வாணரை உற்சாகப்படுத்துகிறுர்.

''அது உண்மைதான் ஆறுமுகம். ஆனுலும்... இது கொஞ்சம் பெரிய கேஸ். இதை நான் விசாரிக்கிறதிலும் பார்க்கப் பூதப்பிள்ளை விசாரிக்கிறது தான் நல்லது''

கோழிக் கள்ளன் கோபாலை அம்பல வாணரே ஆறுமுகத்தார் போன்ற அநி யாயத்தின் எதிராளிகளின் அனுசரணையு டன் பூதப்பிள்ளையின் முன்னுல் நிறுத்து கிறுர்.

தொடர்ச்சியாக நான்கு கோழிகள் களவாடப்பட்டன.

பூதப்பிள்ளை பொங்கியெழுந்தார்: தனது தீர்ப்பை எழுதுவதற்குப் பொருத்த மான பேனுவைத் தேடினுர்.

அடுக்களைக்குள்ளிருந்து பூதப்பிள்ளை யின் மனைவி பரபரப்படைகிறுர். ''இஞ் சேருங்கோ .. இஞ்சையொருக்கால் வந் திட்டும் போங்கோ.''

''என்னது''

''அந்தமாடு கயித்தைக் கழட்டிப் போட்டு நிக்குது. ஓடினுலும் ஓடிவிடும். பிடிச்சுக் கட்டுங்கோ.''

பூதப்பிள்ளை மாட்டை நோக்கிப் போகிறுர்.

அந்தமாடு மூன்று ஊர்தாண்டி, நேற் றைய இரவுதான் இங்கு வந்து சேர்ந்தது. இன்றைய இரவு இன்னெரு ஊருக்கு அனுப்பப்படப்போகின்றது. மூன்று ஊருக் கும் அப்பாலுள்ள அந்த மாட்டின் சொந் தக்காரன் அந்த மாட்டைத் தேடி இன் னும் நடையாய் நடந்துகொண்டுதான் இருக்கின்றுன்.

மாடு இப்பொழுது பூதப்பிள்ளையால் பிறர் கண்படாதவாறு கட்டிவைக்கப்பட் ள்ளது.

பூதப்பிள்ளை இங்கே பொருத்தமான பேனுவை எடுத்துத் திறக்கிறுர்

கோழிக்கள்ளன் பிடிபட்டு விட்டான். அவனுக்குரிய தண்டனைக்கான தீர்ப்பை பூதப்பிள்ளை எழுதத் தொடங்கிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
கலைமதி சனசமூக நிலையத்தை வாழ்த்துகின்றோம்

★ அன்னம் மில் ★

சிறந்தரக அரிசி வகைகள்
நல்லவித தவிடு வகைகளை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# அன்னம் மில்

சுன்னாகம் வீதி, — புத்தூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமதி சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு விழாவிற்கு
எமது வாழ்த்துக்கள்

## நாதன் வீடியோ சென்ரர்

புதிய பழைய சினிமாப் பாடல்கள்
தமிழ் - ஆங்கில - ஹிந்தி மொழிகளில்
பெற்றுக்கொள்ளலாம்

# நாதன் வீடியோ சென்ரர்

பருத்தித்துறை வீதி, — புத்தூர்,

உரிமையாளர்: செ. வசீகரநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது விளையாட்டுக் கழகத்தின் கரபந்தாட்ட வீரர்கள்



இடமிருந்து வலமாக: மு. செல்லத்துரை, வ. இரத்தினம் பொ. தருமு சி. நவரத்தினம், கா. கதிர்காமநாதன், சி. இரத்தினம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை வீதி, — புத்தூர்,

D80.8
P4T
AR

ஈழத்து இசைவானில் ஓர் இளையநிலா

# புதுவை "யாழிசைக் குழு"

★

ஈழத்தேய, மேலைத்தேய, நவீன மின்னியக்க வாத்தியக்கருவிகளுடன் ஈழத்தின் முன்னணி வாத்தியக் கலைஞர்கள் தேனிசை மழையில் தரும் தெவிட்டாத பாடல்களைக் கேட்க அழைத்து மகிழுங்கள்

## புதுவை யாழிசைக் குழு

முழு விபரமறிய தொடர்பு கொள்ளுங்கள்

நியூ கொலம்பியா
றெக்கோடிங் சென்ரர்
பஸ்நிலையம், அச்சுவேலி.

K. ராஜமுத்து
( அமைப்பாளர் )
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

ARCHIVES
249722
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கோவில் திருவிழாக்கள்
★ பொது நிகழ்ச்சிகள்
★ மங்கள வைபவங்கள் போன்றவற்றிக்கு

சிறந்தமுறையில் ஒலி அமைப்பவர்கள்

# நாதன்ஸ்
# ஒலி அமைப்பாளர்

யாழ்-பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

சகலவித மின்கலங்களுக்கு
மின் வலுவூட்டவும்
பழுதடைந்த மின்கலங்களை
சீர்படுத்துவதில்
விசேஷ திறமையும் நீண்டகால
அனுபவமும் உடையவர்கள்

## லிங்கம்ஸ்
## பற்றிசேவிஸ்

23, சங்கானை வீதி, அச்சுவேலி.
87, ஸ்ராண்லி வீதி, யாழ்ப்பாணம்.

கேற், வெல்டிங் கிறில், யன்னல்
போன்றவைகள் உரியகாலத்தில்
சிறந்த முறையில்
செய்து கொடுப்பவர்கள்

## ராஜா
## வெல்டிங் வேக்ஸ்

சங்கானை வீதி, அச்சுவேலி.
உரிமையாளர்: சி. சிவராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பரவசமூட்டும் பக்திப் பாடல்கள்
★ பழைய புதிய சினிமாப் பாடல்கள்
★ பிறமொழிப் பாடல்கள், வாத்திய இசைகள்
★ நாதஸ்வரம், பொப்இசை, நகைச்சுவைக் கதம்பம்
★ சினிமாக் கதைவசனம், நாடகங்கள்

இவை அனைத்திற்கும் சிறந்த முறையில் ஒலி அமைத்திட

## சுவேந்திரா சவுண்ஸ்

கலைமதி வீதி, புத்தூர் மேற்கு, புத்தூர்.

உரிமையாளர்: சி. செல்வம்

---

உங்கள் துவிச்சக்கர வண்டிகளை
சிறந்தமுறையில் திருத்துவதற்கு
நாடவேண்டிய இடம்



## கேதீஸ்வரன் சையிக்கிள் வேக்ஸ்

புத்தூர் மேற்கு, புத்தூர்.

உரிமையாளர்: தவராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமதி சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு விழாவிற்கு
எமது வாழ்த்துக்கள்

# ★ சாயி ரெலி ரேப் ★

## அச்சுவேலி

- மங்கள வைபவங்கள் வீடியோவில் படம் பிடித்துக்கொள்ள
- வீடியோ படங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ள
- புதிய பழைய பாடல்களை ஒலிப்பதிவு செய்துகொள்ள
- ரேடியோ, கசட் றக்கோடர்களை பெற்றுக்கொள்ள
- எவர் சில்வர் மற்றும் பரிசுப்பொருட்களை பெற்றுக்கொள்ளவும்

அத்துடன்

**உங்கள் வீட்டிற்குத் தேவையான**

**மின்சார உபகரணப் பொருட்களை**

**மொத்தமாகவும் சில்லறையாகவும்**

**பெற்றுக்கொள்ளலாம்.**

# SAIE TELE TAPE

Main Street, — Atchuvely.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சிறுகதை

# கல்

* குமுதன்

அந்தக் கலட்டி வெளியில் கனலாக எறிக்கும் வெய்யில் பார்வதியின் கண்களைக் கூசவைக்கிறது. புழுதிபடர்ந்த செம்பாட்டு நிலத்தில் பதியும் அவளது வெறுங் கால்கள் வெப்பம்தாங்காது அவளைக் கெந்தவைத்தபோதும், தலையில் வைத்த மூடல்பெட்டியை ஒரு கையால் பிடித்தபடி, கயிற்றிலே கட்டித் தொங்கும் அலுமினியப் பானையிலுள்ள நீரை தழும்பி வழியாமல் மறுகையால் நிதானமாகப் பிடித்துக்கொண்டு நடக்கிறாள்.

அவளது கணவன் சண்முகம் ஏனைய கல்லுடைக்கும் தொழிலாளர்களைப் போலவே வழமையாக காலையில் கிடைக்கும் ஏதாவது ஒரு உணவை மதியவேளைக்காகவும் கட்டிக்கொண்டு சென்றுவிடுவான். இன்று அதிகாலையில் ஏதோ கூட்ட அலுவலாகச் சென்றவன் அவசரத்தில் சாப்பாட்டையும் விட்டுவிட்டு போய்விட்டான். வேலைசெய்யும் இடத்தின் குறிப்பை அவனது பேச்சிலிருந்து அறிந்து வைத்திருந்த அவள் அவசர அவசரமாக சமையலை முடித்துக்கொண்டு சோற்றுப் பெட்டியுடன் புறப்பட்டாள். நடந்து செல்லும் அவளாலேயே தாங்கமுடியாத உச்சி வெய்யிலில் காய்ந்து கருகியபடி கல்லுடைக்கும் அவளது கணவன் சண்முகத்தையும் அவனைப் போன்ற தொழிலாளர்களையும் நினைத்தபோது அவர்கள் எவ்வளவு கடுமையான வேலையைச் செய்கிறார்கள் என்று அவள் பிரமிப்படைந்தாள்,

அவள்கூட அந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்தவள்தான், இளவயதிலிருந்தே கற்களை உடைத்துச் சல்லிகளாக்கும் வேலையைச் செய்துவரும் அவளுக்கு அந்தவேலையின் கஸ்டங்களும் துன்பங்களும் புதியதல்ல. ஆனால் இன்று அந்தக் கிராமத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களின் தாக்கம் ஏனைய தொழிலாளர்களோடு அவர்களை ஒப்பிட்டுப் பார்க்க அவளைத் தூண்டியது.

மூன்று வருடங்களுக்கு முன் அவனைத் திருமணம் செய்த நாட்களில் 'தேக அலுப்புக்காக' என்ற சாட்டில் ஏதாவது பாவித்துவிட்டு தானுண்டு தன் வீடுண்டு என்று அடங்கி இருந்தவன் இன்று இரவு பகலாக வாசிகசாலை, ஊர்ப் பொதுவேலைகள், உலகப் பிரச்சனைகள் என்று ஓடித் திரிகிறான். ஆரம்பத்தில் இப்படியே சென்றால் அவன் குடும்பப் பொறுப்புகள் உணர்வுகளிலிருந்து விடுபட்டு விடுவானோ என்ற அச்சம் பார்வதிக்கு எழுந்தாலும் - அவள் கண்டு அனுபவித்த சமூக ஏற்றத்தாழ்வுகள், கொடுமைகளுக்கெதிராக அவன் செயற்படுவதை உணர்ந்தபோது .. அவன் உற்சாகமடைந்தாள். அவைகளைப்பற்றி அடிக்கடி கூறும் அவனது வார்த்தைகள் வாழ்க்கையின் அர்த்தத்தை சிறிதளவாவது அவளுக்குப் புரிய வைத்திருந்தது.

''நான் மாட்டனெண்ணவும் கேக்காமல் என்னையும் இண்டைக்கு கூட்டத்திலை பேசப் போட்டிருக்கினம்... எனக்கெண்டா எப்பிடிப் பேசிறதெண்டு தெரியேல்லை.. ... நாங்கள் எழுதப் படிக்கக் கூடாதெண்டு அப்பவே பள்ளிக்கூடக் கதவுகளைச் சாத்திப் போட்டாங்கள் ..... ஏதோ எங்கடை அப்பு ஆச்சியின்ரை ஆக்கினையிலை சவுக்கடிப் பள்ளிக்கூடத்திலை படிச்ச நாலெழுத்துத்தான் .''

''ஏன் நீங்கள்தானே இப்ப நல்லா பேப்பர் புத்தகங்கள் படிக்கிறியள் .... நல்லாப் படிச்சவையைப் போலை கதைக்கிறியள்''

காலையில் அவன் தனது மனக்குறையை அவளிடம் கூறியபோது அவனை உற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகப்படுத்துவதற்காக பார்வதி கூறி ஞள்.

''பார்வதி... எத்தினை நாள் குடிச்சுப் போட்டு வந்து உன்னை அடிச்சிருப்பன்... இப்ப அதை நினைச்சா வெக்கமாக் கிடக்கு. கஸ்டங்களுக்கு காரணம் எங்கையோ கிடக்க ... எங்கையோ கொண்டுபோய் எங்கடை ஆவேசத்தை தீக்கிறம்''

அவளது மூன்று வருட வாழ்க்கையில் நாலைந்து தடவைகள் குடிபோதையில் இருக்கும்போது .. அவளை அடித்ததாக அவ ளுக்கு ஞாபகம். இருந்தும் அவள் தவ ருது படிக்கும் அந்தப் பத்திரிகையில் வந்த 'பெண் விடுதலை' பற்றிய கட்டுரை யை கைவிளக்கின் ஒளியில் படித்துவிட்டு பார்வதியிடம் இப்படிச் சொன்னபோது அவன்மீது அவளுக்கு இருந்த அன்பும் மதிப்பும் மேலும் உயர்வதை உணர்ந் தாள்.

அதுபோன்ற கட்டுரைகள் செய்திகள் வரும்போது அவளையும் படிக்கும்படி அவன் தூண்டுவான். சிறுவயதில் படித்த எழுத் துக்களில் அனேகமானவற்றை பரிச்சயமில் லாமையால் அவள் மறந்திருந்தாள். தான் கூட ஆரம்பத்தில் அப்படித்தான் என்று மிகவும் பொறுமையாக தெரியாத சொற் களை அவன் சொல்லிக் கொடுத்தான். அத ஞல் பார்வதியும் பத்திரிகை படிக்க ஆரம் பித்திருந்தாள். அது அவளது உணர்வுகளை மேலும் வளர்த்திருந்தது.

மடத்தல்கள், பிக்கான்கள் கற்பாறை களின்மீது மாறிமாறி ஓங்கிவிழும் ஒலிகள் அந்த அமைதியான வெளியில் அதிகதூரம் வரை கேட்கிறது. வேலைசெய்யும் இடத் தைக் கண்டுபிடித்துவிட்ட உற்சாகத்தில் பார்வதி நடையின் வேகத்தை கூட்டுகிருள். கற்கள் நொருங்கும்போது எழும் வெண் ணிறப் புழுதி சுற்றுடலிலுள்ள பற்றைகள் சிறிய பனைவடலிகள் எல்லாம் படிந்து பசிய நிறத்தை மறைத்து நிற்கிறது.

தொலைவில் பார்வதி வருவதைக் கண்டுவிட்ட அவர்கள் தலைகளை நிமிர்த் திப் பார்த்துவிட்டு தங்களது வேலையைத் தொடர்கின்றனர். அகழ்ந்தெடுத்த கற்கள் ஒருபுறத்தில் மலையாகக் குவிந்து கிடக்கி றது. தலையிலிருந்து கால்வரை புழுதியால் மூடிய உடல்களிலில் இடையிடையே வியர் வை வழிந்து கோடிட அவர்கள் கற்பாறை களுடன் பேராடிக் கொண்டிருக்கின்ற னர்.

''பிள்ளை உந்த தண்ணிச்சருவத்தைக் கொண்டாவன .. நாங்கள் இண்டைக்கு சண்ணு பட்டினியெண்டு நினைச்சம்.

பொன்னரப்பாவின் வார்த்தையைக் கேட்டுச் சிரித்தபடி தண்ணீர்ப்பானையை யும் மூடலுக்குள் இருந்த பேணியையும் எடுத்து நீட்டுகிருள்.

''இண்டைக்கு வெய்யில் அகோரமாக் கிடக்கு மேல் வெக்கை கீழ்வெக்கையெல் லாம் சேந்து அவி அவியெண்டு அவிக் குது''

''வெடி வைச்சுப் பிரிக்கிற பாறைக் கண்டத்தை மனிசர் பிரிக்கிறதெண்டா''

காகமேலீட்டால் ஆயுதங்களை விட்டு விட்டு ஒவ்வொருவரும் தங்களது முறைக் காகக் அவாவுடன் காத்து நிற்கின்றனர்.

''பேந்தென்ன ஒரேயடியாச் சாப் பாட்டை முடிச்சுப்போட்டு தொடங் கிறது ''

பனைவடலியில் தொங்கிய சாப்பாட் டுப் பைகள் கீழிறங்குகின்றன. அந்தச் சிறிய வடலி நிழலின் கீழ் நெருங்கியபடி அமர்கின்றனர்.

''புட்டு நல்லாக் காஞ்சுபோச்சு..... ஏதாலும் நனைக்க கிடக்கே''

தோட்டங்களுக்குக் கூலி வேலை செய் யச் செல்லும் தியாகு வேலைகள் குறைந்த தினல் கல்லுடைக்க வந்திருந்தான். அவன் தான் தனது புட்டுப்பார்சலை தூக்கியபடி வலம் வருகிறுன்.

சண்முகத்துக்கு சாப்பாடு குழைத்துக் கொண்டிருந்த பார்வதி சிரித்தபடி மீன் குளம்பை ஊற்றிவிடுகிருள்.

''சோமண்ணை மீன் வித்துப்போட்டு வந்திட்டாரே''

''ஓ .. அவர்தான் கொண்டுவந்து தந் தவர்''

''துரையுமைக்கு செங்கைமா[illegible] ரம் நாலுநாளாப் படுத்த படுக்கையிலை கிடக் கிறன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உந்த மொங்கு மொங்கிப்போட்டு நல்ல சாப்பாடு சாப்பிடாட்டி செங்கை மாரி என்ன... என்னதான் வராது''

''ஓமண்ணை அவருக்கு நெடுக வருத்தம் வருகுது... நான் ஆஸ்பத்திரியிலை காட்டச்சொல்ல... அவ ஏதோ தோஷமெண்டு பொங்கலுக்கு அடுக்குப் பண்ணுரு''

பார்வதியின் பதில் சண்முகத்துக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

எங்கோ சில வெடிச்சத்தங்கள் கேக்கின்றன. கையிலை வாங்கிய சோற்று உருண்டையுடன் சண்முகம் எழுந்து நின்று பார்க்கிருன். சற்று தொலைவிலுள்ள தெருவில் வந்த ஜீப்புக்களும் றக்குகளும் திடீரென நிற்கிறது. அதிலிருந்து குதித்த இராணுவத்தினர் பற்றை வெளிகளெல்லாம் துப்பாக்கியை ஏந்தியபடி ஓடுகின்றனர். கல்லேற்ற வந்த ராக்ரர் பதட்டத்தில் வேலியைப் பிரித்தபடி உள்ளே நிற்கிறது. துப்பாக்கியை நீட்டியபடி நாலைந்து இராணுவத்தினர் தங்களை நோக்கி வருவதை அவன் அவதானிக்கின்ருன்.

''ஒருத்தரும் பதட்டப்படாமை அப்படியே இருங்கோ''

அவர்கள் சாப்பிட்டபடியே அமர்ந்திருக்கின்றனர். கிடங்குகள் கல்லுக்குவியல்களைச் சுற்றிவந்தபின் எழுந்து நின்றபடி சாப்பிட்டுக் கொண்டுநின்ற சண்முகத்தை அவர்கள் நெருங்குகின்றனர்...

''ஓய்.. என்ன வெடி... நீங்க வைச்சதா?''

''சீ... அந்தக் கரண்ட் கம்பி''

தெருவோரமாக உயர்ந்த கேடர் கம்பிகளில் நீண்டுசெல்லும் வந்த பிரதான மின்கம்பித் தொடரைச் சண்முகம் காட்டுகிருன். அவன் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போதே மின்வலு கூடி பலத்த ஓசையிடன் வெடிக்கிறது. காரணத்தைக் கண்டுபிடித்துவிட்ட திருப்தியுடன்... சிரித்துக் கொண்டு ஓடுகின்றனர்.

முன்பெல்லாம் படை பட்டாளமென்ருலே அஞ்சி ஒடுங்கும் அவர்கள் அச்சமின்றி அலட்சியமாக நடந்துகொண்டதை பார்வதியைப் போலவே மற்றவர்களும் உணர்ந்தார்கள்.

''இண்டைக்கு கூட்டமெல்லே. நேரத்துக்குப் போகவேணும்... பிடியுங்கோ ஒருகை''

தருமு உச்சாகத்துடன் சொல்லிவிட்டு மடத்தலைத் தூக்கிக் கற்பாறையுடன் மோதுகிருன். காலையிலிருந்து முயற்சி செய்தும் அந்தப் பெரிய கல்லை அகற்ற முடியவில்லை. அந்த ஆவேசத்தில்தான் அடித்துநொருக்கும் நோக்குடன் மூச்சைப் பிடித்தபடி மோதுகிருன். நொருங்கிய கல்லின் கூரியசிராய் ஒன்று வேகமாகவந்து அவனது முழங்காலில் பதிகிறது. காலிற் படிந்த புழுதிப்படையை மீறி இரத்தம் வழிகிறது.

''உதோடை மாயேலாது... அணியங்களை எடுத்துக்கொண்டு நடவுங்கோ வீட்டை''

''என்ன தியாகு... உதுகும் எங்கடை சமுகப்பிரச்சனையள் மாதிரித்தான்... மோட்டுத்தனமா மொங்கி வேலை இல்லை... இருப்பை அறிஞ்சு உடைக்கவேணும்''

''ஓ... ராத்திரி அண்ணை சொன்னுர்... மூடக்கிழவன்ரை கதை... உந்தக்கல்லை... உடைக்கேலாட்டி மலையளை எப்பிடி உடைக்கப்போறம்''

மண்வெட்டியை எடுத்து ஆழமாக மண்ணைக் கிளறுகிருன் சுந்தரம். அந்தக் கல்லை உடைத்துவிட்டு வேலையைநிற்பாட்டுவது என்ற.. முடிவுடன்.. எல்லோரது கவனமும்.. அதில் திரும்புகிறது. பார்வதியும்.. கற்களைக் கடகத்தில் பொறுக்கிக் கொட்டுவது போன்ற சிறு உதவிகளைச் செய்து கொண்டு நிற்கிருள்.

கல்லு முழுமையாக வெளியே தெரிகிறது. கல்லின் அமைப்பை அனைவரும் அவதானித்து... முடிவுக்குவந்த பின் ஆப்புகளை வைத்து அடிக்கின்றனர். சண்முகம் மடத்தலைத்தூக்கி நிதானமாக அடிக்கிருன்.

'தம்பி . சிம்பு . பறக்குமடா . கவனம்'

கொந்தாலியால் கொத்திக் கொண்டிருந்த பொன்னப்புக் கிழவர் எச்சரிக்கிருர். ஒருமுறை கண்ணுக்குள் சிம்பு பறந்ததினல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகண்பார்வையை இழந்த பயம் மற்றவர்களைப் பாதுகாக்க அவரைத் தூண்டுகிறது.

நிதானமான மடத்தல் அடிகள் மாறி மாறி ஆப்புகளின் மேல்விழ அகன்று நீண்டுகிடந்த அந்தப் பெரிய கல்லில் வெடிப்பு ஏற்படுகிறது .: அனைவரது...முகத்திலும் ஒரு மகிழ்ச்சியும் உற்சாகமும் பளிச்சிடுகிறது. அலவாங்குகள் பிக்கான்கள் தொடர்ந்து அவற்றில்விழ பகல் முழுவதும் அவர்களை உலைத்த அந்தக்கல் இருந்த இடம் தெரியாமல் மறைகிறது..

அவர்கள் தீர்மானித்ததுபோல கூட்டத்திற்குச் செல்வதற்காக வேலையை முடித்துக்கொண்டு அந்தக் களையிலும் ஒரு உற்சாகத்துடன் வீடு திரும்புகின்றனர்.

வரும் வழியில் அந்தச் செம்பாட்டு மண்ணில் பச்சைப்பசேலென்று வளர்ந்திருந்த வெங்காயம் மிளகாய் செடிகள் காலையில் நீரிறைத்த குளிமையுடன் மாலை வெய்யிலிலே நிமிர்ந்து நிற்கிறது. சண்முகம் ஒருகணம் நின்று உற்றுப்பார்க்கிறான்.

''பார்வதி பாத்தியா மூன்று மாதத்துக்கு முன்னம் நாங்கள் கல்லுக்கிளறின நிலம்.. பயிரும் பச்சையுமா எவ்வளவு வடிவா... இருக்கு..''

பார்வதி திரும்பிப் பார்க்கிறாள். அந்தப் பயிர்களின் செழுமை அவளது கண்களுக்குக்கூட குளிர்மையாக இருக்கிறது. அவைகளெல்லாம் அவர்களது உழைப்பின் பயன்கள் என்று எண்ணும்போது உள்ளூர ஒரு மகிழ்ச்சி அவளுக்கு ஏற்பட்டாலும் தங்களது வாழ்வின் வறுமைநிலையை எண்ணியபோது.. அந்தச் சமூக அமைப்பின் மீதே அவளுக்கு வெறுப்பேற்பட்டது.

கூட்டம் ஆரம்பமாகியது—அந்தக் கிராமத்தில் வாழும் பெண்கள், ஆண்கள், வயோதிபர், இளைஞர்கள் எல்லோருமே... அந்த மைதானத்தில் கூடிவிட்டார்கள். அவர்களது நாளாந்த வாழ்க்கைப் பிரச்சனைகள், குடியிருப்புப் பிரச்சனைகள் பற்றியே அங்குபேச... எழுந்தவர்கள் அனைவரும் பேசுகின்றனர்... அவர்களின் பேச்சுக்களால் உந்தப்பட்டு.. உறுதியுடன் எழுந்து நின்று சண்முகம் பேசுகிறான்.

'தோழர்களே... தோட்டத் தொழிலாளர்கள் தமது உயிர்களைப் பலிகொடுத்து அன்று மலைநாட்டிலே காடுகளை வெட்டி தேயிலைச் செடியை நட்டார்கள்.. மலைகளைப் பிளந்து றோட்டுக்கள் போட்டார்கள் ஆனால் நாட்டுக்காக உழைத்த அந்த தொழிலாளர்களுக்கு நல்ல வாழ்க்கை கிடைக்கவில்லை.. நாடற்றவர்களாக்கி நாட்டைவிட்டுத்துரத்தப்படுகிறார்கள்.. நாங்களும் கலட்டி நிலங்களைக் கிளறி தோட்டங்களாக்குகிறோம்... கல்லுகளை உடைத்து வீடுகள் கட்ட, தெருக்கள் போட உதவினோம் ஆனால் எங்களது வாழ்க்கை கொட்டிலிலும் குடிசையிலும் தான் தொடர்கிறது. அதுமட்டுமல்ல. அந்தக் கொட்டிலிலும் குடிசையிலும்கூட எங்களை வாழவிடாது குடியெழுப்புவதற்கு இங்கு சதி நடக்கிறது. இந்த நிலை ஏன்? நிலத்திலுள்ள கல்லைக் கிளறி நிலத்தைப் பண்படுத்தினால் மட்டும் மோதுமா? சமுதாயத்திலும் நாட்டிலும் பெரிய பாறுங் கல்லுகள்.. மக்களின் முன்னேற்றத்துக்கு தடையாக இருக்கின்றன. அவைகளை அடித்து நொருக்கும் ஆற்றலையும் துணிவையும் நாங்கள் பெறவேண்டும் அதற்காக நாங்கள் விஷயங்களைப் படிக்க வேண்டும்.. எத்தகைய எதிரிகளையும் முறியடிக்கும் போராளிகளாக மாறவேண்டும்..

கூட்டத்தில் இருந்தவர்கள் அனைவரும் சண்முகத்தின் ஆத்திர உணர்வுடன் ஒன்றிவிடுகின்றனர். ஒருகையை நிலத்தில் ஊன்றி காலை மடித்தபடி உட்கார்ந்திருந்த பார்வதி உணர்வு மேலீட்டால் நிமிர்ந்து உட்கார்கிறாள்.

கிராமத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம்... அவனது குரல் எதிரொலிக்கிறது.. அந்தக் கிராமம் விழிப்படைகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களை நீங்கள் அடக்கி ஆளுக!

யோ. பெனடிக்ற் பாலன்

சிங்களர் எம்மை
அடக்கி ஆள்கிறார்
என்று சொல்லியே
வீர சுதந்திரம்
வேண்டி நிற்கிறீர்.
சேர்ந்து வாழவே
முடியாதென்று
திடமாய்ச் சொல்கிறீர்
நாம்
ஆண்ட தமிழர்கள்
சேர சோழ
பாண்டியர் பரம்பரை
என்று கூறியே
மீண்டு மொருமுறை
ஆளத் துடிக்கிறீர்.
நன்று. நன்று
அடக்குமுறைக் கெதிராக
ஆர்த்தெழுவதும்
விடுதலை கேட்பதும்
நீதி நீதி.
நாங்களோ
தாழ்த்தப்பட்ட தமிழர்கள்
எங்களைத் தாழ்த்தியோர்
சிங்களர் இல்லை.
நாங்கள்
உங்கள் நிலங்களில்
ஆண்டாண்டு தோறும்
அடிமை குடிமையாய்
வாழ்ந்து வருபவர்.
நீங்கள் எம்மை
அடக்கி யொடுக்கி
வந்துள்ள போதும்
உங்களோடு
சேர்ந்தே வாழ்கிறோம்
பிரிந்து போகக்
கேட்டதேயில்லை;
ஆகையால்
எங்களை நீங்கள்
மீண்டும் மீண்டும்
அடக்கி ஆளுக.
உரிமைகள் இழந்து
உங்கள் முன்னே
அடக்க ஒடுக்கமாய்
தாழ்ந்து நிற்கிறோம்
எங்களை நீங்கள்
அடக்கி ஆளுக.
ஈழ மண்ணிலே
உள்ள நிலமெல்லாம்
உங்கள் உரிமையாம்
உழுபவனுக்கே
நிலஞ் சொந்த மென்று
கூறிய மடையன்
எந்த இனத்தவன்
என்று தெரியாது
நாங்கள் பிறக்கும்போது
தொண்டு செய்யவென்றே
அம்மணமாகப்
பிறந்த குடிமைகள்
எங்களை நீங்கள்
அடக்கி ஆளுக-
உங்கள் நிலங்களில்
உழுது மடிய
உங்கள் வீடுகளில்
தொண்டு வேலைகள்
தொடர்ந்து செய்ய
ஒரு பரம்பரை
வேண்டுந்தானே
தாழ்த்தப்பட்டோர்
நாங்கள் இருக்கிறோம்
எங்களை நீங்கள்
அடக்கி ஆளுக.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
கலைமதி சனசமூக நிலையத்தை வாழ்த்துகின்றோம்

* ஸ்ரீ ஆனந்தா ரூன்ஸ்போட் சேவிஸ் *

★

**மண், கல்லு, மற்றும்**
**வீட்டுப்பொருட்கள் தளபாடங்கள்**
**போன்றவைகளை ஏற்றி இறக்குவதற்கு**

# ஸ்ரீ ஆனந்தா
# ரூன்ஸ்போட் சேவிஸ்

சிறுப்பிட்டி தெற்கு, - நீர்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதியும் வர்க்கமும்

கே. செந்திவேல்

வரலாற்றுக் காலம் முதற்கொண்டு இந்தியாவின் அரசியல், மதம், கலாச்சாரம் போன்றவற்றின் நேரடித் தாக்கங்கள் காலத்திற்குக் காலம் இலங்கையில் பரவி வேரூன்றி வளர்ந்துவந்துள்ளதைக் காண லாம். அந்தவகையிலே இந்தியாவில் ஆழப் பதிந்துள்ள சாதிமுறையும் அதிலிருந்து எழுந்த தீண்டாமையும் நமது நாட்டிலும் ஆதிக்கம் பெற்று வந்துள்ளதைக் காண முடிகிறது.

இந்திய சமுதாயத்தின் நிலப்பிரபுத்துவ உறவுகளின் அடிப்படையிலேயே சாதியும் தீண்டாமையும் நிலைபெற்று வந்துள்ளன. இம் முறை இந்திய ஆன்மீகத் தத்துவம் என்று புகழப்படும் இந்துமதத்தின் பண் பாட்டுடன் பின்னிப் பிணைக்கப்பட்டிருப் பதையும் காணலாம். இதனால் இந்தியா விலும் இலங்கையிலும் குறிப்பாக இந்துக் களிடையே சாதியும் தீண்டாமையும் வேர் விட்டு வளர்ந்த விருட்சமாகக் காணப்படு கின்றது,

இச் சாதி முறையை இல்லாதொழிப் பதற்கு பல்வேறு காலகட்டங்களிலும் பற் பலர் முயன்ற போதிலும் அவர்களாலோ அன்றி அவர்கள் கூறிய வழிமுறைகளாலோ அது முடியாமல் போய்விட்டது. இன்றும் கூட சாதியை ஒழிக்க பல்வேறு வழிகளைக் கூறுவோர் இருக்கக் காண்கின்றோம். அது தானாகவே மாறிவிடும் என்போரும், இன விடுதலை பெற்ற பின் சாதியை ஒழிக்க முடி யும் என்று கூறுவோரும், சாதிமுறையால் பாதிக்கப்பட்டவர்கள் சிறந்த பொருளா தாரத்தைத் தேடிக்கொண்டால் அது ஒழிந்துவிடும் என்று சொல்பவர்களும், கடுமையான சட்டங்களை இயற்றி நடை முறைப் படுத்துவதன் மூலம் அதை ஒழிக்க லாம் என்று வழி கூறுபவர்களும் உள்ள னர். இவர்களுடன் கூடவே காந்தி கூறிய முறையில் அகிம்சை வழி சென்று சாதி ஒழிப்போம் என்று முன்வந்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால் சாதியோ ஒழிய வில்லை. தீண்டாமை முற்றாக மறையவில்லை.

அப்படியாயின் சமுதாயச் சாபக்கேடு என்று வருணிக்கப்படும் சாதியை-தீண்டா மையை ஒழிக்க வழிதான் என்ன? என்ற கேள்வி எழுவது இயல்பானதே. இங்கே தான் மாக்சிச வாதிகள் குறிப்பாக கம்யூ னிஸ்டுக்கள் கூறும் காரணங்களும் வழி முறைகளும் உற்று நோக்கத் தக்கதாகின் றது.

அதாவது அரசியல் ரீதியில் நிலப்பிர புத்துவ அம்சங்கள் பல மாற்றமடைந் துள்ள போதிலும் அடிப்படையான சமூக உறவுகளில் பாரிய மற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை. சாதியை- தீண்டாமை யைத் தனியே மதக்கலாச்சாரத்துடன் மட்டும் தொடர்பு படுத்தி மட்டுப்படுத்த முடியாது. அவற்றுக்கு உள்ள வர்க்க வேர் களையும் அதன் ஆழத்தையும் கண்டு கொள்வது அவசியமாகும். இவ் வர்க்க அடிப்படையைக் கண்டு கொள்ள மறுக்கும் எவராலும் சாதி-தீண்டாமையை ஒழிக் கும் எந்தவழியையும் காணவியலாது.

ஐரோப்பிய நிலப்பிரபுத்துவம் வளர்ச்சி பெற்று வந்த ஐரோப்பிய முதலாளித் தால் நிர்மூலமாக்கப்பட்டது. மாபெரும் பிரஞ்சுப்புரட்சி, ஜெர்மன் புரட்சி, இங்கி லாந்துப்புரட்சி போன்றவற்றால் தகர்க்கப் பட்டது. அதனால் ஐரோப்பிய நாடுகளின் சமுதாய உறவுகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. நிலப்பிரபுத்துவ அமைப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்தெறிந்த ஐரோப்பிய முதலாளித்துவம் விஞ்ஞானத்தின் துணையுடன் முன்னேறி முதலாளித்துவ அமைப்பை நிலைநிறுத்திக் கொண்டது, எனவே ஒரு பாரிய சமுதாய மாற்றத்தினூடாகவே முதலாளித்துவம் அங்கு அரங்கிற்கு வந்ததைக் காண்கிறோம்.

இந்நிலை கீழைத்தேச நாடுகளில் குறிப்பாக இந்தியாவில் ஏற்படவில்லை. இந்தியாவைக் கைப்பற்றி காலனியாதிக்கம் புரிந்த பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்திய நிலப்பிரபுத்துவத்தை எவ்வகையிலும் நிர்மூலமாக்கவில்லை. அதன் சமூக உறவுகளில் மாற்றங்களைக் கொண்டுவரவில்லை. அதேவேளை அந்த நிலப்பிரபுத்துவத்துடன் இணைந்து அதற்கு மேலும் புதிய வாய்ப்புக்களையும் சலுகைகளையும் அளித்தே தனது சுரண்டலைத் தொடர்ந்தது. ஆகலால் இந்திய நிலப்பிரபுத்துவம் காலனியாதிக்கத்தால் தகர்க்கப்படாத ஒன்றாகவே இருந்தது.

மேலும் இந்தியாவில் வளர்ந்துவந்த முதலாளித்துவம் காலனியாதிக்கத்தை எதிர்த்து தேசிய இயக்கங்கள் நடத்திய போதும் இந்திய நிலப்பிரபுத்துவத்தை அது எள்ளளவேனும் எதிர்த்ததாக இருக்கவில்லை. அன்றைய தேசிய இயக்கத்தின் தலைவர்கள் கிட்டத்தட்ட எல்லோருமே இந்துமத ஆன்மீகத் தத்துவத்தினால் கட்டுண்டவர்களாகவே காணப்பட்டனர்.

எனவே வெள்ளையர்களிடம் இருந்து சுதந்திரம் இந்தியர்களின் கைக்கு மாற்றப்பட்டபோதிலும் இந்திய நிலப்பிரபுத்துவ உறவுகளில் அடிப்படை மாற்றம் எதுவுமே இடம்பெறவில்லை. இன்னும் அந்த உறவுகளின் தன்மைகள் தொடரப்படுகின்றன. அவற்றின் இறுக்கத்தன்மை வாய்ந்த சாதி முறையும் - தீண்டாமையும் சமூக அடிப்படையில் ஆதிக்கம்பெற்று விளங்குவதைக் காணமுடிகிறது. இந்நிலை நமது நாட்டிற்கும் முற்றிலும் பொருந்தக் கூடியதொன்றாகும்.

அரை நிலபிரபுத்துவ அரைக்காலனி நிலையுடன் கூடவே நவகாலனித்துவ நிலையை நோக்கி வேகமாக வளர்ந்து வரும் நமது நாட்டிலே சாதியாலும் தீண்டாமையாலும் ஒடுக்கப்பட்ட லட்சக்கணக்கான மக்களின் விடுதலை ஒரு வர்க்கக் கண்ணோட்டத்திலேயே நோக்கப்படல் வேண்டும்.

ஒரு சமுதாய மாற்றம் அடிப்படையில் இடம்பெற்று இன்றைய அமைப்பின் இடத்தில் தொழிலாளிவர்க்கத்தின் தலைமையிலான சோஷலிச சமூக உறவுகள் உருவாக்கப்படுவதன் மூலமே சாதி - தீண்டாமையின் வர்க்க வேர்களை முற்றாக அறுக்க முடியும். இந்த வர்க்க வேர்களை மேலெழுந்தவாரியான எந்தவொரு வழிமுறையாலோ, அன்றி இனவிடுதலை என்ற மார்க்கத்தாலோ அறுக்கமுடியாது. ஏனெனில் பிரபுத்துவ - சாதிமுறையின் மூலவேர் இன்றைய முதலாளித்துவ அமைப்புடன் இறுகிய ஒன்றாகவே உள்ளது.

பாராளுமன்ற அரசியல் மார்க்கத்தில் சாதி ஒழிப்பிற்கான கோஷங்கள் உரத்துக் கேட்கலாம். அல்லது இனவிடுதலை பெற்றபின் அடுத்தவேலை சாதி ஒழிப்புத்தான் என்று வாக்குறுதி வழங்கப்படலாம். இவை யாவும் சமுதாய உறவுகளில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவரும் வர்க்க அடிப்படையைக் கொண்டிருக்கவில்லை என்பதை ஊன்றி அவதானித்தல் அவசியம். சமுதாய மாற்றத்தின் பிரதான உந்துவிசை வர்க்க அடிப்படையே அன்றி, இன அடிப்படையோ, அன்றி சாதி அடிப்படையோ அல்ல. இனமுரண்பாட்டின், சாதி-தீண்டாமை முரண்பாட்டின் தன்மைகள் யாவும் வர்க்க அடிப்படையைக் கொண்டதேயாகும்.

நிலப்பிரபுத்துவம் நீண்ட நெடுங்காலம் நிலைத்திருந்த கீழைத்தேய நாடுகளில் ஒன்றான சீனாவின் அனுபவம் இவ்விடயத்தில் பயனுள்ளது. இந்திய - சீன நிலப்பிரபுத்துவ அம்சங்களில் வேறுபாடுகள் நிலவிய போதிலும் வர்க்க அடிப்படை ஒன்றேயாகும். ஆனால் இந்தியாவில் இடம்பெற்ற ஆட்சி மாற்றம்போல அன்றி, சீன நிலப்பிரபுத்துவத்தையும், அந்நிய ஏகாதிபத்தியத்தையும், உள்ளூர் தரகு முதலாளித்துவத்தையும் தொழிலாளி வர்க்கத்தின் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையிலான ஒரு சமுதாயப்புரட்சி நிர்மூல மாக்கியதைக் காண்கிறோம். அங்கே பழைய ஆட்சியமைப்பை உடைத்தெறிந்து தொழிலாளி விவசாயிகளுடைய சோஷலிச அமைப்பு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. சீன நிலப்பிரபுத்துவத்தின் சகல வர்க்க வேர்களும் ஒரு சமுதாயப் புரட்சியினால் அறுக்கப்பட்டுள்ளது. ஆதலால் அங்கு சோஷலிசத்தின் கீழ் எஞ்சியுள்ள நிலப்பிரபுத்துவ எற்சசொச்சங்கள் யாவும் படிப்படியாக துடைத்தெறியப்பட்டு வருகின்றன. அவை ஒருபோதும் மீள் அமைப்பைப் பெறப்போவதில்லை. காரணம் சமுதாய மாற்றம் அடிப்படையில் நிகழ்ந்திருப்பதும் சோஷலிசம் ஸ்திரமடைந்து வளர்ந்து வருவதுமாகும்.

இத்தகைய ஒரு சமுதாயமற்றம் இந்தியா இலங்கை போன்ற நாடுகளிலே வர்க்க அடிப்படையில் இடம் பெறுவதன் மூலமே சாதி தீண்டாமையை அதன் வேர்ப்புலத்தில் இருந்து அகற்ற முடியும். அந்தகைய ஒரு மாற்றம் வரும் வரை சாதி தீண்டாமை ஆதிக்கம் பெற அதன்வழியில் விட்டுவிடவும் முடியாது. அவற்றுக்கு எதிரான இயக்கத்தை அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியிலும் ஏனைய உழைப்பாளி வர்க்கத்தின் மத்தியிலும் முன்னெடுக்க வேண்டும்.

சாதி தீண்டாமைக்கு எதிரான எந்த இயக்கமும் அதன் வர்க்க குணம்சத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதையே வற்புறுத்துகின்றோம். இது இனப்போராட்டத்திற்கும் பொருந்தக் கூடியதுதே. வர்க்க நோக்கு அற்ற இனப் போராட்டம் இறுதியில் இனவாதத்திலேயே சென்று விழும். அதேபோல் வர்க்க அடிப்படையற்ற சாதிப் போராட்டம் சாதிவாதத்தில் அமிழ்ந்து விடும்.

இது கடந்த காலத்தின் சாதி தீண்டாமைக்கு எதிரான இயக்கங்களின் போராட்டங்களில் கிடைத்த செழுமையான அனுபவம். வர்க்க அடிப்படை நோக்கற்ற எந்தக் கொள்கையும் அது எவ்வளவு வேகம் கொண்டதுபோல் தென்பட்டாலும் நாளடைவில் தேய்ந்து குறுகித் தோல்வியடைந்துவிடும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும் வர்க்க ரீதியில் வசதிபடைத்தோர் இருக்கிறார்கள். அத்தகையோர் ஒருபோதும் நிலமற்ற-உழைக்கும் வர்க்கத் தாழ்த்தப்பட்டவர்களை அணைத்துக் கொண்டது கிடையாது. அதேபோல் உயர்சாதியினர் எனப்படுவோர் மத்தியிலும் நிலமற்ற - உழைப்பாளர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். அவர்களையும் உயர் சாதியைச் சேர்ந்த பெரு வர்க்கத்தினர் அரவணைப்பது கிடையாது. இங்கேதான் வர்க்க அளவு கோல் கொண்டு ஒவ்வொரு பிரச்சினையையும் அணுக வேண்டும் எனக் கம்யூனிஸ்டுக்கள் அடிப்படையில் கோருகிறார்கள்,

எனவே நிலம், கூலி என்பனவற்றுடன் கூடவே சாதி தீண்டாமைக்கு ஆட்பட்டு உள்ள ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ்த் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினை அடிப்படையில் வர்க்கப் பிரச்சினையே யாகும். பின்தங்கிய கிராமங்களிலும், ஏனைய பிரதேசங்களிலும் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது வர்க்க நிலை உணர்ந்து உழைக்கும் வர்க்கத்திற்கான இயக்கங்களிலும், போராட்டங்களிலும் அணிதிரள்வதே சரியானதொன்றாகும். அத்தகைய இயக்கங்களினூலேயே இன்று ஓரளவுதானும் சமத்துவமும், தலைநிமிர்ந்த வாழ்வும் பெறக் கூடிய நிலை ஏற்பட்டதென்ற அண்மைக்கால வரலாற்றை புரிந்து முன்செல்வது இன்றைய தேவையாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலை—விமோசனம் போராட்டப்பாதையில் தான் தங்கி உள்ளது. அப்போராட்டம் வர்க்க அடிப்படையையும், சமுதாயமற்றத்தை உட்கருவாகக்கொண்டதொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான இயக்கத்தினுல் முன்னெடுக்கப்படுவதை தாழ்த்தப்பட்ட சாதாரண வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மனிதனும் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீன சஞ்சிகைகள் - புத்தகங்களைப்
பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்

# வசந்தம் புத்தக நிலையம்

**374 A, மணிக்கூட்டு வீதி**
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)
**யாழ்ப்பாணம்.**

கார், மினிபஸ், லொறி, போன்ற
வாகனங்களை சிறந்த முறையில்
பழுதுபார்ப்பதற்கும், டிங்கர்
பெயின்றிங் வேலைகள்
செய்வதற்கும்

## மகேந்திரா பெயின்றிங்வேக்ஸ்

## ரத்தினம் டிங்கர் கறுஜ்

**வசாவிளான் வீதி,**
**அச்சுவேலி**

சகலவிதமான உடைகளையும்
குறித்த நேரத்தில் செய்துகொள்ள
நாடுங்கள்

# ரதா ரெயிலறிங்

**பிரதானவீதி அச்சுவேலி**
**Ratha Tailoring**
**Main Street, — Atchuvely.**
உரிமையாளர்: S. S. முத்து

சகலவிதமான
பலசரக்குப் பொருட்களையும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள

# நடராசா ஸ்ரோர்ஸ்

**பருத்தித்துறை வீதி**
**சிறுப்பிட்டி வடக்கு**
**சிறுப்பிட்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு விதங்கள்

★ முருகையன்

பாட்டர் கிழவர்
தம் பல் இல்லா வாயினால்
நூற்றுக் கணக்கான பேய்க்கதைகள் சொல்லுவார்.
கேட்கும் சிறுவர்களும் பல் இல்லா வாய் பிளந்தே
'ஆ!' என்றவாறு
மிக ஆச்சரியம் கொள்வார்கள்.

கொள்ளிவாய்ப் பேய்கள் எல்லாம்
குபுக்கென்று நெருப்புக் கக்கி
வெள்ளி, செவ்வாய்கள் தோறும்
வெளிக்கிட்டுத் திரியும் என்றும் .....

சுடலையிற் புளியின் மேலே
தொற்றிய முனியைக் கட்டிப்
பிடரியில் ஆணி வைத்தார்,
பிலாவடிச் சின்னர் என்றும்...

ஓங்கியே அடித்த பின்னர்
உறிஞ்சி, நல்லிரத்தம் முற்றும்
வாங்கிய பிசாசு,
பற்றை வளவிலே
உறங்கும் என்றும்......

பல பல கதைகள் சொல்வார்.
பாட்டனார்.
சிறுவர் கேட்பார்.
சில வருடங்கள் போக,
சிறுவர்கள் இளைஞர் ஆனார்.

இளைஞரின் அநுபவத்தில்
இப்படிப்பட்ட பேய்கள்
நுழைவது குறைந்து போச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிய அவர்கள்.
'ஓகோ,
தெரு விளக்குகளின் சிறந்த மின் ஒளியினுல்,
பேய்கள், பிசாசுகள் முனிகள் யாவையும்
ஓட்டம் பிடித்தன போலும்!
இப்போது,
முன்னர்ப் போல அதிகம் பேய்களைக்
காண்பது மிகவும்அருமையாய் உள்ளது'—
என்ற ரீதியில் எண்ணத் தொடங்கினர்.

இளைஞரின் எண்ணம் இப்படி இருந்தது:

ஆனுல், ஒன்று—
வேறு விதங்களில் மிகப்பல பேய்கள்
குறுக்கும் மறுக்கும் திரிவன,
இருட்டிலும் வெளிப்பிலும் இரவிலும் பகலிலும்.

---


கலைமதி சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு விழாவிற்கு
எமது வாழ்த்துக்கள்

உதயதாரகை
சனசமூக நிலையம்
கிராம அபிவிருத்திச் சங்கம்
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
விளையாட்டுக் கழகம்
சமாதானசபை
கல்வி வட்டம்

சிறுப்பிட்டி தெற்கு
நீர்வேலி

நிர்வாகிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ புதிய பழைய பக்திப் பாடல்கள்
★ புதிய பழைய சினிமா பாடல்கள்
★ புதிய பழைய பொப்பிசைப் பாடல்கள்
★ புதிய பழைய ஹிந்திப் பாடல்கள்
★ புதிய பழைய இசைக்கதை வசனங்கள்

மங்கள வைபவங்கள் மேடை நிகழ்ச்சிகள்
கோவில் திருவிழாக்கள்

எதுவானாலும் சிறந்த முறையில் ஒலி அமைப்பு
செய்திட இன்றே அழைத்து மகிழுங்கள்

★ சுவர்ணா சவுண்ஸ் ★

சுன்னாகம் வீதி, — புத்தூர் மேற்கு,
புத்தூர்.

உரிமையாளர்: N. T. S. சிவலிங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமதி சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு விழாவிற்கு
எமது வாழ்த்துக்கள்

# தேவராசா டிங்கர் கருஜ்

★

கார், லொறி, மினிபஸ், மற்றும் டீசல்
பெற்ரோல் வாகனங்களை நல்லமுறையில்

டிங்கர், பெயின்றிங்

வேலைகள் குறித்த நேரத்தில்
செய்து கொடுப்பவர்கள்

# தேவராசா டிங்கர் கருஜ்

ஆவரங்கால் சந்தையடி,
ஆவரங்கால்.

உரிமையாளர்: பூ. தேவராசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ திருமண வைபவங்களா?
★ மற்றும் மங்கள விழாக்களா?
★ ஆலய உற்சவங்களா?

அழைத்து மகிழுங்கள்

புத்தூர் மேற்கு
வாணி
இசைக் குழுவினர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
P. S. தேவன்
மஸ்கன் வீதி, — நவக்கிரி,
புத்தூர்.

உங்கள் அழகிய
கலர்ப் புகைப்படங்களை
நல்ல முறையில்
தயாரித்துக் கொடுப்பவர்கள்

சரவணாஸ்
ஸ்ருடியோ
வல்லை ரோட்,
அச்சுவேலி.

O பாடசாலை உபகரணங்கள்
O அப்பியாசக் கொப்பிகள்
O பாடப் புத்தகங்கள்
O உள்நாட்டு வெளிநாட்டு சஞ்சிகைகள்
O வாழ்த்து மடல்கள்
O கலண்டர், டயறிகள்

அனைத்தையும்
ஒரே இடத்தில் சகாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்

மற்றும்

அழகிய அச்சுவேலைகளுக்கும்

ராஜா புத்தகசாலை
அச்சகம்
அச்சுவேலி

பலசரக்குச் சாமான்களை
நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ள

V

கண்டி ஸ்டோர்ஸ்
பிரதான வீதி.
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான டீசல் வாகனங்களும்
திருத்திக் கொடுப்பவர்கள்

# முருகன் கரேஜ்

ஆவரங்கால் சந்தையடி,
ஆவரங்கால்.

உரிமையாளர்: க. முருகேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடில்லா வாழ்வு — நாடகம் —

குழந்தை ம. சண்முகலிங்கம்

திரை விலகும்போது 'சைக்ளோராமா' ஒளி செம்மஞ்சள் நிறத்தில் இருக்க மேடையில் பலர் நின்று பலவிதமான, விவசாயம் சம்பந்தமான தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். இரண்டொரு விநாடிகள் சென்றதும் இரண்டொரு உரைஞர் முன் இடது மேடையில் வந்து நிற்க அவர்கள் பாடுகின்றனர். மற்றவர்கள் தொடர்ந்து தமது செயல்களில் ஆறுதலான வேகத்தில் ஈடுபட்ட வண்ணமிருக்கின்றனர்.

உரைஞர்: [பாடல்]

ஆதிக்கு முன்னே!...... ஆதியாம்
ஆதிகாலந் தன்னிலே! .....
சாதி சமய பேதம் ஏதும் இல்லாத போது.
மாதிக்கு எங்கும்!......மக்கள்
மகிழ்வுடன் வாழ்க்கையிலே!......
காதல் கனிவு கொண்டு களிப்புடன்
பாடுகின்றார்!
— ஆதிக்குமுன்னே! .....

உரைஞர் சற்று விலகி நிற்க, ஒளிப்பொட்டு மறைந்து, பின் மேடைமுழுவதும் ஒளிபடர அவர்கள், அதாவது வேலையில் ஈடுபட்டிருந்தோர் அனைவரும் [ஆண்கள், பெண்கள்] அரிவுவெட்டுவது போல் பாவனை செய்து இரண்டொருவர் பாடுகின்றனர்.

சிலர்: ஆம்பிளைங்க கட்டும்வேட்டி
ஏலேலக் குயிலே
அசடுபட்ட வெள்ளைவேட்டி ஏலேலக்குயிலே
பொம்பிளைங்க கட்டும்பட்டு ஏலேலக்குயிலே
அழகான மஞ்சப்பட்டு ஏலேலக்குயிலே.

இதற்கிடையில் அரிவு வெட்டுவோரில் ஒரு இளைஞனும் யுவதியும் இடையிடையே தம்மை மறந்த களிப்பில் வேறுபாடலைப் பாடுகின்றனர். இவர்கள் பாடும் போது மற்றையோர் கேளாததுபோல் தம் வேலை வேலையில் ஈடுபட்டிருப்பர்.

இளைஞர்: ஊரார் உறங்கையிலே
உற்றாருந் தூங்கையிலே,
நல்லபாம்பு வேடங்கொண்டு
நான் வருவேன் சாமத்திலே.

யுவதி: நல்லபாம்பு வேடங்கொண்டு
நடுச்சாமம் வந்தாயானால்
ஊர்க்குருவி வேடங்கொண்டு
உயரப் பறந்திடுவேன்.

சிலர்: ஆம்பிளைங்க உண்ணுஞ்சோறு
ஏலேலக்குயிலே
அடிச்சட்டித் தீவச்சோறு
ஏலேலக்குயிலே
பொம்பிளைங்க உண்ணுஞ்சோறு
ஏலேலக்குயிலே
பொழுதோடே பொங்கச்சோறு
ஏலேலக்குயிலே

இளைஞன்: ஊர்க்குருவி வேடங்கொண்டு
உயரப் பறந்தாயானால்,
செம்பருந்து வேடங்கொண்டு
செந்தூக்காய்த் தூக்கிடுவேன்.

யுவதி: செம்பருந்து வேடங்கொண்டு
செந்தூக்காய் தூக்கவந்தால்
பூமியைக் கீறியல்லோ
புல்லாய் முளைத்திடுவேன்.

சிலர்: ஆண்பிளைங்க தேய்க்கும் எண்ணை
ஏலேலக்குயிலே
அசடுபட்ட தேங்காய் எண்ணை
ஏலேலக்குயிலே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்பிளைங்க தேய்க்கும் எண்ணை
ஏலேலக்குயிலே
அழகான சம்பங்கி எண்ணை
ஏலேலக்குயிலே

இளைஞன்: பூமியைக் கீறியல்லோ
புல்லாய் முளைத்தாயானால்
காராம்பசு வேடங் கொண்டு
கடித்திடுவேன் அந்தப் புல்லை.

யுவதி: காராம்பசு நீயானால்
கழுத்துமணி நானாவேன்.
ஆலமரத் தடியில்
அரளிச் செடி நானாவேன்.

சிலர்: ஆம்பிளைங்க வைக்கும் பொட்டு
ஏலேலக்குயிலே
அசடுபட்ட கருவப் பொட்டு
ஏலேலக்குயிலே,

பொம்பிளைங்க வைக்கும் பொட்டு
ஏலேலக்குயிலே
அழகான சாந்துப் பொட்டு
ஏலேலக்குயிலே.

இளைஞன்: ஆல மரமுறங்க
அடிமரத்தில் வண்டுறங்க
உன்மடியில் நானுறங்க
என்னவரம் பெத்தேனடி.

யுவதி: அத்திமரம் நானாவேன்
அத்தனையும் பிஞ்சாவேன்
நத்தி வரும் மச்சானுக்கு
முத்துச்சாரம் நானாவேன்.

—உரைஞர் மீண்டும் முன்னிடத்தில் தோன்ற மற்றவர் மேடை முழுவதும் நின்று தொடர்ந்து அமைதியாகப் பலதொழில்களைச் செய்து நிற்க—

உரைஞர்: [பாடல்]

இடையிட்டு வந்தார்! ..... சிலர்
இன்னலைப் பெருக்கிடவே!
நாட்டை அடிமைகொண்டு மக்கள்
உழைப்பை உண்டு,
ஏப்பமும் விட்டார்! ......மக்களில்
குதிரையும் விட்டே வந்தார்!
வருகிறார் இக்கவர் இனியென்ன
நடக்குமோ? இடையிட்டு...

உரைஞர் ஒதுங்க, இருவர் அல்லது மூவர் மிக அட்டகாசமாகப் பின் இடது மேடையால் வருகின்றனர். உரைஞர் பாடவந்தவர்கள் காணிகளை அளந்து எல்லை போடுதல், வேலி அடைத்தல் போன்ற செயல்களைச் செய்கின்றனர். [சுற்றி ஓடி எல்லை வகுக்கலாம், குதிரையில் ஏறிச்சவாரி செய்து எல்லை வகுக்கலாம், கல்லால் எறிந்து, 'கூ' வென்று கூப்பிடுதொலையை எல்லையாக வகுக்கலாம், பார்வையால் கண்ணுக்கு எட்டிய இடமெல்லாம் எல்லை வகுக்கலாம்.]

உரைஞர்: [பாடல்]

அடுத்த தோட்டம் இந்தத் தோட்டம்
பப்பாளித் தோட்டம்
படுத்த பாயைச் சுருட்டிக் கொண்டு
எடுத்தாண்டி ஓட்டம்.

கண்ணும் கடையாம்
காக்கணம் பூச்சியாம்
ஈயாம் எறும்பாம்
என்னையுங் கள்ளிவிட்டு
இரண்டையும் கொண்டுவா
இல்லாட்டா மோதிரக்கையாலே
மூந்நூறு குட்டுத்தருவேன்
கொண்டுவா கொண்டுவா
விட்டிட்டேன் விட்டிட்டேன்.

கிரிகிரியம்மா தென்னந்திரி
இருவாலேலசடிவா கள்ளன் வாறான்
காலுக்கெகிரி கைக்கெகிரி
கண்டெடுத்தவன் கொண்டோடு
காணாதவன் விட்டிட்டிரு விட்டிட்டிரு.

பொலி பொலி தாயே பொலி தம்பிரானே
பொலி
பூமி பொலி பூமா தேவித்தாயே
மண்ணின் களமே மாதாவே நிறைகளமே
பொன்னின் களமே பூமாதேவி அம்மா
பொலி பொலி பொலியே

—பெரியவர்கள் ஓடியோடி காணி பிடித்து எல்லை வைக்க சிறியவர்கள் ஒதுங்கி நிற்கின்றனர், காணி பிடித்து, அளந்து முடிய—

சிறியவன்-1- என்னையா இது!?
வயலை உளக்கிறியள், வரம்பைத்
தகர்க்கிறியள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவன்-1- புதிய வரம்புகள் போடிற
மடா பொடியா.
சிறியவன்-2- எல்லையள் வரம்புகள்
எதுக்கையா?
தொல்லைகள் துவங்கப் போறியளே?
பெரியவன்-2- நாட்டு வளப்பம்
உமக்கெதுக்கு?
நாத்தை நடுங்கோ நேரகா!
பெரியவன்-3- செம்பாட்டுக்காணியெல்லாம்
கண்ணாலை அளந்து
கல்லாலை எல்லை போட்டிருக்கிறம்.
பெரியவர்-1- தெற்காலிக் காணி
உடையாற்றை;
வடக்காலை வைரவநாதர்;
மேற்கை மணியகாறன்
கிழக்காலை தொலுக்கு முதலியார்
கம்பு துரைச்சாமி.
பெரியவர்-2- அங்காலிக் காணி,
நாகநாதர் வளவுக்குரியது
பெரியவர்-3- அதுக்கங்காலை
சேனாதிராயர் தோம்புக்குரியது.
பெரியவர்-1- சொரியல் போல் எல்லாம்
கரவையாய்க் தட்டையாய்த்
தெரிஞ்சாலும் .....
பெரியவன்-2- உறுதியாய் எல்லைக்கல் நாலு
மூலைக்கும்
ஊண்டிக் காட்டு விட்டிருக்கிறம்.
பெரியவர்-3- கச்சேரிக் கந்தோரில் உறுதியும்
எழுதி
காணிக் கந்தோரில் உறிதாய்ப்
பதிஞ்சிட்டம்
பெரியவர்-1- செப்புக் காசோடை செலவை
முடியுமே?!
பத்துப்பரப்புக்கு பவுணொண்டு வீதம்
ஏராளம் காசு முடிஞ்சுது.
பெரியவர்-2- காணியெண்டால் சும்மா
கிடக்சே?
உறுதி எழுதிப் பதிஞ்சு எடுக்க
ஊரிப்பட்ட காசுவேணும்!
சிறியவன்-3- சும்மா கிடந்த செம்பாட்டுக்
காணியிலை
பனங்கொட்டை போட்டு
வடலித் தோப்பாய் விட்டுது அதுகள்

பெரியவன்-3- ஆற்றை பனையிலை விழுந்த
கொட்டையடா?
பெரியவன்-1- பனையள் எங்கடை!
எல்லை போட்டுப் பதியமுன்னமும்
சொரியலா எல்லாம்
எங்கடை காணியள்.
பெரியவன்-2- பழமுக்கிண்டு கொட்டையும்
போட்ட எங்களுக்கோ நீர்
பனை நட்டுக் காட்டுறீர்?!
சிறியவன்-1- வெள்ளம் மிதந்த
பள்ளக்காணியெல்லாம்
உழுது கொத்தி வரம்புகட்டி
வயலாக்கிவிட்டம்.
பெரியவன்-2- வெள்ளம் நிண்டது ஆற்றை
காணியிலை?!
பள்ளமாய்க் கிடந்தது ஆற்றை
காணி?!
பெரியவன்-3- எல்லாம் எங்கடை முதுசக்
காணியள்.
மூதாதை சொத்து, முப்பாட்டன்
தேட்டம்.
பெரியவன்-1- ஆண்டாண்டு காலமாய்
இதுகளை எல்லாம்
ஆண்டு வந்தனாங்கள்.
பெரியவன்-2- ஆட்சி உரிமை
அளந்தெடுத்த உரிமை
எல்லாத்தாலும்
எங்கடை காணியள்.
சிறியவன்-2- எங்களுக்கெண்டு குந்தியிருக்க
ஒண்டுமில்லையே?
பெரியவன்-3- பாவமெண்டு இரங்கித்தானே
எங்கடை சொத்திலை இருக்கவிட்டம்
சிறியவன்-3- இனியென்ன நாங்கள்
செய்கிறதையா?!
பெரியவன்-1- இவ்வளவு காலமும்
செய்ததைச் செய்யுங்கோ.
பெரியவன்-2- வயலை உழுங்கோ, வரம்பைக்
கட்டுங்கோ
நெல்லை விதையுங்கோ, களையைப்
பிடுங்குங்கோ!
பெரியவன்-3- அரிவு வெட்டுங்கோ,
சூட்டை அடியுங்கோ! நெல்லைத்
தூக்குங்கோ, மூட்டை கட்டுங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவன்-1- விட்டைக் கொண்ணந்து
அடிக்கிவிடுங்கோவன்.
உங்களை நாங்கள் பட்டினி போடுவமே?

சிறியவன்-1- எங்களுக்கெண்டு இருந்த
காணியள்...?!

பெரியவன்-2- உங்களுக்கெண்டு இருந்ததோ
காணியள்!

பேக்கதை பேந்தும் பறைஞ்சால்
வில்லங்கம்!

பெரியவன்-3- எல்லாக்காணியளும்
எங்கடை மதுசங்கள்

பெரியவன்-1- இரக்கம் எங்களுக்கு
இருக்கிறதாலை இருக்கவிடுறம்
எங்கடை காணியிலை.

பெரியவன்-2- வடகிழக்கு மூலையிலை
வடலிக்காணியிலை வடிவாய்க்
கொட்டில் போட்டிருக்கோ.

பெரியவன்-3- குத்தகை வேண்டாம்.
காவோலை பாளை மூரி மட்டை
பச்சோலை பனங்காய் "ஒழுங்காய்ப்
பொறுக்கு வளவில் போடவேணும்.

சிறியவன்-2- எங்களுக்கெண்டு சால்ப்பரப்
பேனும்..?!

பெரியவன்-1- உங்களுக்கேனடா
காணி?
சீதனம் ஆதனம் குடுக்கவே போறி
யள்?

பெரியவன்-2- சாப்பாட்டைத்தந்து காப்
பாத்திவிடுகிறம் செத்தால் சிலவும்
எங்கடை பொறுப்பிலை.

பெரியவன்-3- சுமக்கிற்பொறுப்பு மட்டும்
உங்கடை.
அதையும் நாங்களே செய்வமே
பின்னை!?

சிறியவன்-3- எங்களுக்கெண்டும் காண்பரப்
பிருந்தால்......

பெரியவன்-1- புப்!!! வெள்ளிக்கிழமையா
நாத்து வாயாலை என்னைத் தூஷணம்
பேசவைக்காதை! பொறுதிக்குமொரு
எல்லை இருக்குக் கண்டியோ!!

—பெரியவர்கள் மூவரும் வேகமாக வெளி
யேறுகின்றனர்.

சிறியவன்-1- எங்களுக் கொண்டும் எல்லை
இல்லை!
திக்கும் இல்லைத் திசையும் இல்லை!

சிறியவன்-2- பொறுதிக்கும் எல்லை இல்லை!
வேலைக்கும் எல்லை இல்லை!

சிறியவன்-3- காணிக்கும் எல்லை இல்லை...?
இல்லை, இல்லைக் காணியே இல்லை!!!

சிறியவன்-1- நீண்டு கிடக்குது நில மெண்டி
ருந்தம்;
உழுது மறித்துப் பயிரை நட்டம்

சிறியவன்-2- கட்டிக் கழுவி எறி இறக்கின
பெண்பனை கூட இரவல்பனையாம்.

சிறியவன்-3- நாங்களேஇரவல் ஆகிவிட்டம்
நாமே நமக்குச் சொந்தமில்லை;

—உரைஞர் ஓடோடி வந்து—

உரைஞர்: ஆஹா!! என்ன அறிவு!! என்ன
ஞானம்!! இதுவல்லவோ தத்துவம்!
இதுவல்லவோ.. தவம்!! "நாமே நமக்
குச் சொந்தமில்லை"!! நாமே
நமக்குச் சொந்தமில்லை!... 'எம்
கடன் பணிசெய்து கிடப்பது'!!

—இந்நிடையில் சிறியவர்கள் மீண்டும் தம்
பணியில் ஈடுபட்டுள்ளனர். (மாடு போல்
உழுகிறார்கள், உழைக்கிறார்கள்) உரைஞர்
பாடுகின்றனர்—

உரைஞர்: [பாட்டு]

ஓரம்போஹ ........ சார்பார்
ஏஎஎ ................ ஹேஎஎ
சார்பார்த்த கள்ளனடா—செல்லன்
தாய் வார்த்தை கேளாண்டா.
பாரக் கலப்பையடா—செல்லனுக்கு
பாரமெத்தத் தோணுதடா,
வரம்போ தலைகாணி—செல்லனுக்கு
வாய்க்காலோ பஞ்சுமெத்தை.
செல்லன் நடந்த நடை—இன்று
சொல்லவொண்ணு அன்னநடை
இந்தநடை தானோ—செல்லனுக்கு
இன்னுமுண்டோ அன்னநடை?
இந்தநடை நடந்து— செல்லா நாம்
எப்போகரை சேர்வமடா?
வெள்ளி மதியாணி—செல்லனுக்கு
வெண்கலத்தால் சுள்ளாணி
வெள்ளியினால் சுள்ளாணி-என் தம்பிசெல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தனுக்கு வெண்கலத்தால் மதியாணி
சுள்ளாணிக்குள்ளே—செல்லா ஒரு
சூத்திரத்தை வைத்தாண்டா
சாரை அறிவாண்டா—செல்லன்
சார்ப்பலகை தப்பாண்டா
மூலைவரம்போரம்—செல்லா நீ
முடுகிவலை நல்லகண்டே
ஓடிநட கண்டே—செல்லா நீ
உறுதியுள்ள காலாலே.
தள்ளாடித் தள்ளாடி—செல்லன்
சாய்ந்தாடிப் போறுண்டா.
தள்ளாதே கண்டே—நீ
சலியாதே நல்லகண்டே
முன்னங்கால் வெள்ளையல்லோ
—செல்லனுக்கு
முகம் நிறைந்த சீதேவி.
எட்டுக்காலோடே செல்லா—நமக்கு
இருகால் தலைமூன்று.
வானம் குடையாமோ—செல்லனுக்கு
மல்லிகைப்பூச் செண்டாமோ.
ஆழியிலே போய் முழுகி—செல்லா நீ
அண்டிவந்த தீரனடா.
கறுப்பாய் இருண்ட மழை—தம்பி
செல்லா அங்கே
காலுழுந்து போகுதடா.

—மேலேயுள்ள பாடலும் அதற்குரிய அசைவுகளும் நிகழ்வுகளும் முடிவடைய மேடையில் இருள் படிப்படியாகக் குறைந்து இருள்படர்கிறது— மீண்டும் மேடையில் ஒளிபடரும்போது, அங்கு எவருமில்லை. ஒரு கணத்தால் 'பெரியவர்கள்' மூவரும் மேல் இடத்தால் வந்து மேடையின் மத்திய மத்தியில் நிற்கின்றனர்—

பெரியவன்-2- வெண்காயம் மிளாய்யென்டு
விவசாயம் செய்கிறதில்லை
இனி வேலையில்லை!

பெரியவன்-3- தோட்டம் செய்யிறதில்லை
இனிவேலையில்லை.

பெரியவன்-1- அப்பதோட்டத்தை என்ன
தரவையா விடுகிறதே?
தாமரைவார்த்துச் சின்னவைக்குக்
குடுக்கிறதே?

பெரியவன்-2- எங்கடை காணியளைச்
சின்னவைக்குக் குடுக்கிறதோ?!

பெரியவன்-3- தரவையாக் கிடந்தாலும்
தாமரைவார்த்துக் குடம்!

பெரியவன்-1- பக்கத்தூரில் மூத்தண்ணர்
சொன்னவர், நல்லதொரு 'பிளான்'

பெரியவன்-2- என்னபிளானப்பா
மூத்தண்ணர் சொன்னவர்

பெரியவன்-1- தோட்டத்தாலை
நட்டமென்டாக்
தானொருவழி சொல்லுற லெட்டர்

பெரியவன்-3- என்னவழியப்பா
சொல்லித்தந்தவர்?

பெரியவன்-2- நல்லவழியென்டால்
நாங்களும் செய்வலாம்.

பெரியவன்-1- அவசிப்படாதையுங்கோ
அவரே வாறார்.

—மூத்தண்ணர் முன்னிடத்தால் வருகிறார்.

பெரியவன்-3- மூத்தண்ணர் வாருங்கோ!

பெரியவன்-2- மூத்தண்ணர் வாருங்கோ!

மூத்தண்ணர்- என்ன?
மூன்று பேரும் முக்கோணமாய் நின்டு
ஒருகோணத்தை அளக்கிட்டமே
கிட்டிநியள்.

பெரியவன்-1- மூத்தண்ணர் நீங்களல்லோ
'திரிகோண' நச்சத்திரகாரன்.

மூத்தண்ணர்- ஓ, நான் 'திரிகோணம்' தான்

பெரியவன்-2- திரிகோணமென்டால்
முக்கோணமல்லே

பெரியவன்-3- திரிகோணத்தையும் ஆண்டு
முக்கோணமலையாய்க் காசைக்
குவிச்சல்லோவாறார்!

மூத்தண்ணர்- என்னைப்பற்றின கதையை
விடுங்கோ
வாருங்கோ விஷயத்துக்கு

பெரியவன்-1- விஷயமென்ன மூத்தண்ணை.
விவசாயத்திலை வேலையில்லை.

பெரியவன்-2 கொத்து, உழவு, நடுகலி,
நாத்துக்கலி, களைபிடுங்கல்,
உரம்போட்டு மருந்தடிச்சப் பயிராக்க
வெளிநாட்டான் வந்திறங்கும்,

பெரியவன்-3- வெங்காயவிலை
சச்சுவிலையாகும்,
மிளகாய் சருகுவிலையாகும்,

மூத்தண்ணர்- காலத்துக்கேற்ப
நாங்களும் மாறவேணும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பன் உழுத வழியில்தான்
உழுவமெண்டு நிண்டால்.
'உழுத உழவும் போச்சு
ஒறண மாடும் போச்சு'
எண்ட கதையாத்தான் போகும்.

பெரியவன்-1- அதுதான் மூத்தண்ணர்
என்ன செய்வமெண்டு.. ......

மூத்தண்ணர்- என்ன செய்தால்
லாபம் வருமோ
அதைத்தானே நாங்கள் செய்யவேணும்

பெரியவன்-2- அதைத்தான் என்னெண்டு
உங்களைக் கேக்கிறம்.

மூத்தண்ணர்- எங்கடை பகுதியிலை
உள்ள போலை
தொழிலைத்துறையைத்
தொடங்கினுல் என்ன?

பெரியவன்-3- அப்பிடி யெண்டால்

மூத்தண்ணர்- மாவரைக்கிற மிசினெண்டு
போடுவம்.

பெரியவன்-1- சந்திக்கு இரண்டு
எங்கும் கிடக்குது!

மூத்தண்ணர்- சந்தியிலை கிடக்கிற
அரிசிமாக்குத்தற
சில்லறை மிசினை நான் சொல்லேல்லை

பெரியவன்-2- வேறை என்ன மிசின்?

மூத்தண்ணர்- மரவெள்ளிக் கிழங்கைச்
சீவி உலர்த்தி
மிசினிலை போட்டு
மாவா அரைக்க
ஒடியலை அரைச்சு
மாவா எடுக்க
பெரிய அளவில்
அரைக்கிற மிசினெண்டு
வெளிநாட்டாலை எடுப்பிச்சுப்
பொருத்துவம்.
மரவெள்ளித் தடியை
எங்கும் நடுவம்.
பனங்கொட்டை ஒண்டையும்
தவறவிடாமல்
பாத்தி போட்டுக் கிழங்காக்கிப்
போடுவம்.

பெரியவன்-3- அது சரி மூத்தண்ணை.
உந்தப் புதுமா அரைக்கிற
புதிய மிசினை
இயக்கி நிண்டு
ஓடப்பண்ணிறதாரண்ணை?

மூத்தண்ணர்- எங்கடை பக்கத்திலை
எடுக்காலம் ஆக்கள்.

பெரியவன்-1- ஓ அங்கை உங்கடை
'மில்லிலை' உள்ள
சிலரைக் கூப்பிட வருவினம்தானே?

மூத்தண்ணர்- சீனித் தொழிற்சாலை
ஒண்டும் அமைக்கலாம்.
மண்டிக்கள்ளிலை சாரயம் வடிக்கலாம்
உடனைக்குடனை விலைப்பட்டுப் போம்

பெரியவன்-2- உது நல்லயோசினை,
அச்சா யோசினை

பெரியவன்-3- மாவுக்கு மிசினும்
சீனிக் கொம்பனியும்
எந்த இடத்திலை
தொடங்குவமண்ணை?

பெரியவர்-1- இடம் கனக்கப் பிடிக்குமல்லே?

மூத்தண்ணர்- தோட்டக்காணி
தோட்டமா இருக்கட்டும்,
மரவெள்ளி கிரை நட இடம் வேணும்'
வடகிழக்கு மூலையிலை
பக்கமொண்டொதுக்கி
போடுவம் கொம்பனி
இந்த இடத்திலை,

—மேடையில் மூத்தண்ணர் இடத்தைக்
குறித்துக் காட்டுகிருர்.

பெரியவன்-2- சிறியவைக் கென்ன
கன இடம் வேணுமே!
குந்திஇருக்கட்டும்
ஒதுக்குப்புறமாய்.

பெரியவன்-3- நாங்கள் போடுகிற
புதுமிஷின் இயக்கப்
புதுசாவாற உங்கடை ஆக்களை
எங்கை இருத்துவம்
மூத்தண்ணர் சொல்லுங்கோ.

மூத்தண்ணர்- உவங்கடை
கொட்டில்களுக்கருகிலை போடுவம்
ஆலைக்கருகிலை இருந்தால் தானே
வேலைக்கு வேலைக்கு வரவும் வசதி.

பெரியவன்-3- அப்பச்சரியண்ணைமெத்தச்சரி
எப்ப தொடங்குவம்
கட்டிட வேலையள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தண்ணர்- உடனே தொடங்குவம்.
இப்பிடி வேலையள் பிந்போடக்கூடா.
நான் போய் என்ரை
ஆக்களைக் கொண்டாறன்.

பெரியவன்-1- அதுதான் சரி அப்பிடியே
செய்வம்.

பெரியவன்-2- ஆக்களைக் கூட்டிக்
கெதியாய் வாங்கோ.

—அனைவரும் செல்கின்றனர். இவர்கள் செல்ல உரைஞர் வந்து பாடுவர். அவர்கள் முன் மேடையில் நின்று பாடப் பின் மேடையில் சிறியவர்கள் வந்து தமது பழமையான விவசாய வேலைகளில் ஈடுபட்டிருப்பர். சற்று நேரத்தால் மூத்தண்ணர். பெரியவன்கள் ஆகியோர் புதிய தொழிலாளர் சிலருடன் வந்து சிறியவர் மத்தியில் கட்டிடம் கட்டும் வேலையில் ஈடுபடுவர். சிறியவர் திகைத்து நிற்பர்.

—பின்வரும் பாடல் முடியுமட்டும் தனியே சிறியவர்கள் வேலை செய்வர்—

உரைஞர்-[பாட்டு]
ஆற்றோடு ஆற்றுநீர் அங்கு வருமாப்போல்
அதன் பிறகே புல்லுந் தொடர்ந்து
வருமாப்போல்
சேற்றோடு வெள்ளம் தெளிந்து
வருமாப் போல்
செங்கால் நாரையினம்
மேய்ந்து வருமாப் போல்
சினந்தருவி வெட்டும் இளந்தாரிமாரை
கண்ணுனை எங்களூர் இளந்தாரி மாரை
கண்ணூறு படாமற் காரும் ஐயனரே.

மட்டிருக்காலே அருவாளும் மடித்து
மாவிலங்கன் பிடி சீவிஇறுக்கி
வெட்டும் பிடியைச் சிறக்கவே போட்டு
வெள்ளிச் சுகட்டினால் விரல் கூட்டமிட்டு
வளக்கரிவி வெட்டும் இளந்தாரிமாரை
நாலூறு வாராமற் காரும் ஐயனரே.

—இனிவரும் பாடலுடன் மூத்தண்ணர். பொரியவன்கள் வந்து பாடலுக்குரிய முறையில் இயக்கங்கள், அசைவுகள், செயல்களைப் புரிவர். அவர்களுடன் வந்த புதியசிறியவர் பார்த்திருப்பார். பழைய சிறியவர், பெரியவர்களின் செயல் கண்டு திகைத்து நிற்பர். [கட்டிடங் கட்ட அத்திவாரம் வெட்டக்கயிறு பிடித்து நோ பார்த்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவர் இவற்றில் புதிய சிறியவர்களும் உதவுதல் பிழையில்லை]—

உரைஞர் [பாடல்]
என் பொண்டாட்டி சண்டைக்காறி
—சந்தமாமா
இண்டைக் கெல்லாம் ஏசக்கேப்பான்
—தோழமாமா.
தஞ்சாவூர் சந்தைக்குப் போனேன்
—சந்தமாமா
சாகிறகிழவியைப் போட்டடித்தேன்
—தோழமாமா.
எட்டு நாளாய்ச் செத்துக்கிடந்த சாரப்
பாம்பை—சந்தமாமா
எட்டி நின்டு தொட்டுப் போட்டேன்
—தோழமாமா.
ஒட்டைப் பானைக்கை ஒணான் பூந்தது
—சந்தமாமா
அடிக்கப் போனேன் கடிக்கவந்தது
—தோழமாமா.
கடைக்குப் போனேன் வெத்திலை வாங்கச்
—சந்தமாமா
காசு கொடாமல் ஓடிவந்தேன்
—தோழமாமா.
என்னைப் போலச் சமத்தனுண்டோ
—சந்தமாமா
இந்தனை போலே ஒருவனைக் காட்டடா
—தோழமாமா.
இரண்டாட்டுக்கு எட்டுக் காலடா
—சந்தமாமா
என் பெண்டாட்டியைக் கேட்டுப் பாரடா
தோழமாமா.

—இது வரை பாடிய உரைஞர் விலக, இது வரை கட்டடம் அமைப்பதில் ஈடுபட்டிருந்த மூத்தண்ணர். பெரியவர்கள், தமது பணியை முடித்துக் கொண்டு.........

பெரியவன்-1- மூத்தண்ணற்றை
புண்ணியத்திலை
கட்டிடம் கட்டி மிசினும்
பூட்டியாச்சு.

பெரியவன்-2- இனியென்ன வேலையைத்
துவங்க வேண்டியதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தண்ணர்- வாருங்கோடா எங்கடை
பொடியள்.
துவங்குங்கோ வேலையைக் கச்சிதமா.

—புதிய சிறியவர்கள் முன்மேடையில் வந்து நின்று தொழிற்சாலையில் வேலைகள் தொடங்க ஆயத்தமாக நிற்கின்றனர். பெரியவன் ஒருவன் பின்மேடையைக் காட்டிப் பழைய சிறியவர்வரிடம் ......

பெரியவன்-2- நீங்கள். உங்கை உள்ள
தோட்டங்களை செய்தது போலச்
செய்யுங்கோ.

பெரியவன்-3- ஆளுக்கு ஒண்டு.
வெங்காயம் மிளகாயிலை
வேண்டியில்லை.
மரவெள்ளிக்கட்டையிலை
நிறைய நடுங்கோ

பெரியவன்-1- மூலப் பொருளே
அதுதானே மிசினுக்கு.

மூத்தண்ணர்- உள்ளூர்க்கி கிழங்கு
போதாமல் போனால்
மிசினைச் சும்மா வச்சிருக்கேலாது
வெளியிலை இருந்து
எடுப்பிக்க வேணும்.

பெரியவன்-2- பாக்கிறியளே!
செம்பாடெல்லாம்
நடுங்கோ கிழங்கை.

பெரியவன்-3- கரவை எல்லாம்
தாழுங்கோ மரவெள்ளி.

பெரியவன்-1- வத்தின குளத்திலும்
அடியை நடுங்கோ.

மூத்தண்ணர்- வாய்க்கால் வரம்பிலும்
ஊண்டி விடுங்கோ.

பெரியவன்-2- இம்; தொடங்குங்கோ
வேலையை நாம் போய் வாறம்.

—முன் மேடையில் நின்று புதியசிறிய வரும் பின் மேடையில் நின்று பழைய சிறியவரும் வேலை செய்கின்றனர்—பழைய சிறியவர்கள் சார்பாக உரைஞர் பின்வரும் பாடலைப் பாடுகின்றனர்—

உரைஞர்: [பாடல்]
மழை வடக்கே பெய
வரும் கிழக்கே வெள்ளம்!
தெற்கே மழைபெய
திரும்பி வரும் வெள்ளம்!
வெள்ளம் கண்ட நாரை
வெளிச்சி கொண்டு போகும்!
தண்ணி கண்ட நாரை
தவளை கொண்டு போகும்
ஆத்தைக் கண்ட நாரை
அயிரை கொண்டு போகும்!
குளத்தைக் கண்ட நாரை
கொரவை கொண்டு போகும்!
ஆத்தைக் கண்ட குப்பன்
அதிலே முழுகி வாறான்!
குளத்தைக் கண்ட குப்பன்
குளிச்சு முழுகி வாறான்!
ஓரடியாலிந்த உலகளந்த ராமா
ஒரு பதியா லொண்ணு!

—பின்வரும் பாடலைப் புதிய சிறியவர் சார்பில் உரைஞர் முன்மேடையில் நின்று பாடுகின்றனர்—

உரைஞர்: (பாடல்)
வாடை அடிக்குதடி வாடைக்காத்து வீசுதடி
சென்னல் அடிக்குதடி—நாம்சேர்ந்து
வந்த கப்பலிலே.
எண்ணிக் குழிவெட்டி
இடுப்பொடிச்சு தீக்கயிலே
வெட்டுவெட்டு என்கிறாரே
பொட்டுவச்ச கங்காணி,
ஆக்கோரம் கொந்தரப்பு
அறுநெடுக வல்லாரை
வல்லாரை வெட்டியல்லோ—என்
வல்லமை சொறஞ்சு தய்யா,
ஊரை ஊர்இழந்தேன்
ஒத்தப்பனை தோப்பிழந்தேன்
பாரான கண்டியிலே
பெத்ததாயும் வீடிழந்தேன்.

—இந்தப் பாடல் முடிவடையப் பழைய சிறியவர் உரிய நேரங்களில் முன்மேடைக்கு வந்து உரைஞருடன் உரையாடுகின்றனர்—

சிறியவன்-1- எல்லை இல்லாமல்
கிடந்த நிலத்துக்கு
கல்லுத் தாட்டு எல்லை வச்சு
எங்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளி
வடகிழக்கு மூலையைக்
காட்டி விட்டினை,

சிறியவன்-2- மூலையிலை நாங்கள்
அடங்கிக் கிடக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலைஞ்சு மிஷினைக் கொண்டைந்து
போட்டு
இன்னும் ஆரையோ
குடியும் இருத்தி
என்னம் பொண்டு
வேலை பாக்கினை.

உரைஞர்: உங்களுக்கும் உணர்வு இருக்கு
வாழ்க! வாழ்க!! வாழ்க! வாழ்க!!

சிறியவன்-3- வில்லங்கம் இன்னும்
எத்தினை இருக்கோ?
விதிப்பயன் எங்களை
வாட்டி விடுமோ?

உரைஞர்: விதியெண்டால் ஒண்டும் வில்லங்
கமில்லை. மதி கொண்டு மனிதன்
வாழ்க்கும் வழிதான் விதியென்ற
மூன்றமை. ஒழுங்கென்பதறியும்
சதிசெய்யும் குப்பலை அழித்து ஒழிக்க
புதிய சிந்தனை செய்வதே புத்தி!

சிறியவன்-1- குட்டக் குட்டக் குனிஞ்சு
நிண்டால் காட்டு விழிக்கி ஏறியும்
நிற்பினம்.

சிறியவன்-2- நாங்களென்ன செய்யமுடியும்
வாங்கோ வேலையைச் செய்து முடிப்
பம்.

—அவர்கள் பின்மேடைக்குச் சென்று பழைய
படி வேலை செய்கின்றார்கள்—

உரைஞர்: நாய்வாலல்ல மனிதாப்பா!
நிமிர்ந்து நிற்க முடியுமையா!

—இதற்கிடையில் மூத்தண்ணர், பெரியவர்
கள் மேடைக்கு உரையாடியபடி வருகின்
றனர்—

மூத்தண்ணர்: நாய்வாலை நிமிர்த்திற கதை
யாக்கிடக்குது நான் சொல்லுகிறது
விளங்கேல்லை உங்களுக்கு

பெரியவன்-3- அறியாத ஆக்கிட்டைக் காசை
வேண்டி இலுப்பெண்ணை ஆலையைப்
போடெண்ணிறியள்!

மூத்தண்ணர்- தேங்காய் எண்ணை நல்
லெண்ணை விக்கிற விலை தெரியுமோ
உமக்கு? இலுப்பெண்ணை வடிச்
செடுக்க இங்கிலண்டு மெசின் வந்தால்
உலுப்பி எடுக்கலாம் காசு காசாக.

பெரியவன்-1- அறியாத அன்னியன் தரு
வானே சும்மா?

மூத்தண்ணர்- அறிஞ்சவன் அப்பா, எனக்
கறிஞ்சவன் நல்லா!

பெரியவன்-2- அறிஞ்சவனெண்டாலும்
சும்மா தருவானே?

மூத்தண்ணர்- குறைஞ்சவட்டி நீண்டகடன்

பெரியவன்-3- பொறுப்பேதும் கேளானே?

மூத்தண்ணர்- ஈடாய்க் காணியை எழுதி
விடுவம்.
குறைஞ்ச வட்டி நீண்ட கடனல்லே!

பெரியவன்-1- நஷ்டம் வந்து .. ஈடு மீள
கஷ்டம் வந்தால்.. ?

மூத்தண்ணர்- துணிவு தன்னம்பிக்கை,
தொழிலுக்கிதுதான் மூலதனம்.

பெரியவன்-2- எந்தக் காணியிலை செக்கைப்
போடுவம்?

மூத்தண்ணர்- வடகிழக்குக்காணி இருக்கோ
இல்லையோ?!
நெருக்கி அதக்கை போட்டுவிட்டால்
பழைய சிறுசுகள் கொட்டமடங்கும்

பெரியவன்-1- கல்லொண்டெறிய ரெண்டு
மாங்காய்!

மூத்தண்ணர்- மூண்டும் விழுந்தாலும்
லாபந்தானே!

உரைஞர்: மூண்டும் விழுந்தால் ஒன்றும்
மிஞ்சாது!

பெரியவன்-1- இவனார் இடையிலிருந்தன்
குறுக்காலை வாறான்?!

உரைஞர்: இருக்கிறதுண்டை ஈடுவைச்சுச்
செக்கு வாங்கி எண்ணை வடிச்சு,
"செக்கும் போச்சுச் சிவசிவா
நிலமும் போச்சு நமசிவா
என்று காவடி ஆடப்,
போனகாணி திரும்பி வருமே?

பெரியவன்-2- 'போடாபேயா!
எங்கடை காணி,
நாங்கள் விப்பம் விடுவம்.

பெரியவன்-3- ஈடுவைப்பம், குத்தகை
குடுப்பம்

பெரியவன்-1- நீயார் கேட்கிறது?!

மூத்தண்ணர்; விசாரணை விடுங்கோ,
வாருங்கோ துவங்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைச் செக்கு வடிவாய்ப் போடு
வம், செக்கு மாடுகள் இருக்குத்தானே

—புதிய சிறியவர், பழைய சிறியவர் ஆகிய இருசாராரையும் பார்த்து—

மூத்தண்ணர்: என்னடா, வாய்பார்த்து நிக்கிறியள்? செய்யுங்கோடா வேலையை!

—பழைய சிறியவர் பின்மேடையில் நின்று விவசாயத்துக்குரிய செயல்களைச் செய்ய, முன்மேடையில் நின்று புதிய சிறியவர் செக்குச் சுத்துவதுபோல் செயல்களை நிகழ்த்திக் காட்டுகின்றனர்- உரைஞர் பின்வரும் பாடலைப் பாடுகின்றனர். மூத்தண்ணரும் பெரியவன்களும் ஒருகரையில் நின்று அல்லது உலாத்திக் திரிந்து பெருமிதத்தோடு பார்வையிடுவர்—

உரைஞர்: [பாடல்[
ஓரம்போஹ ......... சார்பார்
எஎஎ ......... ஹேஎஎ
சார்பார்க்க கள்ளனடா—செல்லன்
தாய் வார்த்தை கேளாண்டா.
பாரம் கலப்பையடா—செல்லனுக்கு
பாரமெத்தத் தோணுதடா.
[செக்கும் இழுப்பாண்டா—செல்லன்
சுத்திச் சுத்தி நடப்பானடா]
செல்லன் நடந்த நடை—இன்று
சொல்லவெண்ணு அன்னநடை
இந்தநடை தானே—செல்லனுக்கு
இன்னுமுண்டோ அன்னநடை?
இந்தநடை நடந்து— செல்லாநாம்
எப்போ கரை சேருவமடா?
ஓடிநட கண்டே—செல்லாநீ
உறுதியுள்ள காலாலே!

—கடைசி இரண்டடியையும் உரைஞர் மீண்டும் மீண்டும் தொனியையும் வேகத்தையும் படிப்படியாக உயர்த்தி, மற்றவர்களை முடுக்கி விடும் பாணியில் சொல்லுவர், பல தடவை இவ்விரண்டு அடிகளையும் சொல்ல தொழில் செய்பவர் தமது வேகத்தைப் படிப்படியாகக் கூட்டி வேலைசெய்வர். பாட்டின் வேகமும் தொழிலின் வேகமும் மிக உயர்ந்த நிலையை அடைந்ததும் பழைய சிறியவர்கள் உச்சத்தொனியில் ஒருமித்து...
பழைய சிறியவர்- போதும் ! ! ! ! ! !

—என்று கத்திவிட்டு முன்மேடைக்கு வந்து ஆவேசத்தோடு நிற்பர். புதிய சிறியவரும் நிமிர்ந்துபார்ப்பர். அப்போது உரைஞர் சிறியவர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறுகிறார்—

உரைஞர்: தம்பி! எரிதளக் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான் - அன்னால்
கையை எரித்திடுவோம் ! !

★ — திரை — ★

---

**பொ**துமக்களுடன் இணைய வேண்டுமானால், பொதுமக்களின் தேவைகள் விருப்பங்களின் பிரகாரம் செயல்பட வேண்டும், பொதுமக்களுக்காகச் செய்யும் வேலைகள் எல்லாம் அவர்கள் தேவையிலிருந்து தொடங்கவேண்டும்; ஆனால் எவ்வளவு நல்லெண்ணம் உடைய எந்த ஒரு தனி நபரின் ஆசையிலிருந்தும் தொடங்கக்கூடாது. பல சந்தர்ப்பங்களில், புறநிலையில் பொதுமக்களுக்கு ஒரு குறிப்பிட்ட மாற்றம் தேவைப்படுகின்றது; ஆனால் அகநிலையில் அவர்கள் அத் தேவையை இன்னும் உணராத, அம்மாற்றத்தை இன்னும் செய்ய விரும்பாத அல்லது தீர்மானிக்காத நிலை இன்னும் இருக்கின்றது. இத்தகைய நிலைமைகளில், நாம் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். நமது வேலை மூலம் பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் இந்த மாற்றத்தின் தேவையை உணர்ந்து, அதைச் செய்யவிரும்பி, ஒரு தீர்மானத்துக்கு வரும் வரையில், நாம் அந்த மாற்றத்தைச் செய்யக்கூடாது. அல்லாவிட்டால் நாம் பொது மக்களிடமிருந்து தனிமைப் படுத்தப்பட்டு விடுவோம். பொதுமக்கள் பங்கு பற்றவேண்டிய எந்த ஒரு வேலையையும், அவர்கள் தாமாக உணர்ந்து, செய்ய விரும்பாவிட்டால், அது வெறும் சம்பிரதாயமாக மாறி, தோல்வியடைந்துவிடும்.

—மாஓ சேதுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தரக அரிசி, தவிடு, வெள்ளை அரிசி வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# சக்தி அரிசி ஆலை

நீர்வேலிச் சந்திக்கு அருகாமை
நீர்வேலி

கார், லொறி, மினிவான் போன்ற
வாகனங்களை நல்லமுறையில்
டிங்கர், பெயின்றிங்
வேலைகள் செய்து கொடுப்பவர்கள்

# விநாயகர் டிங்கர் கராஜ்

நீர்வேலிச் சந்தி, — நீர்வேலி.

உரிமையாளர்: N. இரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலியில் சகலவிதமான
றேடியோக்களினதும் தரமான
திருத்த வேலைகளுக்குத்
தவறாது நாடுங்கள்

# செந்தூரன் றேடியோ ஸ்தாபனம்

யாழ்-வீதி, — அச்சுவேலி.

வானொலிப் பெட்டிகள். அயன் பெட்டிகள்,
ஸ்பீக்கர் றிவைன்டிங், ரெலிவிஷன், வீடியோ டெக்
முதலிய சகலவிதமான எலக்ரிக் பொருட்களை
சிறந்தமுறையில் திருத்திக் கொடுக்கப்படும்

அனைவரும் வருக! ஆதரவிற்கு நன்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்து ஆண்டுகளின் நிர்வாகிகள்

| | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1974— | பொ. சபாபதி | வை. கிருஷ்ணபிள்ளை | க. தம்பிமுத்து |
| 1975— | பொ, சபாபதி | வை. கிருஷ்ணபிள்ளை | க, தம்பிமுத்து |
| 1976— | பொ. சபாபதி | வை. கிருஷ்ணபிள்ளை | க. தம்பிமுத்து |
| 1977— | நா. செல்லக்கண்டு | இ. மகாலிங்கம் | க. தம்பிமுத்து |
| 1978— | பொ. சபாபதி | இ. கதிர்காமநாதன் | க. தம்பிமுத்து |
| 1978— | பொ. சபாபதி | இ. கதிர்காமநாதன் | க. தம்பிமுத்து |
| 1980— | பொ. சபாபதி | இ. கதிர்காமநாதன் | க. தம்பிமுத்து |
| 1981— | மு. மாணிக்கம் | கா. கதிர்காமநாதன் | ந. செல்வராசா |
| 1982— | மு. மாணிக்கம் | கா. கதிர்காமநாதன் | ந. செல்வராசா |
| 1983— | மு. மாணிக்கம் | கா. கதிர்காமநாதன் | ந. செல்வராசா |
| 1984— | மு. மாணிக்கம் | கா. கதிர்காமநாதன் | ந. செல்வராசா |

---

# நன்றி

பொருளாதார நெருக்கடி உச்ச நிலையில் உள்ள இவ்வேளை இத்தகைய ஒரு சிறப்பு மலரை வெளிக்கொணர்வது மிகச்சுலபமான ஒன்றல்ல. இருந்தபோதிலும் எமக்கு மக்கள் என்றவற்ருத ஊற்று கொடுத்த நம்பிக்கையும் எமது நிலைய நிர்வாகிகளின் ஐக்கியப்பட்ட விடா முயற்சியும் இம் மலரை உங்களின் கரங்களில் அளித்துள்ளது. இம்மலரின் சிறப்புக்கு கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், நாடகம் ஆகியவற்றை உரிய காலத்தில் தந்துதவிய எழுத்தாளர்களுக்கு எமது உளமார்த்த நன்றிகள். எமது இம்முயற்சிக்கு விளம்பரங்கள் தந்து அன்பளிப்புச் செய்த சகலருக்கும் நன்றி உடையோம். இம்மலரை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த யாழ்ப்பாண அச்சகத்தின் ஊழியர்களுக்கு நாம் நன்றி கூறுகின்ருேம் மேலும் இம்மலர் சிறப்புற அமைவதற்கு நல்லாலோசனை வழங்கிய நண்பர்கள் அனைவருக்கும் நமது நன்றிகள்.

—மலர்குழு—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதுக்கினிய சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள்
திரைக்கதை வசனங்களைக் கேட்டு மகிழ
மங்கள - பொது நிகழ்ச்சிகளுக்கு
அழைத்து மகிழுங்கள்

# தேவி சவுண்ஸ்

சிறுப்பிட்டி தெற்கு - நீர்வேலி.

கலைமதி சனசமூக நிலைய
பத்தாவது ஆண்டு மலருக்கு எமது
வாழ்த்துக்கள்

## கிருஷ்ணா பேக்கரீஸ்

புத்தூர் கிழக்கு-புத்தூர்

கலைமதி சனசமூக நிலையத்தின்
10-வது ஆண்டு விழாவைப்போல
இன்னும் பல விழாக்களைக்
காணவேண்டும், உங்கள் பணி
தொடரவேண்டுமென
வாழ்த்துகிறேன்

பொன் தங்கராசா

## சுரஞ்சினி ரேடர்ஸ்

மிளகாய் தூள், கோப்பி விற்பனையாளர்.

வாதரவத்தை - புத்தூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல மங்கள வைபவங்களுக்கும்
பொது நிகழ்ச்சிகளுக்கும்
சிறந்த முறையில் ஒலி அமைத்திட

# ரதீகரன் சவுண்ஸ்

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

கலைமதி சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு மலருக்கு எமது வாழ்த்துக்கள்

University of Jaffna
249722
Library

ARCHIVES

# பிரசன்னு ஸ்ரோர்ஸ்

பருத்தித்துறை வீதி
ஆவரங்கால் சந்தி, — ஆவரங்கால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

249722

10-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
கலைமதி சனசமூக நிலையத்தை வாழ்த்துகின்றோம்

★

# ராஜா டிங்கர் வேக்ஸ்

★ கார்

★ லொறி

★ மினிபஸ்

போன்ற வாகனங்களை சிறந்தமுறையில்
வெல்டிங் பெயின்றிங் செய்துகொடுப்பவர்கள்

**நீர்வேலி ராஜா டிங்கர் வேக்ஸ்**
**பருத்தித்துறை வீதி, (சந்திக்கருகாமை)**
**நீர்வேலி.**

உரிமையாளர்: சி. தங்கராசா

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
PERIODICALS DIVISION
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பக்கத்திற்கு
அன்பளிப்புச் செய்து வாழ்த்துகிறது
பலசரக்கு வியாபாரத்தில் பெயர்பெற்ற
ஸ்தாபனமான

சிறுப்பிட்டி

# முருகன் ஸ்ரோர்ஸ்

★ வாழைக்குலை மொத்த வியாபாரத்தில்
நன்மதிப்பை பெற்றவர்கள்

★ உணவு முத்திரைப் பொருட்கள்
விநியோகத்திற்கு அங்கீகாரம் பெற்றவர்கள்

★ சகலவிதமான சாய்ப்புச் சாமான்கள்
விற்பனை செய்பவர்கள்

முருகன் ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை வீதி
சிறுப்பிட்டி; — நீர்வேலி.

உரிமையாளர்: பொ. கனகநாயகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.